Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් டிச. 01-07, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 488

## பிரபாவின் மாவீரர் உரை

## ஒஸ்லோ மாநாடு கிடைத்ததும் கிடைக்காததும்

## புத்தளம் வன்முறைகள்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## ஆன்மீக சாதனை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது நம் ஒளைப்பிராட்டியின் அருள்வாக்கு. இந்த உடம்பு எடுத்த பயனை நாம் இம்மையிலே எய்துவதற்கு வாய்ப்பு அளிப்பது மனிதப் பிறப்பு ஒன்றேயாகும். அலையும் மனதை ஒரு நிலைப்படுத்தி உதவுவது இறைவனைப் பற்றிய தியானமாகும். தியானம் செய்வதற்கு உபகாரமாயிருப்பது மந்திரம். "நினைப்பவரைக் காப்பது" மந்திரம் என்றும் பெரியோர் விளக்கம் கூறுவர். நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழியே மந்திரம் ஆகும். நிறைமொழி என்பது பயனைத் தவறாது தரும் வாக்கு. அத்தகைய நிறைமொழியைச் சொல்ல வல்லவர் தவத்தால் மனம் தூயரான சான்றோரும் அருளாளர்களுமாவர். அத்தகையோர் ஆணையிட்டுக் கூறிய மந்திரங்களுக்கு அளப்பரிய சக்தி உண்டு. நாம் ஒரு மந்திரத்தை வாய்க்குள்ளே மீண்டும் மீண்டும் உச்சரிக்க, மனம் முதலில் அந்த ஓசையில் இலயித்து, பின்னர் அந்த ஓசை வடிவான இறைவனிடம் ஒருங்கிவிடுகின்றது. இவ்வாறு மனம் ஒடுங்கும்போது நாம் இறைவனைப் புறத்தே தேடி அலைய வேண்டியதில்லை. எம் உள்ளத்திலே இறைவன் இருப்பதை உணர்வோம்.

ரட்ணசபாபதி ரமேஷ், இம்புல்பிட்டியூர்.



## விழித்திருங்கள்

கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எல்லோரும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் அநேகர் வந்து இயேசுவின் நாமத்தைக் கொண்டு தாங்களே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். இதனால் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுகிறோம். ஜனங்களுக்கு விரோதமாக ஜனங்கள் கிளம்புகின்றார்கள். அரசாங்கத்துக்கு விரோதமாக இன்னுமொரு அரசாங்கம் எழுகிறது. பஞ்சம், பூமியதிர்ச்சி, வெள்ளம், வறட்சி உண்டாகிறது. இவைகள் எல்லாம் எங்களுக்கு வேதனையை தரும் காரியங்கள். ஆனாலும், நாங்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏன் என்றால் ஜீவனுள்ள தேவன் இயேசுவின் நாமத்தில் எங்களைத் துன்புறுத்துவார்கள். தேசத்தை ஆளுகை செய்பவர்கள் முன் நிறுத்துவார்கள். ஆனாலும் திடம் கொண்டு விழிப்போடும், பலத்தோடும் சகல மக்களுக்கும் சுவிஷேசத்தை அறிவிக்க வேண்டும். இதன் நிமித்தம் எங்களை எந்த இடத்தில் கொண்டு போய் நிறுத்தினாலும் அந்த இடத்தில் தேவ ஆவியானவர் வந்து எங்களோடு பேசுவார். எந்த ஆபத்தும் வந்து எங்கள் மீது விழாமல் பாதுகாப்பார். நாம் இயேசுவுக்குள் உறுதியாக இருப்பவர்களும் எப்போதும் விழித்திருக்கிறவர்களும், எப்போதும் இயேசுவுக்குள் நிலைத்திருப்பார்கள்.

எஸ். சங்கீதா.


## நோன்பின் சிறப்பு

புனித ரமழான் மாதத்தை அடைந்திருக்கும் நாம் கூடுதலான அளவு குர் ஆன் ஓதுவதற்கு நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த மாதத்தில் அருள்மறை இறக்கி வைக்கப்பட்டது. அதனைக் கௌரவிக்கும் விதத்தில் அல்லாஹுவின் வேதத்தை கூடுதலான அளவு ஓதுமாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள்.

இம் மாதத்தில் ஓதப்படும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஏனைய காலங்களை விடப் பலமடங்கு நன்மைகள் கிடைக்கின்றன. சஹாபாக்கள், ரமழான் மாதத்தில் அல் குரானைப் பலமுறை ஓதி முடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். எம்மால் பல தடவை குர் ஆனை ஓதி முடிக்க இயலாவிட்டாலும் சாத்தியமான அளவு நாம் அதனைச் செய்ய வேண்டும். நன்மைகளைப் போதியளவு அறுவடை செய்து கொள்ள, இம் மாதத்தில் அல் குர் ஆனை ஓதுவது சிறந்த வழியாகும்.

முஹமட் அல்தாஃப், நிககொல்லை.

## கவிதைப் போட்டி இல. 485



பரிசுக்குரிய கவிதை

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### தேய் பிறைகள்

கறுத்த பூமி கண்டு
செறித்த எண்ணம் கொண்டு
மறுக்க முடியா தருணம் ஏந்தும்
பொறுக்க முடியா அவலம் ரெண்டு...

லைலா அக்ஷியா அக்ரம், குருநாகல்.

### ஆசீர்வாதம்

அரிச்சுவடி ஏந்தும் கையில்
ஆயுதத்தை ஏந்தும் குழந்தைகளே...
உயிரைப் பறித்து உலகை அழிக்கும்
உரமாக இல்லாமல்,
உரிமையோடு உடமை சேர்த்து
தாய் நாட்டைக் காக்க
துணிந்து வெல்க!

நா. நிரோஸ், அக்கரைப்பற்று-07.

### வீரம்!

புறமுதுகிற் தாக்காதே
எனக்கூறி வேலெறிந்துக்
களமனுப்பியது அன்று.
மறைந்திருந்து தலையைப் பிழவென
குழந்தைக்கும் துப்பாக்கி
ஈந்தனுப்புவது இன்று!

ஆ. சந்தியாகோ-கண்டி

### இனியும் உறங்கின்....

உற்றாரூரார்
பெற்றார் மற்றார்
போயினர்... போயினர்.
காத்திடக் காவலன்
இன்றியே மாண்டனர்
இனியு முறங்கின்
இனிமை யினியொரு
இளசுகளுணர்ந்ததோ...?

சி. மதியழகன், அல்வாய் வடமேற்கு.

### நாளைய எதிர்பார்ப்பு

தோழி,
நாளைய பொழுது-எமது
கையில் என்பவர்கள்
இன்றே கொடுத்துவிட்டனர்
இயந்திரங்களை எம்மிடம்
நாம் நம்மை அழிப்பதா?-இல்லை
நாளை என்பதை ஒழிப்பதா'

மதிவாணி யேசுதாசன், யாழ்ப்பாணம்.

### திடசங்கற்பம்

துப்பாக்கி ஏந்தினால்தான்
நம் நேரத்தில்
வானம்-
விடியலினை
விதைக்குமென்றிருந்தால்...
தப்பில்லை, இந்தா பிடி!
நாளைய பொழுதுகள்
நமது உதிரங்களினால்
கழுவப்பட்டு, புதிய
சுதந்திர புண்ணிய பூமியாய்
அவதரிக்கட்டும்!!

தாராபுரம் நிலாம், பாலாவி.

### போர்

என் தந்தை இறையடியில்
உன் தந்தை மரணப்பிடியில்
புறப்படு!
எம் போன்ற சிறுவர்களை
அநாதையாக்க!


எஸ். எம். ரிஸாம், நாவலப்பிட்டி.

### நிழலல்ல நிஜம்

"துப்பாக்கியை தூர எறிந்துவிடு- இது
அப்பாவியையும் அழித்து விடும்-என்
சொல்லதை நம்பாவிட்டால்
கல்லறைகள் பல கூறும் இதன்
கருணையற்ற செய்கையை"

பழனிவேல் குமாரி, சலங்கண்டி.

## கவிதைப் போட்டி இல.488



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.12.2002

கவிதைப் போட்டி இல.488
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### விதையாகல்

விதையொன்றில்- இவள்
விதிமுடிய
புதுக் கதையொன்று
விதையாகின்றது
இனக்கலவரம் என்ற
பெயராலே.

ஐ. ச'மிலா, கம்பளை.

### சமாதானம்

யார் நட்ட வித்து
படர்ந்து வளர்கிறது.
நிகழ்காலம் தான்
இப்படி என்றால்?
எதிர்காலமும் இதே முறையா?
மாற்றி விடு உன் குறியை
பறக்க வீடு வெண்புறாவை.

செ. கி. ரஞ்சன், வட்டவளை.

### எது?

அடுத்த சந்ததியே
போருக்கு
மந்திரம் ஓத- இன்றைய
தந்திர மனிதர்கள்
தடுப்பாரோ- இல்லை
தடுப்பார் போல்
நடிப்பாரோ?

திருமதி- ஜயாத்துரை-
பண்டத்தரிப்பு.

### விளம்பரம்

இராணுவ உடையுடன்- உயிர்
விடைபெறும் காட்சி
ஆயிரம் தடைகளிலும் - பாலகரை
படைகளில் அனுப்பாதீர்
நடைபெறா நிகழ்வொன்று
கடைவீதியில் விளம்பரமாம்.

சதீஸ்குமார் சகிலா, அரியாலை.

# உங்கள் பக்கம்

## இது தான் ஜனநாயகமா?

யாழ்ப்பாணத்திலும் நெடுந்தீவிலும் இருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் வெளியேற வேண்டுமெனக் கோரிப் பொதுமக்கள் என்ற போர்வையில் புலிகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், புலிகள் இயக்கம் மாற்றுக்கருத்துக்களுக்கு இடம்கொடுக்காத தமது வழமையான போக்கிலிருந்து சிறிதளவும் தங்களை மாற்றிக்கொள்ளவில்லையென்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

ஈ.பி.டி.பி.யினருக்கு மக்கள் ஆதரவு இல்லையெனக் கூறி அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமாயின் அதற்கு ஜனநாயக மரபுவழியின்படி தேர்தலே சிறந்த மார்க்கம்.

அதுவல்லாமல், பொதுமக்கள் எனக் கூறிச் சில நூறுபேரைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தி ஒரு அரசியல் கட்சியை ஒரிடத்திலிருந்து வெளியேற்ற முயற்சிப்பதென்பது சர்வாதிகாரத்தின் மற்றொரு முகம். புலிகள் இயக்கம் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் கூட ஏனைய அரசியல் கட்சிகளுக்கு செயற்பட அனுமதி வழங்கப்படும் என்று கூறி வருகிறது.

அவ்வாறிருக்க ஈ.பி.டி.பி பல வருடகாலமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் தீவுப்பகுதியிலிருந்து அவர்களை வெளியேற்ற முயற்சிப்பதானது புலிகளின் முன்னைய அறிக்கைகளை கேலிக்குள்ளாக்குகிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஈ.பி.டி.பி யாழ் குடாநாட்டில் சுமார் 57,000 வாக்குகளைப் பெற்றது. அவ்வாறிருக்க குடாநாடு முழுவதிலுமிருந்து அந்தக் கட்சியை வெளியேற வேண்டுமெனக் கோருவது எந்த வகை ஜனநாயகத்தில் சேருமென கேள்வி எழுப்பலாம்.

தவிரவும் நெடுந்தீவிலுள்ள பிரதேச சபை ஈ.பி.டி.பி.யின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் நிர்வாக அமைப்பு. அதன் சேவைகளை மக்களுக்குக் கிடைக்கவிடாமல் தடுப்பது அடிப்படையில் ஜனநாயகத்தைப் புறக்கணிக்கும் செயல்தான்.

ஒரு பிரதேச சபையைக்கூடத் தமது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் நிர்வகிக்கக் கூடாது எனக் கருதும் புலிகளின் பன்முகத்தன்மையை இந்தச் சம்பவத்திலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். எதிர்காலத்தில் தமிழீழத்திலோ அல்லது புலிகளின் நிர்வாக அமைப்பிலோ ஜனநாயகம் எந்தளவு அர்த்தமுள்ளதாக இருக்கும் என்பதற்கு நெடுந்தீவு நிகழ்வுகள் சிறந்த உதாரணம்.

எஸ். குகன், காரைநகர்.

# வாசக[ர்] சாலை

தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு

முரசில் வரும் அனேகமான ஆக்கங்கள் சுவையாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கின்றன. இருந்தாலும் கவிதைப் போட்டி போன்று நீண்ட காலமாகப் பிரசுரமாகும் சில ஆக்கங்களுக்குப் பதிலாகப் புதிய விடயங்களைச் சேர்த்துக் கொண்டால் மேலும் சிறப்பாக இருக்கும். குறுக்கெழுத்துப்போட்டி ஒன்றை ஆரம்பிப்பீர்கள்.

ஆர். ரவீந்திரன், டிக்கோயா.

---

முத்தான முரசே
எட்டத்திற்கும் எத்தித்து
தித்திக்க வைக்கும் தினமுரசே
நீ சுமந்து வரும்
அத்தனை பக்கத்தையும்
பிரித்துப் படிக்கப், படிக்க
இதமாக உள்ளது.
என் இனிய தினமுரசே
நீ சுமந்து வரும் பாப்பா முரசில்
மாணவர்களது ஆக்கத்தையும்
சேர்த்துக் கொள்வாயென
மிக அன்புடன்
கேட்டுக் கொள்கின்றேன்.
நீ தொடர்ந்து வெளிவர
வாழ்த்துக்கள்.

ந. திலகராணி, ஹாலி-எல, செரண்டிப்.

---

தினமுரசு வாரமலரில் விளையாட்டுச் செய்திகள் குறைவாகவே வருகின்றன. ஸ்போட்ஸ் பக்கத்தை மேலும் அதிகரிக்க முடியாதா? அத்துடன் கிரிக்கெட் மட்டுமன்றி வேறு விளையாட்டுக்கள் தொடர்பான செய்திகளையும் பிரசுரிக்கவும். அண்மைக்காலமாக 20ஆம் பக்கத்தில் விளையாட்டு வீரர்களின் அறிமுகம் இடம் பெறுகிறது. வாழ்த்துக்கள்.

முகமட் அரபாத், புத்தளம்.

---

நான் தினமுரசு வாரமலரின் நீண்டநாள் வாசகன். முரசில் வரும் அனைத்து விடயங்களையும் தவறாமல் படிப்பேன். சிந்தியா பதில்கள், இலக்கிய நயம், தேன்கிண்ணம், சிறுகதைகள், கவிதைப்போட்டி என்பன என்னை மிகவும் கவர்ந்தவை.

பி. ஷோபனா, முல்லைத்தீவு.

---

தினமுரசின் மூச்சு
நான்
திங்கள் என்றால்
திங்கள்தான்
செவ்வாய் என்றால்
செவ்வாய்தான்
புதன் என்றால்
புதன்தான்
ஆனால், வியாழன்
என்றால் தினமுரசு
தான்



நான் அனுப்பிய படங்களை (2002.11-10) பிரசுரித்தமைக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும். அரசியல், இலக்கியநயம், சிந்தியா பதில்கள் இவை அனைத்தும் தினமுரசின் அடிச்சுவடுகள். அனைத்தும் பிரமாதம். இதனை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனால், சிறு குறை தினமுரசின் ஆரம்பத்தில் குறுக்கெழுத்துப் போட்டி ஒரு அம்சம் ஆகும். அது இடையில் நிறுத்தப்பட்டது. இன்றுவரை அது பிரசுரமாகவில்லை. மீண்டும் குறுக்கெழுத்துப் போட்டி இடம்பெறுமோ. இடம்பெறுமா பத்திரிகை ஆசிரியரே? என் போன்றோரின் மிகவும் பிடித்த அம்சம். அனைவரின் இதயத்திலும் இடம்பெற்று உன் செய்திச் சேவைப் பணி தொடரட்டும். இதற்கு எங்களது பங்களிப்பு நிச்சயம் உண்டு.

நன்றி.

கே. எஸ். அப்துல் றசூல், நிந்தவூர்-16.

---

முரசின் அரசியல் ஆய்வுகள் சூடு, சுவை, சுவாரஸ்யத்துடன் நடு நிலையாகவும் இருக்கின்றன. ஒரு பக்கச் சார்பாக கோரஸ் பாடும் தமிழ்ப் பத்திரிகை உலகில் முரசின் இன்றைய பணி பெரிதும் பாராட்டத் தக்கது.

எஸ். விஜயதீபன், தெனியாய.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த. பெ. இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# ஜனாதிபதி புஷ்ஷின் விசேட பணிப்புரையின் கீழ்

# அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு அதிநவீன போர் விமானம்

**இ**லங்கையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் விஸ்தரித்து உறுதி செய்யும் வகையில், இலங்கை விமானப்படைக்கு அமெரிக்காவிடமிருந்து அதிநவீன விமானமொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஹைசர் பீட்ஜ் கிறாஃவ்ட் விமானமொன்றை இலங்கை கொள்வனவு செய்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வழங்கிய விசேட அனுமதியின் பேரிலேயே அமெரிக்க இராணுவ தொழிற்துறை நிறுவனமொன்றினால் இந்த விமானம் இலங்கைக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெறுமதி 18 கோடி ரூபாய்களாகும்.

அமெரிக்க அரசாங்கத்தின் விசேட அனுமதியின்றி இவ் விமானங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இவ்வகை விமானங்கள் பிரிட்டனுக்கும், இஸ்ரேலுக்கும் மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த விமானம் தற்போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளின் பலன் சகல

## சமூகங்களுக்கும் கிட்டவேண்டும்–பிரதமர்

**வ**டக்கு -கிழக்கு போர் அழிவுகளின் தேவைகளை மட்டும் சந்திப்பது அரசின் சவாலல்ல. போரால் நாட்டின் முழுப் பொருளாதாரத்திற்குமேற்பட்ட சேதங்களை மீளமைப்பதே அரசாங்கம் எதிர்நோக்கும் சவாலாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

இலங்கை மக்களில் ஒரு பரம்பரையை ஆட்டிப்படைத்த பீதி ஒரு கடந்த கால நிகழ்வாகிவிட்டது. நாம் எமது மக்களைக் கைவிட மாட்டோம். இது எமது உறுதிமொழி. எவ்வாறெனினும் இரண்டு தசாப்த கால யுத்தம் பெரும் சவால்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ளச் சர்வதேச சமூகத்தின் பேராதரவு தேவையென்றும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## சமாதானத்துக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறோம்

## அரசியல் தீர்வு காணவே விரும்புகிறோம்-பாலசிங்கம்

**இ**ன மோதலின் சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்கும் கடினமான பணியில் நாம் தொடர்ந்து ஈடுபட்டுள்ள வேளையில் வடக்கு-கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் மீள்குடியமர்வுக்கும், புனர்வாழ்வுக்கும் குறிப்பிடத் தக்க நிதியுதவி வழங்குமாறு சர்வதேச அரசுகளை நாம் கோருகிறோம்.

சமாதான நடைமுறையின் நன்மைகளை உணரக் கூடியதாக இருப்பது போல இந்த உதவி எமது மக்களைத் தாமதமின்றி வந்தடைய வேண்டுமென்று புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே மாநாட்டில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

சமரசப் பேச்சுக்களின் நெருக்கடியான இக் கட்டத்தில் உறுதியான சர்வதேச உதவி கிடைப்பது சமாதான நடைமுறைக்குக் கிடைக்கும் சர்வதேச ஆதரவின் பிரதிபலிப்பேயாகும். இன நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் எதிர்க்கும் நாசகார சக்திகளின் வாயை அடக்க சர்வதேச ஆதரவு இக்கட்டத்தில் மிக முக்கியமானதாகும் எனவும் பாலசிங்கம் கூறுகிறார்.

சமாதானத்துக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறோம். பேச்சு மூலம் அரசியல் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவே விரும்புகிறோம். புரிந்துணர்வு உடன்படிக்கையில் உறுதியளித்துள்ளபடி நாங்கள் போருக்குத் திரும்பமாட்டோம். வன்செயல்களில் ஈடுபடமாட்டோம். தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும், நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பு அளிக்கப்பட்டு, பிரச்சனைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காண முடியுமானால் போர் எதற்கு? வன்செயல் எதற்கு?

பெருமைக்குரிய இந்த மாநாட்டில் இலங்கையின் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களின் சார்பில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருப்பது மதிப்புக்கும், கௌரவத்துக்கும் உரியதாகும். இம் மாநாட்டைக் கூட்டியதற்காக நோர்வே அரசுக்கு நான் மனப்பூர்வமாக நன்றி கூறுகின்றேன். பிணக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர, அத்தியாவசிய, மனிதாபிமானத் தேவைகள் குறித்து உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது.

## மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில்

## பிரபாகரனின் மாவீரர் தின உரை

**பு**லிகளின் தலைவரின் 48 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டங்களின் பின்னர் முற்றிலும் மாறுபட்ட அரசியல் சூழ்நிலையொன்றில் அவரினால் ஆற்றப்பட்ட மாவீரர் தின உரை உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச சமூகத்தினராலும் மிகுந்த கவனத்துடன் எதிர்பார்க்கப்பட்டது.

பிரபாகரன் மீது விதிக்கப்பட்டிருக்கும் 200 ஆண்டுகால சிறைத் தண்டனை, தற்போதைய சமாதான முயற்சிகளின் போக்கு, நோர்வே உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாமல் போனமை உள்ளிட்ட பல்வேறுபட்ட நிலைவரங்களின் பின்னணியில் பிரபாகரனின் உரை நிகழ்த்தப்படவிருப்பதால், அதனைச் சர்வதேச சமூகமும் உள்நாட்டு அரசியல், பொது அமைப்புக்களும் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தன.

## வடக்குக் கிழக்கில் மாவீரர் தின நிகழ்வுகள்

## உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிப்பு

**சு**மார் இரண்டு தசாப்தகால போரில் புலிகள் இயக்கத்தின் சார்பில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் மாவீரர் தினம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இம்முறை முதல் தடவையாக மாவீரர் தின நிகழ்வுகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் நடைபெற்றுள்ளன. திருகோணமலை இந்து கலாசார நிலையத்தில் போராட்டத்தின் போது கொல்லப்பட்ட சுமார் 1500 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த புலி உறுப்புனர்களின் புகைப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு பிரதேச மக்ககள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். இது தவிர வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீதிகளில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களில் கொடிகள் கட்டப்பட்டு தோரணங்கள் அமைக்கப்பட்டள்ளன.

சம்பூர், தம்பலகாமம், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் புலிகளின் பிரதேச தலைவர்கள் கலந்து கொள்ளும் முக்கிய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் 27ம் திகதி புலிகளின் தலைவர் புரபாகரனின் உரையுடன் முடிவடையும்.

## ஆமிட்டேஜ் புலிகளுக்கு விதித்த

## 4 நிபந்தனைகள்

**நோ**ர்வே உதவி வழங்கும் மாநாட்டின் போது அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட அந் நாட்டின் பிரதி இராஜாங்க செயலாளர் றிச்சட் ஆமிட்டேஜ் விடுதலைப் புலிகளிடம் 4 முக்கிய நிபந்தனைகளை முன்வைத்தார்.

- ★ தனிநாட்டுக் கோரிக்கையைத் துறப்பதாகப் புலிகள் பிரகடனப்படுத்த வேண்டும்.
- ★ பயங்கரவாதத்தையும், வன்முறையையும் முற்றாகக் கைவிடுவதாகப் புலிகள் அறிவிக்க வேண்டும்.
- ★ இலங்கை முழுவதற்கும் கொழும்பு அரசாங்கத்துக்கு உள்ள இறையாண்மையை ஏற்று நடக்க வேண்டும்.
- ★ இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, இறையாண்மைக்குட்பட்டு ஒரு தீர்வை ஏற்பதற்குத் தயாராக இருப்பதாக அறிவிக்க வேண்டும்.

இந் நான்கு நிபந்தனைகளையும் வலியுறுத்திக் கூறிய றிச்சட் ஆமிட்டேஜ் புலிகள் மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் மதித்து நடக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

**பாலசிங்கம் நிராகரிப்பு:-**

வன்முறைகளை முற்றாகத் துறக்க வேண்டுமென்று ஆமிட்டேஜ் விதித்த நிபந்தனையை அன்ரன் பாலசிங்கம் நிராகரித்தார்.

அது முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என மாநாட்டின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

## புலிகளுடன் ஒரே மேசையில் அமரமாட்டோம்

## என்று ஜனாதிபதிக்கு அமெரிக்கா எழுத்து மூல உத்தரவாதம்

**நோ**ர்வே உதவி வழங்கும் மாநாட்டின் போது புலிகளுடன் ஒரு மேசையில் சமமாக அமெரிக்கப் பிரதிநிதிகள் அமர மாட்டார்கள் என்று மாநாடு ஆரம்பமாவதற்குச் சில மணி நேரம் முன்னதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு எழுத்து மூல உத்தரவாதத்தை வழங்கியிருக்கிறது.

கொழும்பிலுள்ள, அமெரிக்கத் தூதரகம் 23ஆம் திகதி மாலை ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில், அமெரிக்க அரசாங்கத்தினால் பயங்கரவாதிகளெனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள அமைப்பொன்றின் பிரதிநிதிகளுடன் அந்நாட்டு இராஜதந்திரிகள் நேரடியான கலந்துரையாடல்களில் ஈடுபடுவது சட்டவிரோதமென்பதால், நோர்வே மாநாட்டில் கலந்து கொள்ளும் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் றிச்சட் ஆமிட்டேஜ், அன்ரன் பாலசிங்கத்துடன் ஒன்றாக அமரமாட்டார் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் மாநாட்டின் ஆரம்பச் சுற்றில் கலந்துகொண்ட றிச்சட் ஆமிட்டேஜ் வட்டமேசை கலந்துரையாடலில் பங்குகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## படகுச்சேவை ஆரம்பிக்குமாறு

## பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

**யா**ழ்.குடாநாட்டின் தீவுப் பகுதியான நெடுந்தீவிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் வெளியேற வேண்டுமென்று கோரி புலிகளால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு ஒரு வாரம் கழிவதற்கிடையில் புலிகளின் அலுவலகங்களைச் சுற்றி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஈ.பி.டி.பி.யினரை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது நெடுந்தீவுக்கும், குறிகட்டுவானுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து கடந்த ஒரு வார காலமாகத் தடைப்பட்டிருந்தது.

இதனால் நெடுந்தீவின் இயல்பு வாழ்க்கை மோசமாகப் பாதிக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் புலிகளின் அலுவலகத்தைச் சுற்றி வளைத்து படகுச் சேவையை நடத்த இடையூறு செய்வதை தவிர்க் குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

## புலிகளின் நீதிமன்றங்களை

## ஏற்கமுடியாதென பாராளுமன்றத்தில் அறிவிப்பு

**கி**ழக்கு மாகாணத்தில் புலிகளால் அமைக்கப்பட்டு வரும் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்று நீதி அமைச்சர் வி.ஜே.மு. லொக்கு பண்டார செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் அமைத்து வரும் நீதிமன்றங்களை அரசாங்கம் ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்த அவர் அவை சட்ட விரோதமானவை எனக் குறிப்பிட்டார். இதேவேளை, கிழக்கில் எந்த நீதிமன்றத்தின் உத்தரவைப் பின்பற்றுவது என்று தெரியாது முஸ்லிம்கள் குழப்பத்திற்குள்ளாகியிருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நீதிமன்றங்களின் உத்தரவுகளை ஏற்று நடப்பதா? அல்லது புலிகளின் நீதிமன்றங்களால் வழங்கப்படும் ஆணைகளுக்கு கட்டுப்படுவதா? என்று கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் குழப்பம் நிலவுகிறது என அவர் கூறினார்.

# முரசம்

## பன்மைத்துவம், ஜனநாயகம், மக்களின் அடிப்படைச் சுதந்திரம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**இனப்பிரச்சினையின் விளைவாக யுத்தத்தால் சிதைவுற்றிருந்த நாட்டில் இப்போது சமாதானத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது ஒரு வகையில் மகிழ்ச்சியைத் தந்தாலும், அந்தச் சமாதானம் என்ன வடிவத்தைக் கொண்டதாக அமையப்போகிறதென்ற ஐயப்பாடுகளும் தலைதூக்கவே செய்திருக்கிறது.**

**சமாதான முயற்சிகளின் மத்தியில் நிகழ்ந்தேறும் பல அசம்பாவிதங்கள் இந்த ஐயப்பாட்டுக்கு நியாயம் கற்பிப்பனவாக அமைந்துள்ளன.**

**சில மாதங்களுக்கு முன் கிழக்கில் வெடித்த அசம்பாவிதங்களுக்குப் பின் சிறிது கால இடைவெளி விட்டு இப்போது வடக்கில் அமைதியின்மை தோன்றியுள்ளது. இந் நிலையில் இச் சமாதானம் என்பது வெறுமனே யுத்தமற்ற சூழ்நிலையென்பதாகவும், வெறுமனே யுத்தத்தின் தரப்பினர்கள் மட்டும் சம்பந்தப்பட்டதாகவும் இல்லாமல், சகல தரப்பினரையும் கருத்திற்கொண்டதாக, சமாதானத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்து, அதை மதித்து ஒழுகுவதாக அமைய வேண்டுமென்பதையே இப்போதைய நிலைமைகள் உணர்த்துகின்றன.**

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ மாநாட்டிலும், பன்மைத்துவத் தன்மை, மனித உரிமைகள் பேணப்பட வேண்டிய முக்கியத்துவம் பற்றிப் பங்கேற்ற நாடுகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இங்கு அவை ஏதோ ஒரு விதத்தில் குறைபாடாக அமைந்திருப்பதை இந் நாடுகள் உணர்ந்திருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. எனவே எமக்கு இன்று தேவைப்படும் சமாதானம் பன்மைத்துவத்தையும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவதாக அமைய வேண்டுமேயன்றி, சமாதானம் என்ற பெயரில் மாற்றுக் கருத்துக்களையும், மாற்றுத் தரப்புகளது இருப்பையும், செயற்பாடுகளையும் நிராகரிப்பவையாக அமையலாகாது. மக்களென்ற பெயரில் இத்தகைய நிராகரிப்புகள் வெளிக்காட்டப்படுமானாலும் அவற்றை ஜனநாயகவாதிகள் அங்கீகரிக்க முடியாது. மக்கள்கூட அவ்வாறு தவறாக வழிநடத்தப் படுவார்களானால் அதைத் தவறென எடுத்துரைப்பதே ஜனநாயக வாதிகளின் கடமையாக இருக்க வேண்டுமேயன்றி, இத் தவறான அழுத்தத்துக்குத் தாமும் அடிபணிந்து போவதாக இருக்கக் கூடாது.**

**இந் நாட்டில், ஒரு முறை அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மறுமுறை படுதோல்வியடைந்து, அடுத்த முறை பொதுஜன ஐக்கிய முன்னணியாக ஆட்சியைப் பிடித்தது. தற்போது மீண்டும் தோல்வியுற்றுள்ளது.**

**இதுபோலவே ஐக்கிய தேசியக் கட்சியும் தோல்வி வெற்றிகளை மாறி மாறிச் சந்தித்தது. ஆனாலும் எந்தக் கட்சியும் மக்களின் பெயரால் அரசியலைவிட்டுப் பலவந்தமாகத் துரத்தப்படவில்லை. தோல்வி கண்ட கட்சிகளும் அரசியல் நடத்தச் சுதந்திரம் இருந்தது. தமிழ் மக்களின் சுதந்திரத்தை வலியுறுத்துகின்ற தமிழ் அரசியலில் இந்த அடிப்படை அரசியல் சுதந்திரம் மறுதலிக்கப்படுமானால் அது சுதந்திரத்தின் அர்த்தத்தையே கேள்விக்குள்ளாக்கிவிடும்.**

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஒஸ்லோ மாநாடு கிடைத்ததும் கிடைக்காததும்

நரன்

பாரிய எதிர்பார்ப்போடு காத்திருந்த ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடந்து முடிந்துள்ளது.

அரசாங்கம் ஒருபுறமும், புலிகள் மறுபுறமும் வெவ்வேறுவிதப்பட்ட எதிர்பார்ப்புகளையும் நோக்கங்களையும் கொண்டிருந்தாலும் மிகச் சுலபமாக இங்கு எந்த அதிசயத்தையும் நிகழ்த்திவிட முடியாது என்பதைத்தான் இந்த மாநாடு நிரூபித்திருக்கிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை உலக நாடுகள் மத்தியில் தனது சமாதான முன்னெடுப்புகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அடையாளமாக இம்மாநாட்டைச் சித்திரிப்பது ஒரு நோக்கமாக இருந்தாலும் அதிகூடிய அளவு வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெறுவதுதான். அதன் உள்ளார்ந்த அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது.

இலங்கை அரசாங்கத்திற்கான உடனடி நிதித் தேவையோ மிகப் பாரியளவானதாக இருக்கிறது.

இந் நிதி நெருக்கடி காரணமாக அரசாங்கத்தால் அத்தியாவசியமான பாரிய செயற்திட்டங்கள் எதையும் மேற்கொள்ள முடியாமலும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாமலும், சம்பள அதிகரிப்புகளை மேற்கொள்ள முடியாமலும், இழப்புகளுக்கான நிவாரணங்களைக்கூட வழங்க முடியாமலும், ஒரு தேக்க நிலையில் இருந்து வருகிறது.

இந் நிலையில் அரசாங்கம் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கான அறுவடையாக இந்த ஒஸ்லோ மாநாட்டின் நிதியுதவிகளை அது பெரிதும் நம்பியிருந்தது.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு உலக நாடுகள் மத்தியில் கிடைத்த ஆதரவையும், ஊக்குவிப்பையும் மட்டும் எடைபோட்டு இம் மாநாட்டில்




பாரியளவிலான நிதியுதவி கிடைக்குமென அது எதிர்வு கூறி வந்தது.

இம் மாநாட்டில் முன்னரைப்போல் அல்லாமல் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர் ஆமிட்ரேஜ் முதற்கொண்டு பிரித்தானியா, நோர்வே, ஜப்பான் போன்ற முன்னணி நாடுகளின் அமைச்சர்களும், அதிஉயர் அரசுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டமையானது, அரசாங்கத்திற்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

சுமார் 600-700 மில்லியன் டொலர்கள் அதாவது சுமார் 7000 கோடி ரூபாய் வரை நிதியுதவி கிடைக்குமென இலங்கை அரசுப் பிரதிநிதிகள் ஆரம்பத்தில் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

பின்னர் சற்று சந்தேகங்கள் தலைதூக்கிய நிலையில் 400 மில்லியன் டொலர்கள் அதாவது சுமார் 4000கோடி ரூபா வரையாவது நிதியுதவிகள் கிடைக்கலாமென அண்மையில் அரசாங்கம் பாராளுமன்றத்திலும், நம்பிக்கை தெரிவித்திருந்தது.

ஆனால், இப்போது கிடைத்திருப்பதோ வெறும் 60 முதல் 70 மில்லியன் டொலர்கள்தான்- அதாவது 600 முதல் 700 கோடி ரூபாய்கள்தான்.

அதுவும் இவற்றில் கணிசமான தொகை நேரடியாகவன்றி அந் நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமும், யு.என்.எச்.சி.ஆர். போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் மூலமும்தான் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுவும், வழங்கப்படும் நிதி குறித்த சரியான கணக்காய்வுகள் உறுதிப்படுத்தப்படுவது முதல் பல்வேறு நிபந்தனைகளுடன்தான் இந் நிதியுதவி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளன.

எனவே அரசாங்கத்தின் நிலை சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டிக்கொள்ள வேண்டியதாகத்தான் ஆகியுள்ளது.

சமாதான முயற்சியில் இறங்கியதற்காக மட்டுமே இலங்கைக்குத் தேவையான முழு நிதியுதவிகளையும் உலகநாடுகள் தர முன்வந்துவிடுமென நம்பியது அளவுக்கதிகமான எதிர்பார்ப்பாகும்.

இவ் வருடத்தின் ஆரம்பத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின், இலங்கையில் நிகழ்ந்த ஓர் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்திலும், சமாதானம் நிலை நிறுத்தப்பட்டால் மட்டுமே பாரியளவு நிதியுதவிகளை அரசாங்கம் எதிர்பார்க்க முடியுமெனவும், அத்துடன் கடந்தகால நிதியுதவிகளுக்கு என்ன நடந்தது என்பது, தமக்குத் தெளிவாகத் தெரிய வேண்டுமெனவும் அந் நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தார்கள்.

இப்போது நடைபெற்ற ஒஸ்லோ மாநாடும், அதே கருத்தையே பிரதிபலிப்பதாகத் தெரிகிறது.

அதாவது திருமணத்திற்கான சோடனைகளை மட்டும் செய்துவிட்டு, மொய் வழங்கும்படி கேட்டால், நம்புவதற்கில்லை, மெய்யாகவே திருமணத்தை நடத்திவிட்டு வாருங்கள் என்று கூறுவது போலவே இது அமைந்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளைப் பொறுத்தவரை தாம் வழங்கும் நிதி எப்படிச் செலவு செய்யப்படுகின்றது, அதற்கான கணக்கு வழக்குகள் என்ன, என்ற விடயங்கள் ஒருபுறமிருக்க, தாம் வழங்குவதால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் ஒரு யுத்தத்தில் அநியாயமாக அழிவுற்றுப் போய்விடக் கூடாது என்பதில் அக்கறையாயுள்ளன.

அதனால்தான் நிரந்தரமாக யுத்தத்திற்கு முடிவுகட்டும் ஒரு சமாதானத்திற்கான உத்தரவாதத்தை அவை இங்கு எதிர்பார்க்கின்றன.

அரசாங்கத்திற்கு எதிர்பார்த்தளவு நிதியுதவி கிடைக்காத ஏமாற்றத்திற்கு மத்தியில் அதன் சமாதான முன்னெடுப்புகளுக்கு இவ்வுதவி வழங்கும் நாடுகள் தெரிவித்த பாராட்டுக்கள் சற்று ஆறுதல் தருவதாக அமைந்துள்ளன.

ஆனால், இச் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளுக்கான சோதனைகளை இனித்தான் அது கூடுதலானளவு எதிர்நோக்க நேரிடும்.

இம் மாநாட்டின் முடிவில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க சமாதான முயற்சிகள் பின்வாங்கப்படமாட்டாது எனக் கூறியதற்கும் இதுகுறித்து எழுந்த சந்தேகங்களே பின்னணியாகும்.

புலிகளைப் பொறுத்தவரையில், இவ் ஒஸ்லோ மாநாடு இரண்டு முக்கிய நோக்கங்களோடு எதிர்நோக்கப்பட்டது.

கடந்த தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் போது புலிகள் தலைவர் பிரபாகரன் மீதான 200 வருட சிறைத்தண்டனை இலங்கை நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட அசௌகரியமான சூழ்நிலைக்கு மத்தியிலும், அப் பேச்சுவார்த்தையில் புலிகள் தொடர்ந்து ஈடுபட்டமைக்கு ஒஸ்லோப் பேச்சுவார்த்தையில் தாம் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கமும் ஒரு பிரதான காரணமாகும்.

அவர்களைப் பொறுத்தவரை, தமக்கு சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் தேடும் ஒரு பிரதான களமாக, இவ் ஒஸ்லோ மாநாட்டைப் பயன்படுத்த முனைந்தனர்.

மற்றது வடக்கு-கிழக்கிற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளின் பேரில் பெருந்தொகையான வெளிநாட்டு நிதியுதவிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்தையும் அவர்கள் கொண்டிருந்தனர்.

அதனால்தான் கடந்த தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில், இவ்வெளிநாட்டு நிதியுதவிகள் நேரடியாக அரசாங்கத்தின் திறைசேரிக்குச் செல்லாது, வெளிநாடொன்றில் வைக்கப்பட்டு, தாமும் அரசாங்கமும் சேர்ந்த கூட்டுக் குழு ஒன்றால் அடையாளம் காணப்படும் திட்டங்களுக்கு நேரடியாக வழங்கப்படவேண்டும் என்ற இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தார்கள்.

ஏற்கெனவே, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, மலேசியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் புலிகள் இயக்கம் ஓர் பயங்கரவாத இயக்கமாக தடைசெய்யபட்டு அதன் நிதிகள் முடக்கப்பட்டுள்ள நிலையில், இம்மாநாட்டில், இந்த நாடுகள் மத்தியில், கலந்து கொண்டு இத் தடைகளிலிருந்து விடுபடும் ஒரு இராஜதந்திரமாகவும் அமையுமெனக் கருதியும் இந்த ஒஸ்லோ மாநாட்டை அவர்கள் பயன்படுத்த விழைந்தார்கள்.

எனினும், தம்மால் தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றுடன் வேறொரு நாட்டில் பேச முடியாது என்ற நிலைப்பாட்டில், இம்மாநாட்டில் கலந்துகொள்ள முடியாதென இந்தியா திட்டவட்டமாக அறிவித்திருந்தது.

இந்தியாவை இதில் கலந்துகொள்ள வைக்க இலங்கை அரசாங்கமும், நோர்வே அரசாங்கமும் மேற்கொண்ட சகல முயற்சிகளும் பயனற்றுப் போயின.


நோர்வேயில் நடந்த இம் மாநாட்டின் ஆரம்ப விழாவில் இந்தியா சம்பிரதாயபூர்வமாகவாவது கலந்துகொள்ளுமென எதிர்பார்த்த போதும் இந்தியாவின் நோர்வேத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி, இதில் கலந்துகொள்ளவில்லை.

அமெரிக்கா இதில் கலந்துகொண்ட போதும், தாம் புலிகளுடனான கலந்துரையாடலில் அமரப்போவதில்லை என்ற உறுதிமொழியை எழுத்து மூலமாக இலங்கை ஜனாதிபதிக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது.

இந்தியாவின் அதிருப்திக்குள்ளாக நேரும் என்ற அவதானமும் இங்கு அமெரிக்காவின் நடத்தையில் தொனிப்பது உணர முடிந்தது.

அமெரிக்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிட்டேஜ், இம்மாநாட்டில் வலியுறுத்திய விடயங்கள் புலிகள் எதிர்பார்த்ததற்கு மாறாகக் கடுமையானதாகவே அமைந்திருந்தன.

புலிகள் பிரிவினைப் போராட்டத்தையும், பயங்கரவாதத்தையும், வன்முறையையும் கைவிட்டு விட்டதாக நிறுதிட்டமாக பகிரங்க அறிவிப்புச் செய்ய வேண்டுமென்றும், இலங்கை முழுவதற்குமான கொழும்பு அரசாங்



கத்தின் இறைமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மனித உரிமைகளை மதிக்க வேண்டுமென்றும் ஆமிட்டேஜ் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளார்.

இதேவேளை, தாம் பேச்சுவார்த்தைக் கூடாக சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்காக அர்ப்பணத்துடன் ஈடுபட்டுள்ளோம் எனப் புலிகளின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கம் இங்கும், இதற்கு முன்னரும், பலதடவைகள் கூறியிருந்தாலும், இக்கூற்று வன்முறையையும் பிரிவினையையும் கைவிட்டதற்கான ஒரு உறுதிமொழியாக அமையவில்லையென்றே அமெரிக்கா கருதுகிறது என்பதையே இது உணர்த்துகிறது.

இம் மாநாட்டின் பின்னான பத்திரிகைப் பேட்டியில் வன்முறையைக் கைவிடுவதற்கான அமெரிக்காவின் நிபந்தனையை பாலசிங்கம் நிராகரித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் புலிகள் எதிர்பார்த்தது போலல்லாமல், வடக்கு-கிழக்குக்கு மட்டுமன்றி இலங்கை முழுவதற்கானதாக அமையவேண்டுமெனவும் அவை இலங்கை அரசாங்கத்தாலயே கையாளப்பட வேண்டுமெனவும் பிரிட்டன் மற்றும் உதவி வழங்கும் நாடுகளால், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், இம்மாநாட்டில் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள் மட்டுமன்றி புலிகள் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளும் கைகூடவில்லையென்பதே உண்மை.

இனி எங்கு பிரச்சனை என்றால் கைக்கெட்டிய சொற்ப நிதியுதவியையும், எப்படி இரு

# ஒஸ்லோவில் முஸ்லிம் காங்கிரஸ் குழு என்ன பேசியது?

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் உள்ளிட்ட முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாடு தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கு எந்தளவு முக்கியமானது என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை.

யுத்தத்தினால் மூன்று சமூகங்களும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்ற போதிலும் முஸ்லிம்கள் பெருமளவிலான இழப்புக்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

யாழ் குடாநாட்டில் இருந்து 1990ம் ஆண்டு வெளியேற்றப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் அகதிகளாக வாழும் பெருந்தொகையான முஸ்லிம்களை வடக்கில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவது பற்றிப் பல தடவைகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும் இது குறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் முஸ்லிம் பிரதிநிதிகள் நோர்வே மாநாட்டிலிருந்து நாடு திரும்பியிருக்கிறார்கள்.

இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் கிழக்கில் புலிகளால் அமைக்கப்பட்டு வந்த பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் குறித்து ஒஸ்லோவில் பிரஸ்தாபிக்கப் போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறிவந்தார். ஆனால் ஒஸ்லோ மாநாட்டின் போது அவர் அவ்வாறான கருத்துகள் எதனையும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

**குறைந்த பட்சமாக அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துக் கிழக்கு மாகாண நிலைவரங்கள் குறித்து ஹக்கீம் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை.**

அடுத்த வாரம் இதே ஒஸ்லோ நகரில் ஆரம்பமாகவிருக்கும் 3ம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போது இந்த விவகாரம் குறித்து ஆராயப்படும் எனப் பின்னர் கூறப்பட்டது. ஆனால் அதுவும் எந்தளவு சாத்தியமாகும் என்பது நிச்சயமில்லை. இந்த மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அதன் பிரதிநிதிகளும் யார் சார்பில் கலந்து கொண்டார்கள் என்பது குறித்தும் தெளிவில்லை. அமைச்சர் ஹக்கீம் இந்த மாநாட்டில் அரசாங்கத்தின் பேச்சாளராகக் கலந்து கொண்டது போல் தெரிகிறது. சர்வதேச ஊடகங்கள் அனைத்திற்கும் மாநாடு குறித்து அமைச்சர் ஹக்கீமே கருத்து வெளியிட்டார்.

வடக்கு கிழக்கின் போரினால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து இந்த மாநாட்டின் போது முஸ்லிம் பிரதிநிதிகளால் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்று தெரிகின்றது.

குறைந்த பட்சமாக அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துக் கிழக்கு மாகாண நிலைவரங்கள் குறித்து ஹக்கீம் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சமாதானப் பேச்சுக்களிலும் மற்றும் உள்ள சர்வதேச நிகழ்வுகளிலும் முஸ்லிம் பிரதிநிதிகள் பங்கு கொள்கிறார்கள் என்பதைத் தவிர அவர்களது பங்குபற்றல்களால் அச் சமூகத்திற்கு என்ன கிடைக்கிறது என்ற விடயம் சிந்திக்கப்படுகின்றது. எல்லாக் கூட்டங்களுக்கும் கோட் சூட் அணிந்து கொண்டு போகிறார்கள், வருகிறார்கள். அதைத் தவிர வேறு எதுவும் உருப்படியாக நடந்ததாகத் தெரியவில்லை.

தற்போதைய ஒஸ்லோ மாநாட்டில் கிடைக்கப் பெற்ற குறைந்த அளவு நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்று இன்னும் எதுவும் முடிவாகவில்லை.

ஆனால், இதில் முஸ்லிம்கள் பங்

கேற்கமாட்டார்கள் என்பது போன்ற உத்தரவாதம் அரசுக்கும் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்டிருப்பது போல் தெரிகிறது. மாநாட்டில் ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்ட போதும் அவர்கள் தங்கள் சமூகத்தின் சார்பில் எதனையும் கேட்காமல் வந்திருப்பதிலிருந்து இது தெளிவாகின்றது.

ஏற்கெனவே காணப்பட்ட ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் எல்லாம் நடக்கின்றன என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுவதில் உள்ள யதார்த்தத்தை அமைச்சர் ஹக்கீம் தலைமையிலானவர்களின் நடவடிக்கைகளிலிருந்து புரிந்து கொள்ள முடியும். குறைந்த பட்சமாக இந்த மாநாட்டின் போது நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல்களிலேனும் கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்துக் கருத்து வெளியிட்டிருக்க முடியும்.

ஏற்கெனவே நடைபெற்ற இரண்டு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களிலும் முஸ்லிம்களின் விவகாரங்கள் குறித்து எவ்வித இணக்கப்பாடும் காணாத நிலையில் மூன்றாவது சுற்றில் எல்லாம் பேசித் தீர்த்துவிடுவார்கள் என்பது வேடிக்கையானது.

அங்கு போய் வந்து "எமது மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நாம் அதற்காகத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவோம்" என்று பத்திரிகைகளுக்குக் கூறிவிட்டால்

# நடந்தவை கொலைகள்தான் ஆனால் யாரும் குற்றவாளியல்ல!

**1992** ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மட்டக்களப்பு மைலந்தனை என்னும் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் உட்பட 35 பேர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு விசாரணை முடிவில் இந்தக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகச் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 21 இராணுவ வீரர்களும் நிரபராதிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இக் கொலைச் சம்பவத்தின் நீதிமன்றத் தீர்ப்பு, சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் குற்றவாளிகளெனச் சந்தேகிக்கப்பட்ட சகலரையும் நிரபராதிகளெனத் தெரிவித்திருக்கிறது.

கடந்த திங்களன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கின் சாட்சி வினவல்கள் முடிவுக்கு வந்து அன்றைய இரவே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

ஏழு பேர் கொண்ட ஜூரி குழுவின் ஏகமனதான முடிவுக்கமைய, குற்றஞ்சாட்டப்பட்ட 21 படையினரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

சாட்சி வினவல் திங்கட்கிழமை பிற்பகல் 1.20க்கு முடிவடைந்ததும் தீர்ப்புத் தொடர்பாக 7பேர் கொண்ட ஜூரி சபையினர் பிற்பகல் 6.40 வரை விவாதித்துக் குற்றஞ்சாட்டப்பட்ட சகலரும் நிரபராதிகள் என்ற தமது அபிப்பிராயத்தை நீதிபதியிடம் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்த நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா ஒவ்வொரு சந்தேக நபர் மீதும் இருந்த குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்களைச் சுருக்கமாகக் கூறி ஜூரிமாரிடம் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பின்னர் மேலும் ஒரு மணித்தியாலம் வரை விவாதித்த ஜூரிமார் தமது முன்னைய தீர்ப்பை உறுதி செய்தனர். இதனையடுத்து நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா சந்தேக நபர்கள் 21 பேரையும் நிரபராதிகளெனத் தீர்ப்பளித்து விடுதலை செய்தார்.

இந்த 21 படையினர் மீதும் 83 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

**கொலைகள் நடைபெற்று ஒரு தசாப்த கால விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அனைவரும் நிரபராதிகளாகி விடுதலை பெற்றுள்ளார்கள். அப்படியாயின் அன்று மைலந்தனையில் 35 பேரும் தற்கொலை செய்துகொண்டதாகவா அர்த்தம்?**

இவற்றுள் கொலை செய்தமை, சட்டவிரோதமான முறையில் மக்களை அணிதிரளச் செய்தமை, கொலை முயற்சி, கடுமையான காய மேற்படுத்துதல், இந்தக் குற்றங்களைப் புரிவதற்காக ஒத்துழைப்புடன் செயற்பட்டமையென்பது போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுக்களும் அடங்கியிருந்தன. வழக்கு விசாரணையின் போது 18 சந்தேகநபர்கள் நீதிமன்றத்திற்குச் சமூகமளித்திருந்தார்கள். 2 பேர் இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டுவிட்டனர். மற்றொருவர் தற்கொலை செய்து கொண்டார்.

சுமார் ஒரு தசாப்த காலங்களின் பின்னர் ஒரு சமூகப் படுகொலைக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இதுவெனும் போது தமது உறவினர்களை, பிள்ளைகளை இழந்தவர்களின் உணர்வுகளை இத் தீர்ப்பு எவ்வாறு மோசமாகப் பாதிக்குமென்று விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

கொலைகள் நடைபெற்று ஒரு தசாப்த கால விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அனைவரும் நிரபராதிகளாகி விடுதலை பெற்றுள்ளார்கள். அப்படியாயின் அன்று மைலந்தனையில் 35 பேரும் தற்கொலை செய்துகொண்டதாகவா அர்த்தம்?

இந்தச் சம்பவத்தில் எவரும் குற்றவாளிகள் இல்லையென்றால் அத்தனை கொலைகளுக்கும் யார் பொறுப்பு? மேகங்கள் குண்டு பொழிந்து வீடுகளிற்குள்ளிருந்த கத்திகள், கோடரிகள் தானாக வீசப்பட்டு இத்தனை உயிர்கள் காவுகொள்ளப்பட்டனவா?

ஏற்கெனவே மைலந்தனையில் தமிழ் மக்களுக்கு மோசமானதொரு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு விசாரணை அதைவிடப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்க முடியாவிட்டாலும் கூட நீதிமன்ற முறை இந்த நாட்டில் செயற்படும் விதம் குறித்து விமர்சனங்களைத் தெரிவிக்க முடியும். இலங்கையின் நீதித்துறைக்குள் சுழியோடத் தெரிந்தால் எதையும் செய்துவிட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறது.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் வேகமாக நடைபெற்று இரண்டு ஆண்டுகளுக்குள் குற்றவாளிகளுக்குத் தீர்ப்பும் வழங்கப்பட்டது. ஆனால், அப்பாவிப் பொதுமக்கள் 35 பேர் கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஒரு சம்பவத்தின் வழக்கு விசாரணை ஒரு தசாப்தகாலம் இழுபட்டு இறுதியில் இப்படியான ஒரு முடிவைக் கொடுத்திருக்கிறது.

இது இலங்கையின் நீதித்துறை மீது தமிழ் மக்களுக்கிருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# தொடரும் வன்முறைகள்

இலங்கைத் தீவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் என்பது புதிதல்ல. சுதந்திரத்திற்கு முன்னர் அதாவது 1915ஆம் ஆண்டிலிருந்தே இத்தகைய வன்முறைகள் தொடங்கிவிட்ட பெருமைக்குரிய வரலாறு எமது நாட்டுக்கு உண்டு. அண்மைக் காலமாக இந்த வரலாற்றுப் பதிவுகள் மீண்டும் உயிரூட்டப்பட்டு வருவதைக் கவலையுடன் அவதானிக்க வேண்டி இருக்கிறது.

கடந்த ஆண்டு மாவனெல்லையில் பாரியளவில் நடத்தி முடிக்கப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு வன்முறைகள் தற்போது நாடு முழுவதிலும் பல்வேறு இடங்களில் வியாபித்து ஆங்காங்கே நடந்து வருகின்றன.

### புத்தளம் வன்முறைகள்

புத்தளத்தில் கடந்த வாரம் முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிட்ட அடாவடித்தனம் அரங்கேற்றி முடிக்கப்பட்டது.

கொழும்பு, புத்தளம் வீதியிலுள்ள மதுரங்குளி என்ற இடத்தில் ஆட்டோ நிறுத்துவது தொடர்பாக ஏற்பட்ட ஒரு சர்ச்சை இன மோதலாக வெடித்து பலருக்குக் கடும் காயத்தையும் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதத்தையும் ஏற்படுத்தி முடிவுற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் புத்தளத்திலுள்ள அகதி முகாம்களிலேயே பெருவாரியாக வசித்து வருகின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற மோதல்களின் போது இந்த அகதி முகாம்களுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்கள், சிறுவர்கள் உட்பட பலரும் தாக்கப்பட்டதோடு தங்கச் சங்கிலிகள் போன்ற அந்த அகதிகள் வசம் இருந்த கொஞ்சநஞ்சம் பெறுமதியான பொருட்களும் அபகரிக்கப்பட்டுள்ளன. பல நாட்கள் தொடர்ச்சியாக ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு, மேலதிக படைகள் குவிக்கப்பட்டு நிலைமை வழமைக்குக் கொண்டுவரப்பட்டது. எப்போதும் போலவே இம் முறையும் ஆரம்பத்தில் நடக்க வேண்டிய சகலதும் நடந்து முடிந்த பின்னரே பொலிஸார் தமது கடமையை ஆரம்பித்தனர். எல்லா இடங்களிலும் பொலிஸாரின் இந்தத் தாமதம் குறித்துக் குறை கூறப்படுகிறது.

இதே போன்று ஆட்டோப் பிரச்சனை ஒன்றில் காலி நகரமும் கடந்த வாரம் தீப்பற்றிக் கொண்டது. இதன் போது 22 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். காலிச் சம்பவத்தில் பொலிஸார் பக்கச்சார்பாகவும், பொறுப்பற்ற விதத்திலும் நடந்து கொண்டதாக அரசாங்கத் தரப்பினரே குற்றஞ்சாட்டியிருந்தனர்.

மாவனெல்லை, மாளிகாவத்தை, புத்தளம், காலி என்று வன்முறைகள் தொடர்கின்றன. இந்தச் சம்பவங்களில் கிடைத்த அனுபவங்களை வைத்து முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு அடாவடித்தனம் தொடர்பாகவும் தெளிவாக இரண்டு முடிவுகளுக்கு வரலாம்.

ஒன்று, இத்தகைய எந்தச் சம்பவத்திலும் தமது சொத்துக்களை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கிடைக்கப்போவதில்லை. இரண்டாவது, இவற்றில் சம்பந்தப்பட்ட எவரும் நீதிவிசாரணைகளின் மூலம் தண்டிக்கப்படப் போவதில்லை. ஆதலால் எதிர்காலத்தில் இத்தகைய வன்முறைகளை முன்னின்று நடத்துபவர்கள் எக்காரணம் கொண்டும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. தப்பித் தவறி முஸ்லிம்கள் கொந்தளித்தால் அதை எமது அரசியல் தலைவர்களும் சமயப் பெரியோர்களும் பார்த்துக் கொள்வார்கள்.

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை, சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

விதுஜா ஏசியன் சொப்



## முதலாவது, ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து



| | |
|---|---|
| சகனியா | 21.11.2002 |
| சத்தியா | 27.01.2003 |

சாவகச்சேரியைச் சேர்ந்த திரு, திருமதி சந்திரன் தம்பதிகளின் மகள் சகனியா தனது முதலாவது பிறந்த தினத்தையும் சத்யா ஐந்தாவது பிறந்த தினத்தையும் பிறப்பிடமாகிய இத்தாலி ஜெனிவா நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வாழும் உற்றார் உறவினர் அனைவரும் குழந்தை இயேசுவின் கிருபையினால் பல்லையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

சத்தியா 27.01.2003 ஐந்தாவது பிறந்த நாள்.
சகனியா 21.11.2002 முதலாவது பிறந்த நாள்.

தகவல்: ஏ.குகன் -நீர்கொழும்பு.



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக


Tel: 074-519754



## நீங்கள் கண்ணாடி அணிபவரானால்

எந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!

55 YEARS SOLID OPTICALS SERVICES




நன்மைகள்

* இடது வலது கண்களுக்கென விசேட லென்ஸ் கொண்டது
* பாரமற்றது * உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

**RAY-BAN OPTICIANS**

81, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொலைபேசி-327003, 449762

மருத்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.





## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, சுக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.



## தெய்வீக மருத்துவம்

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine Service
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோசும் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka Head Office Batticaloa.
Tele / Fax:065-24825,078 610098
வெளிநாட்டவர்களுக்கு, Tele / Fax: - 0094 78610098

**கொழும்பிலும் சந்திக்கலாம்**

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "






## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத துறையில 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்பக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளி நாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி.

Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

## அண்டை மண்டலத்திலிருந்து...

# வைகோ. தனித்துவிடப்பட்டார்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ. பொடா சட்டத்தின் கீழ் ப்ராசிக்யூஷன் தரப்பு கோருவதுபடியே, பொடா சிறப்பு நீதிமன்றம், வழக்கினைத் தொடர்ந்து ஒத்திவைத்தபடியே இருக்கிறது.

பொடாவின் கீழ் குற்றப் பத்திரிகை பதிவு செய்யாமல் ஒருவரை 180 நாட்கள் சிறையில் வைத்திருக்கலாம், அந்த அளவு வை.கோ.வும் கம்பி எண்ண வேண்டியது போலத்தான் இருக்கிறது. ஆனால் எவரும் வாயையே திறக்கவில்லையே.

பார்த்தார்கள் ம.தி.மு.க.வினர், சென்னையில் கடந்த வியாழனன்று ஒரு நடைப் பயணத்தினையும் பொதுக் கூட்டத்தினையும் நடத்தினர். பேரணியில் பெரியார், அண்ணா, வை.கோ. ஆகியோரின் படங்கள். வை.கோ சிறையில், நியாயம்தானா என்பது போன்ற அபயக் குரலொலிக்கும் வாசகங்கள் தாங்கிய அட்டைகள்.

வை.கோ. ஏன் கைது செய்யப்பட்டார்? இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக.

கட்சி துவங்கிய நாளிலிருந்து வை.கோ. கைதிற்குப் பிறகு சில நாட்கள் வரை கூட புலிகளை ஆதரிப்பது எங்கள் பிறப்புரிமை என்ற ரீதியில்தான் பேசி வந்தார்கள்.

ஆனால் இப்போதோ சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது போலத் தெரிகிறது. சென்னை நடைப் பயணத்தின் போது விடுதலைப் புலிகளை ஆதரித்து ஒரு முழக்கங்கூட இல்லை. பிரபாகரனின் படமும் இல்லை.

பின்னர் நடந்த பொதுக் கூட்டத்திலும் ஏறத்தாழ அதே நிலைதான். கழகம் தனது தனித்தன்மையினை இழந்துவிடாது, கொள்கைகளை எந்நாளும் விட்டுக் கொடுக்காது என்றெல்லாம் கூறிக் கொண்டார்கள். ஆனால் கொள்கை என்ன என்பதைத்தான் விளக்கவில்லை.

வெகு நாள் கழித்து வை.கோ. விஷயமாக வாயைத் திறந்த மத்திய அமைச்சர் கண்ணப்பன், "பொடா சட்டத்தைக் கண்டு ம.தி.மு.க. அஞ்சுவதாகத் தவறானதொரு கருத்துப் பரப்பப்பட்டு வருகிறது. நாங்கள் இதற்கெல்லாம் அஞ்சப்போவதில்லை. எங்கள் பொதுச் செயலாளர் நினைத்தபடியே இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. அங்கு அமைதி ஏற்பட நடக்கும் முயற்சிகளை முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட எவராலும் தடுக்க முடியாது" என்று பேசினார். அவ்வளவுதான். அதற்கு மேல் சவடால் எதுவும் இல்லை.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசும் ஒருவர் எப்படி மத்திய அமைச்சரவையில் இருக்கலாம் எனக் கேட்ட, ஜெயலலிதா, இதே கண்ணப்பனைக் குறித்து மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மத்திய அரசு ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லைதான். ஆனால் அக் கடிதத்திற்குப் பிறகு பிரபாகரனுக்கு வாழ்த்துப்பா பாடுவதைக் கண்ணப்பன் நிறுத்திக் கொண்டுவிட்டார் என்பதை இங்கே நோக்க வேண்டும். தனது பதவி பறிபோய்விடக் கூடாது என்ற கவனத்தோடுதான் சென்னைக் கூட்டத்திலும் கண்ணப்பன் பேசினார்.

பாரதீய ஜனதா கைகழுவி விட்டாலும் கூட, ம.தி.மு.க. தொடர்ந்து காவிச்சட்டைக்காரர்களுக்குச் சலாம் அடித்து வருகிறது. அன்றைய கூட்டத்திலும் பா.ஜ.க. ஒன்றும் வை.கோ.வை நட்டாற்றில் விட்டுவிடவில்லை. ஜார்ஜ் பெர்னான்டசும் அருண் ஜேட்லியும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்களே என்று சமாளித்தார்கள்.

ஆனால் உண்மையென்னவென்றால் 134 நாட்களுக்குப் பிறகும் தமிழ்நாட்டில் ஓர் இலை கூட அசையவில்லை. எனவே மத்திய அரசும் கண்டுகொள்ளவில்லை என்ற ஆதங்கம் நிறைய கட்சித் தலைவர்களிடையே. சில நாட்களுக்கு முன்பு சிறையில் வை.கோ.வை கருணா



நிதி சந்தித்த பிறகு இரு கட்சிகளும் இணையப்போகின்றன என்பன போன்ற ஊகங்கள் வேறு. கட்சி தொடங்கி ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகும் தனியாக நின்று ஒரு சட்டமன்றத் தொகுதி கூட வெல்லும் நிலையில்லை. தொண்டர்களிடம் சோர்வு.

தொண்டர்களென்ன? வை.கோ.வே ரொம்பக் குழம்பிப்போயிருக்கிறாரென்றுதான் தோன்றுகிறது.

## கானகன்

குஜராத் கலவரத்தின் போது கண்ணை மூடிக்கொண்டு மத்திய அரசினையும் பா.ஜ.க.வையும் ஆதரித்தார். பொடாவையும்தான்.

பாகிஸ்தானால் வளர்க்கப்படும் பயங்கரவாதிகளுக்கெதிரானதுதான் இந்த அஸ்திரம். இது தவறாகப் பயன்படுத்தப்படாது என மேடைக்கு மேடை முழங்கினார்.

கைதான பிறகும், ஜெயலலிதா அரசுதான் தவறாக நடந்து கொள்கிறது, சட்டத்தைக் குறை கூறக் கூடாது என வாதிட்டார்.

பிறகு ஜாமீன் பெறப்போவதில்லை. சட்ட ரீதியாகவே நான் வெளியே வர முடியும். அதைத் தவறாகப் பயன்படுத்த முடியாது என்பதை நிரூபிப்பேனென்றார்.

ஆனால் இப்போதென்னாயிற்று? பொடாவின் சில சரத்துக்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று வாதிட்டு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

தடை செய்யப்பட்ட அமைப்புக்களை ஆதரித்துக் கூட்டம் போடுவதையும் குற்றமாக்கும் பொடா பிரிவுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை.

ஆட்சிப் பொறுப்பில் இருப்போரின் கருத்துகளுக்கு எதிரான கருத்துக்களை ஒருவர் கொண்டிருப்பதாலேயே அவர் நாட்டு நலனுக்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் விளைவிக்கக் கூடியவர் என்று கூற முடியாது.

பழிவாங்கும் போக்கினைக் கடைப்பிடிக்கும் ஒரு அரசின் கைப்பிடியில் ஜனநாயக உரிமைகள் சிக்கி நசுங்க, பொடா சட்டம் வழி செய்யுமானால் அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், எனவே சம்பந்தப்பட்ட சரத்துக்கள் செல்லாதென உச்ச நீதிமன்றம் அறிவிக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார் வை.கோ.

ஐயா, ஏறத்தாழ இதே போன்ற வாதங்களைத்தான் பல்வேறு எதிர்க் கட்சிகளும் மனித உரிமை அமைப்புக்களும் முன்வைத்தன.

தடாவும் சரி, பொடாவும் சரி, ஆட்சியிலிருப்போரால் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தப்படும். எந்தக் கட்சியினையும் நம்பி இது போன்ற பாரதூர விளையுகளை ஏற்படுத்தக் கூடிய சட்டங்களை ஒப்படைக்கக் கூடாது என அவை அறிவுறுத்தின.

அப்போது என்ன சொன்னார் வை.கோ.? ஆஹா, எங்கள் வாஜ்பாயிக்குத் தெரியாத மனித உரிமையா? எங்கள் அருண் ஜேட்லிக்குத் தெரியாத சட்டமா? என்றல்லவா முழங்கினார். இப்போது விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காகக் கைது செய்தது தவறானது என்று பவ்யமாக எடுத்துரைத்து, என்னை விடுவித்துவிடுங்கள், நான் ஒரு பாவமும் அறியாதவன் என்று கெஞ்சுகிறாரே.

அப்படியானால் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில், முஸ்லீம்களை பொடாவின் கீழ் கைது செய்தால் அது சரி, ஏற்றுக்கொள்ளப்படலாம், விடுதலைப் புலி ஆதரவாளர்களைக் கைது செய்தால் மட்டும் அது தவறா? இது என்ன நியாயம்?

மனித வெடிகுண்டை அனுப்பி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொன்றதன் பின்னணியில், விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. அதை நீக்குங்கள் என்று கோரி அலுத்துவிட்டார் வை.கோ.

பொடா நிறைவேற்றப்படும் போதும் அந்தத் தடை அமுலிலிருந்தது. அப்போதே அவருக்கு உறைத்திருக்க வேண்டாமா, தன் மீது ஜெயலலிதா இது போன்ற சட்டத்தினைப் பிரயோகிக்கக் கூடும் என்று?

ம.தி.மு.க. நிர்வாகிகள் மேலும் எட்டுப் பேர் தவிர பழ நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கத்தினைச் சேர்ந்த சிலரும் தற்போது கைதாகி உள்ளேயிருக்கிறார்கள். எவருக்காகவும் மக்கள் தெருவிற்கு வந்துவிடவில்லை.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எந்த அளவு ஆதரவிருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் ஓர் அடையாளம்தானே.

இந்தப் பின்னணியில்தான் சென்னை நடைப் பயணம் நடந்திருக்கிறது. ஆனால் இப்படி ஓர் சூழல் நிலவும் போது, காமா சோமாவென்று யாரையுமே பாதித்துக் கொள்ளாது, ரொம்பக் கவனமாகப் போராட்டம் நடத்துவதன் மூலம் கட்சியை வலுப்பெறச் செய்வது சந்தேகமே.

# மக்களின் பெயரில்....

மக்களின் பெயரில் வடக்கு கிழக்கில் நடைபெறும் பல சம்பவங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலத்தை நீண்ட காலத்திற்குப் பாதிக்கக்கூடிய பாரதூரமான ஜனநாயக மறுப்பாகவும், மனித உரிமை மீறலாகவும், எந்த உரிமைகளுக்காகத் தமிழ் மக்கள் போராட விரும்பினார்களோ அந்த உரிமைகளுக்குச் சாவுமணி அடிப்பதாகவும் அமைகின்றது.

வடக்கு கிழக்கில் அரசியல் இராணுவ மேலாதிக்கம் வகிப்போரின் கருத்து நிலையில் இருந்து சிறிதும் விலகாத சக்திகளைத் தவிர, வேறுபட்ட அபிப் பிராயம் கொண்ட, வேறுபட்ட சமூக, அரசியல் பார்வை கொண்ட அரசியல், சமூக சக்திகள் வடக்கு கிழக்கில் செயற்பட முடியாதென்பதே இன்றைய பரிதாப நிலையாகும்.

வேறுபட்ட அரசியல், சமூக சக்திகளின் இருப்பை நிராகரிக்கும் போக்கு இன்று நேற்றல்ல, ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு மேலாக எமது சமூகத்தில் நிலவுகிறது. இங்கு நிராகரிப்பு குரூரமான படுகொலையாக, உடல் மீதியின்றி அழித்தலாக இருக்கிறதென்பது உண்மையாகும்.

நீண்ட காலமாக அராஜகப் போக்கு நிலவி வந்ததால் முழுச் சமுதாயமும் பீதியின் நிழலில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனால்தான் அவர்கள் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் இழுபடும் ஒரு போக்கு எமது சமூகத்தில் காணப்படுகின்றது. உலகில் வெகுஜன எழுச்சிகள், எதிர்ப்பியக்கங்கள் என்னும்போது மக்கள் வழிகாட்டலுடன் தன்னெழுச்சியும் கொள்கிறார்கள்.

இங்கு வழிகாட்டல் என்பதைவிட மக்களை நிர்ப்பந்தித்தலே மேலோங்கிக் காணப்படுகிறது.

மக்கள், பங்குகொள்ளாவிட்டால் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார்கள். இத்தகைய நிர்ப்பந்தங்களால் வடக்கு கிழக்கில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு சமாசங்கள், வர்த்தக சங்கங்கள், தொழிலாளர், விவசாயிகள் என்போர் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் அரச அதிபர் தொடக்கம் கிராம சேவகர் வரை குற்றேவலாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர். மனித ஆளுமையும், பன்மைத்துவமும் இங்கு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. சமூகம் தனக்கு எடுபிடியாக இருக்க வேண்டும் என்று கருதும் ஒரு ஆதிக்க வகைப்பட்ட கருத்து நிலையின், தன்னகங்காரத்தின் விளைவே இதுவாகும்.

இந்தச் சமூகத்திற்காகப் பல்லாயிரக் கணக்கான உயிரைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக யாவரும் அவர்களுக்குக் கட்டுப்படவேண்டுமென்ற வாதம் தவறானது....

உண்மையில் ஒரு போராட்டத்தின் பலாபலன் அதன் சமூகப் பயன்பாடு, எதிர் காலச் சந்ததிக்குக் கிடைக்கப்போவது என்ன என்பவற்றை வைத்தே அதனை மதிப்பிட முடியும்.

சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழுவதைப் பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

இன்று நடந்திருப்பது அதுதான். தமிழ் மக்களுக்காக, அவர்களின் தலைவிதியைத் தாங்கள் எடுத்துக் கொண்டதாக எண்ணுபவர்களிடம் உண்மையில் தமிழர்களின் வாழ்க்கை வீழ்ந்துவிட்டது.

வடக்கு கிழக்கில் வெவ்வேறு சமூகங்களின் இருப்பை, வெவ்வேறு சமூக சக்திகளின் இருப்பை நிராகரிப்பவர்கள் எவ்வாறு சாதாரண மனிதர்களின் உணர்வுகளை மதிப்பார்கள்?

எனவே இந்தப் போக்கு எமது சமுதாயத்தில் எதிர்க்கப்பட வேண்டும். ஜனநாயக இடைவெளி தோற்றுவிக்கப்பட வேண்டும். வரலாற்றில் வேறுபட்ட கருத்துக் கொண்டவர்கள், இந்தப் போக்கை எதிர்த்தவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனை எதிர்த்த அரசியல் ஸ்தாபனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

தற்போது மீண்டும் அதே முயற்சிகள் இன்னொரு மட்டத்தில் நடைபெறுகின்றன. எமது தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினரும் இதை ஆதரிக்கிறார்கள்.

அவர்கள் ஆதரிக்கும் அந்த நிலைப்பாட்டிற்கே அவர்கள் வெகு விரைவில் இரையாகவும் கூடும்.

எந்த அமைப்பும் சுயாதீனமாக இருப்பதை அனுமதிக்க மறுக்கும் நிலை சமூகத்தை முடமாக்கிவிடும்.

இந் நிலை சமகால உலகில் மிகுந்த அக்கறைக்குரிய பன்முகத்தன்மை ஜனநாயகம், மனித உரிமைகளுக்கு எதிரானதாகும். உண்மையில் காட்டுமிராண்டி யுகத்தை மீட்பதற்கான முயற்சியாகும். இந்தப் போக்கு மௌனமாக ஆதரிக்கப்பட்டால் உலக மானிட சமூகத்திடமிருந்து ஈழச் சமூகம் தனிமைப்படுத்தப்பட்டுவிடும்.

எனவே எமது பிரச்சினை சர்வதேசமயப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் மாற்று அரசியல், சமூக சக்திகளின் இருப்புக்காகவும், தனிமனித சுதந்திரத்துக்காகவும் குரல் கொடுத்தேயாக வேண்டும்.

இப் பிரச்சினை வெறுமனே இரண்டு அரசியல் ஸ்தாபனங்களுக்கிடையே உள்ள முரண்பாடல்ல. சமூகத்தின் ஜனநாயகத் தாற்பரியங்கள் உயிர்காக்கப்படுவது பற்றிய சவாலாகும்.

பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, சமாதானச் சூழல் என்பன எத்துணை அக்கறைக்குரியதோ அதற்குச் சற்றும் குறையாத அக்கறைக்குரிய விடயம் இது. ஒன்றுக்காக ஒன்று பலியிடப்பட முடியாது.

## தாகூர்



# அதிரடி அய்யாத்துரை

**நெடுந்தீவுக்குத்** திடீரெனப் போன மகேஸ்வரனார் ஏதோ சர்வகட்சிக் கூட்டத்தை நடத்தியதாகவும், அங்கு சில சட்டதிட்டங்களைக் கொண்டு ஈ.பி.டி.பி.க்குக் கட்டுப்பாடு விதித்ததாகவும், பி.பி.சி. பேட்டியில் வெளுத்துத் தள்ளினார். ஆனால் பாருங்கோ, அப்பிடி ஏதாவது நடந்ததா எண்டும், அதில் அந்தக் கட்சி கலந்து கொண்டு அவர் விதித்த கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டதா என்றும் அவ்வட்டாரங்களில் விசாரித்தபோது அஹ...ஹ்...ஹா என்று ஏதோ நல்ல ஜோக்கைக் கேட்டது போல் சிரிக்கிறார்கள். மகேஸா! சீரியஸ் மெற்றேர்ஸுக்கு நடுவில இப்பிடி ஒரு ஜோக்கராய்ப் போய்க் குதிக்க வேண்டுமா...?

**In** 1986... யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் கொலைக்காக "அராஜகத்தை எதிர்ப்போம்" என்று புலிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரேமர். ஆனால் இப்ப "உப்பிடித்தான் சுரேஸ் பிரேமச்சந்திரன் என்பவர் கொலை, கொள்ளை எல்லாம் செய்திட்டு மக்களால துரத்தப்பட்டு ஒரிஸாவுக்கு ஓடிப்போய் திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டு அரசியல் செய்யிறார்" என்று அவருக்கே டோஸ் கொடுக்கிறார் பல்கலைக்கழக மாணவர் தலைவர் கஜேந்திரன். இதையும் கேட்டுத் தலையாட்டிக் கொண்டு, மற்றவையள் வன்முறை செய்ததா அறிக்கை விடுகிறது தேவைதானா? ஏதோ தான் பாவ விமோசனம் பெற்றிட்டதா நினைப்புப் போல...

**இரண்டெழுத்தாற்ற** புதுமையான இலக்கியப் பொறுப்பாளர், இலக்கிய அலுவலாகப் பிறநாடு செல்லக் கொழும்பில நிற்கிறாராம். ஆனாலும், அவருக்குப் பயணக் கொடுப்பனவு போதாது என்று மனக்குறையாம். தாய்லாந்துக்குப் போனவை 12 ஆயிரத்துக்குச் சப்பாத்து வாங்கினது போல நான் என்ன பவுசு காட்டவா போறேன்" என்று புழுங்கிறாராம் மனுசன். அதுவும் சரிதான் இலக்கியம் என்றால் என்ன இழிவோ?

**வெளிநாட்டுக்கு** வேலைக்குப் போற பெண்கள் மிகப் பத்திரமான முறையில திருப்பி அனுப்பப்படுகினம். கப்பலில சரக்கோடு சரக்காகப் பாசல் பண்ணி, இலங்கைப் பணிப்பெண் ஒருத்தியின்ர உடல் திரும்பி வந்திருக்குது. குவைட்டிலிருந்து அனுப்பப்பட்ட இந்தப் பாசல் 1999இலேயே வந்து சேர்ந்தும் இதுவரை திறக்காமல் இரண்டு வருசமா எங்கட சுங்க அதிகாரிகளும் வைச்சுப் பாதுகாத்திருக்கினம். ஆனாலும், இந்த விசயங்களில தங்கட பொலிஸார்தான் நடவடிக்கை எடுப்பினம்; தூதரகங்களுக்கு அலுவல் இல்லை என்று புதுச்சட்டங்கள் எல்லாம் மத்திய கிழக்கில வருது. இதுக்கு நடுவில மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போகிற பெண்கள், பாதுகாப்பா இருக்கிறதா எங்கட தூதரகக்காரர் அறிக்கை விடுகினம். நல்லாத்தான் இருக்குது நடப்பு.

**விநாயகத்தார்** பாராளுமன்றக் காசில வாங்கின வி.என்.டபிள்யூ.வைப் புலிகளுக்குக் கொடுத்திட்டதா முந்தி ஒரு கதை வந்து, அப்பிடியில்லையென்று காட்ட காரும் தானுமாகச் சேர்ந்து படமெடுத்துப் போட்டவரெல்லோ. ஆனால், இப்ப அந்தக் காரைத்தான் தமிழ்ச்செல்வன் பாவிக்கிறாராம். பாவம் கைக்கெட்டினது வாய்க்கெட்டாத கதையாப் போச்சு. ம்...முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி, அற்லீஸ்ட், போராட்டத்திற்காகக் கார் கொடுத்தால் என்னவாம் விநாயகத்தார்?

# ஸ்போர்ட்ஸ்

## தொடரை வென்றது மேற்கிந்திய அணி

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான கடைசியும் 7-வதுமான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா 135 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

4-3 என்ற கணக்கில் தொடரை வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, டெஸ்ட் தொடரில் பெற்ற தோல்விக்குப் பழி தீர்த்துக் கொண்டது.

விஜயவாடாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணிக் காப்டன் ராகுல் திராவிட், எதிரணியினரை முதல் துடுப்பெடுத்தாடப் பணித்தார். 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 315 ரன்களைக் குவித்தது மேற் கிந்தியத் தீவுகள்.

முன்னிலை வீரர்கள் கிரிஸ் கெயில், சந்தர்பால் ஆகியோர் சொற்ப ரன்களிலேயே ஆட்டம் இழந்தனர். அப்போது ஸ்கோர் 16-2. இதனால் இந்தியாவின் நம்பிக்கை அதிகரித்தது.

அவர்களை அடுத்து, 58 ரன்களில் சேவக் பந்தில் ஹேன்ட்ஸும் ஆட்டமிழந்தார்.

ஆனால், அதன் பின்னர் ஜோடி சேர்ந்த சர்வானும், சாமுவேல்ஸும் இந்தியப் பந்துவீச்சாளர்களைச் சிதறடித்தனர். சர்வான் 83 ரன்கள் சேர்த்திருந்த போது அகர்கர் பந்தில் எதிர்பாராவிதமாக எல்.பி.டபிள்.யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் சாமுவேல்ஸும், பாவெல்லும் அதிரடி ஆட்டம் மேற்கொண்டனர். இருவரும் 5-வது விக்கெட்டுக்கு (61 பந்துகளில்) 109 ரன்களைச் சேர்த்து இரசிகர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தனர்.

40-வது ஓவரில் 4 விக்கெட்டுக்கு 195 ரன்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள், ஆட்டத்தின் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 315 ரன்களைப் பெற்றது.

சாமுவேல்ஸ் 108 ரன்களைக் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அவர் எதிர்கொண்ட 75 பந்துகளில் 5 சிக்ஸர்களும் 10 பவுண்டரிகளும் அடங்கும். 316 ரன்கள் எடுத்தால் வெற்றி எனும் கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்தியா, தொடக்கம் முதலே மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது.

99 ரன்களை எடுப்பதற்குள் 5 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்தது. காயத்தால் அவதிப்பட்ட ரியான் ஹைன்ட்ஸுக்குப் பதிலாகக் களமிறங்கிய லாசன், அபாரமாக வீசிய பந்துகளை இந்திய வீரர்களால் சமாளிக்க முடியவில்லை.

சேவக், மொங்கியா, லக்ஷ்மன், திராவிட் ஆகியோரை அடுத்தடுத்து வீழ்த்திச் சக வீரர்களைப் பரவசப்படுத்தினார் லாசன்.

இதனால் இந்தியாவின் வெற்றி வாய்ப்புக் கேள்விக்குறியானது. அதன் பின்னர் கைஃப், பாங்கர் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க இந்தியாவின் தோல்வி உறுதிசெய்யப்பட்டது. அணியிலேயே அதிகபட்சமாக யுவராஜ் சிங் 68 ரன்களை எடுத்தார். இந்தியா 36.5 ஓவர்களில் 180 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

## அவுஸ்திரேலியா வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் 2-வது டெஸ்டில், அவுஸ்திரேலியா ஓர் இன்னிங்ஸ் மற்றும் 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முன்னதாக, பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 384 ரன்கள் வித்தியாசத்தில் வென்றிருந்தது அவுஸ்திரேலிய அணி.

இரு அணிகளுக்கிடையேயான 2-வது டெஸ்ட் அடிலெய்டில் வியாழக்கிழமை தொடங்கியது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 342 ரன்களை எடுத்தது. அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்புக்கு 552 ரன்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது.

3-ம் நாளான சனிக்கிழமை ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 36 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 159 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

முதல் இன்னிங்ஸில் சதம் குவித்த வாகன், வார்ன் பந்துவீச்சில் 'ஸ்வீப்' செய்தார். பவுண்டரி எல்லைக் கோட்டருகே சிறிது தூரம் ஓடிவந்த மெக்ராத் 7 அடிக்கும் மேல் பாய்ந்து, பந்து கீழே விழுவதற்குள் பிடித்தார்.

சமீபத்திய ஆட்டங்களில் மிகவும் சிறப்பான 'காட்ச்' என்று கூறும் அளவுக்கு அற்புதமாகப் பிடித்தார் மெக்ராத்.



# மெல்ல இசை மீட்ட நரம்புகள் அறுந்தது போல்....

சந்துகனிடமிருந்து விலகி எட்ட அமர்ந்திருந்தாள் மிதுனா.

அவனுக்கு எரிச்சலாக இருந்தது. "எப்போதும் நான்தான் அவளைக் கெஞ்ச வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்". சலிப்போடு கைக்குக் கிடைத்த புற்களைப் பிடுங்கி வீசியபடி இருந்தான்.

"அதென்னது வந்தவுடன் நான்கு அடி தள்ளி இடம்விட்டு உட்கார்ந்து கொள்வது! நான்தான் இருந்த இடத்தை விட்டு எழுந்து போய் அவளோடு உரச வேண்டும். எப்படியும் நெருங்குவேன் என்று தெரிந்து தூர அமர்ந்து கொள்ளும் தந்திரம்! அவளுக்கு இதிலெல்லாம் விருப்பமில்லை. எனக்காகத்தான் சம்மதிக்கிறாளாம்- ஏதோ பிச்சையிடுவதைப் போல..."

சந்துகன் வீம்பாக அவள் பக்கம் திரும்பாமல் அமர்ந்திருந்தான். நேரம் செலவழிந்து கொண்டிருப்பதையும் அவனால் தாங்க முடியவில்லை.

தலையை மெல்லத் திருப்பி மிதுனாவைப் பார்த்தான். அவள் உட்கார்ந்திருந்த நிலையே அவனுக்கு உன்மத்தம் ஊட்டப் போதுமானதாயிருந்தது.

பக்கவாட்டில்தான் பார்க்க முடிந்ததென்றாலும், அதிலும் எத்தனையோ இன்ப ஜாலங்கள் தெரிந்தன அவன் கண்களுக்கு. பச்சை நிறத்தில் மெல்லிய சேலை கட்டியிருந்தாள். அதைச் சற்று இறுகவே கட்டியிருந்ததால், நன்றாக எழுந்த அவள் அங்கலாவண்யங்களை அடக்கச் சக்தியற்றுத் தோற்றதை அப்பட்டமாகக் காட்டிக் கொண்டிருந்தது. அவள் மடியில் நன்றாக மடிந்து திணிந்திருந்த சேலை. அவளது உடற்கட்டின் பரம வாளிப்பைப் பறைசாற்றுவதாயிருந்தது.

கழுத்தில் அணிந்திருந்த மரகத மாலை அவள் கழுத்திலிருந்து இறங்கி வெள்ளை வெளேரென்ற பிரதேசத்திலிருந்த வட்ட விளிம்புகள் மீது விளையாடியதும் தெரிந்தது.

முன்னாலும் பின்னாலும் தாராளமாக இறக்கித் தைத்திருந்த தையற் கலைஞனுக்கும் சந்துகன் மனதுக்குள்ளாக நன்றி சொன்னான்.

சேலை சற்றே விலகிய இடத்தில் பளீரிட்ட இடைப் பகுதியும், பூமியில் அழுந்திப் பதிந்திருந்த செழித்த பின் புறமும் அவனை என்னவோ செய்தன.

கணக்கிலாக் காமக் கணைகளை வீசிக்கொண்டிருந்த அந்த மனோகர உடலில் அவன் பார்வை விழுந்து துடித்தது. தன் பலவீனம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாவதைச் சந்துகன் உணர்ந்தான்.

மிதுனா சற்றே தலையைத் திருப்பி, வெறியும் ஆவலும் நிரம்பியதாய்ப் பளீரிட்ட இவனது கழுகுக் கண்களைப் பார்த்தாள். உதடுகளில் புன்னகை விரிந்தது.

இவன் நிதானமிழந்து அவளை நோக்கிப் பாய்ந்தான்.

கைகளோடு சேர்த்து அவளுடலைக் கட்டிக் கொண்டான்.

"ஏனடி என்னைத் தொந்தரவுக்குள்ளாக்குகிறாய்?" என்றான் அவள் காதினுள்.

மிதுனா மெல்ல நகைத்தாள். அந்த நகைப்பொலி ஜலதரங்கத்தின் மந்திரஸ்தாயி ஸ்வரங்களைப் போல அந்தச் சூழலில் லேசாக இனிமை நிரப்பியது.

"ம்...ம்" என்று ஒரு நீண்ட பெருமூச்சை இழுத்தவன், "நீ மட்டுமா தொந்தரவுக்குள்ளாக்குகிறாய்?" என்றான் கிசுகிசுப்பாக.

அவள் வியப்போடு ஏறிட்டதை ஒட்டியதாக, அவள் இடையிலிருந்த சந்துகனின் கைகள் அவளுடலைச் சற்றே அசைத்தன. அந்த அசைவால் அவள் அங்கலாவண்யங்கள் அனைத்தும் இணைந்து அசைந்தன.

அதனால் நிதானமிழந்து கலங்கிய அவனைக் கவனிக்காது,

" வேறு யார் உங்களைத் தொந்தரவு படுத்துகிறவர்கள்?" என்றாள்" சற்று அவசரமாக.

"யார் என்று கேளாதே, எவை என்று கேள்"

"சரி...எவை?"

"உன் கண்கள் இரண்டு, கன்னங்களிரண்டு, உதடுகள் இரண்டு, அப்புறம் மார்புக..."

"போதும் போதும் நிறுத்துங்கள்" என்று தன் ஒரு கையால் அவன் வாயைப் பொத்தினாள் மிதுனா.

அந்த மிருதுவான உள்ளங்கையில் அவன் முரட்டு உதடுகள் விரிந்து பதிந்தன. சட்டென்று கையை எடுத்துக் கொண்டாள் மிதுனா.

"ஹ்ம்" என்று சலித்துக் கொள்வதுபோல மூச்சை விட்டாள்.

வலது கையால் அவள் தோளை வருடியபடி "உன் கைகள் மட்டுமல்ல, நீயே ஒரு மூங்கில்தான்" என்றான்.

"மூங்கிலா? நானா?"

"ஆமாம். மூங்கில்தானே மூச்சு விடுவது கூட இசையாகிறது!"

மிதுனா சங்கடப்பட்டு அசைந்தாள்.

"ஏன் திமிறுகிறாய்?" என்றான் சந்துகன் இன்பமாக.

"நான் எங்கே திமிறுவது? இதோ நீங்கள்தான் நான் அப்படி இப்படி அசைய முடியாமல் கைகளால் வளைத்து வைத்திருக்கிறீர்களே?" இதைச் சொன்ன அவள் குரலில் பொய்க் கோபமும் பாசாங்கும்தானிருந்தது.

தன் பிடியை அகற்றாமலே, "வளைக்காமல் என்ன செய்வது?" என்றான் சந்துகன்.

"எதற்காக வளைக்க வேண்டும்?"

"அப்படிக் கேள். மனதுக்குப் பிடித்தவர்களை நம் விருப்பத்திற்குத் திருப்புவதற்கு வளைக்கத்தான் வேண்டும். அத்தோடு..."

"அத்தோடு?"

"எதிரியை மடக்குவதற்கும் வளைக்க வேண்டும்"

"யார் எதிரி?"

"சீறும் படைக்கலங்களைக் கொண்டவர்கள், கூரிய ஆயுதங்களோடு தாக்குதல் நடத்துபவர்கள்..."

"ஓகோ.... இவர்களை வளைத்து...?"

"வளைத்து அடக்க வேண்டும். இல்லாவிட்டால் தப்ப முடியாது"

"அதுதான் வளைக்கிறீர்களா?"

"ஆமாம்."

"அப்போ நான் என்ன எதிரியா உங்களுக்கு?

"சந்தேகமென்ன?"

"அப்படியென்ன செய்துவிட்டேன் உங்களை?"

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லாமல் அவளை நன்றாகக் கைகளுக்குள் இறுக்கினான். அந்தக் கைகள் அவளைச் சுற்றி இரும்பு வளையங்கள் போல் சென்றன.

அவள் உடல் துவண்டது. பொருந்தியிருந்த இமைகள் திறந்தன.

அந்தக் கைகள் தன்னை அப்படியே இறுக்கி நொறுக்கிவிட்டால் கூட இன்பமாயிருக்கும் போலிருந்தது மிதுனாவுக்கு.

சந்துகன் தன் கன்னத்துடன் அவள் கன்னத்தை உரசியபடி, "வதைக்கிறாய். வதைப்பவர்கள் எதிரிகள்தானே?" என்று அவள் காதருகே கூறி கழுத்தில் உதடுகளைப் புதைக்கவும் செய்தான்.

இம்சைக்கும் இன்பத்திற்கும் வித்தியாசம் அதிகமில்லை என்று நினைத்தாள் மிதுனா.

இருவர் உடல்களிலும் இன்ப உணர்ச்சிகள் பெருவேகத்தில் சுழன்று சுழன்று ஓடின.

சந்துகனின் உடலில் அழுந்திய அவள் பூவுடலின் எழுச்சியான பகுதிகள் அவன் கட்டுப்பாட்டை அறவே இழக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருந்தன. கரங்கள் மேலெழுந்து அவள் கன்னங்களைப் பிடித்தன இருபுறமும். அதனால் மொட்டெனக் குவிந்த அவள் அதரங்களை அவன் அதரங்கள் ஒரு விநாடி தீண்டி மீண்டன.

மெல்ல அவளைப் புற்றரையில் படுக்க வைத்துப் பரவ முற்பட்டான்.

மிதுனா திடீரென அவனை உதறிவிட்டு விலகிக் கொண்டாள்.

மெல்ல இசை கூட்ட ஆரம்பித்த யாழின் நரம்புகள் அறுந்தது போல் திடுக்குற்றான்.

"இதற்கு மேல் வேண்டாம். நான் வருகிறேன்" என்று சொல்லி அவள் எழுந்து போய்விட்டதை உணர மாட்டாதவனாகத் திகைத்து அமர்ந்திருந்தான் சந்துகன்.

புரிவுண்ட புணர்ச்சியுள்
புல்ஆரா மாத்திரை
அருகுவித்து ஒருவரை
அகற்றலின் தெளிவார்கண்
செயநின்ற பண்ணினுள்
செவிசுவை கொள்ளாது
நயம்நின்ற பொருள்கெடப்
புரிஅறு நரம்பினும்
பயன்இன்று மன்றம்ம காமம்...
(கலித்தொகை:25: 1–5)

# சிந்தியா

## பதில்கள்

**★ பெண்கள் அரைகுறையாக ஆடைகள் அணிந்து ஆண்களின் பார்வையைத் திசை திருப்புகிறார்களே சிந்தியா?**

இராசு இராமச்சந்திரன், இரத்தினபுரி.

பெண்கள் உங்களைத் திரும்பியே பார்க்க முடியாதபடி திருட்டு முழி முழிக்கும் உங்கள் காமாந்தகக் கண்களை முதலில் திருப்புங்கள். அவர்களும் உங்களைப் பார்க்கும்படியாக, நெருங்கும்படியாக, மனம்விட்டுப் பேசும்படியாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் புலம்பல் நின்றுவிடும்.

◀◀ ▶▶

**★ இலங்கை அரசாங்கமும்,நோர்வேயும், புலிகளும் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் இந்தியா அமைதிப் பேச்சு நடவடிக்கைகளுக்குள் நுழைய மறுக்கிறதே, ஏன்?**

ஆர். கோணேஸ்வரன், நுவரெலியா.

அந்த மூன்று தரப்பாருக்கும் நிலைமை விளங்கியிருக்கிறது. நம் பத்திரிகைகளுக்கும் அரை வேக்காட்டு ஆய்வாளர்களுக்கும்தான் இன்னும் சுடலை வெளிக்கவில்லை. சமாதானத் தீர்வுக்குத் தடங்கலாக இருப்பது சந்திரிகாவோ, ஜே.வி.பி.யோ, முஸ்லிம் காங்கிரஸோ அல்ல- ராஜீவ் காந்தியின் படுகொலை!

◀◀ ▶▶

**★ ஜனநாயகம்....?**

மொஹமட் பாரிஸ்,நுவரெலியா.

ஜனநாயகம் என்பது தனிப்பட்ட ஒவ்வொருவருமே மற்றவரை மதிக்க வேண்டும் என்பதே. தனிப்பட்ட நபரை தெய்வமாக்குவதல்ல.

◀◀ ▶▶

**★ சப்தஸ்வரங்களுக்குப் போட்டியாக 'ஐ' சானலில் அபூர்வ ராகங்கள் எப்படி?**

ராஜி செல்வராஜ், நானு ஓயா.

சென்ற வாரம் திடீரென்று பார்த்தவுடன் "சபாஷ்! சரியான போட்டி" என்றுதான் மனதுக்குள் தோன்றியது. ஆனால், இனி எப்போது எந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புவார்கள்? அல்லது ஒளிபரப்புவார்களா? என்பது கூட நிச்சயமில்லாததால் அதை வெளியே சொல்ல முடியவில்லை.

◀◀ ▶▶

**★ சிந்தியா, தலையைப் பிய்க்கிற மாதிரி ஒரு கடி சொல்வீர்களா?**

எம்.ஐ.எம். ஆஷாத், ஏறாவூர்.

சொல்லலாமே! தலையைப் பிய்த்து எறிந்து விட்டு உப்பு, மிளகாய்த் தூள் சேர்த்து எண்ணெயில் பொரித்து எடுக்கவும். அதன்பின் ஆறவிட்டு கடிக்கவும். நெத்தலி மீன் பொரியல் மிக ருசியாகவே இருக்கும்.

◀◀ ▶▶

**★ பகவதி, வில்லன் இரண்டில் எதற்கு வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது சிந்தியா?**

க. அந்தோணியம்மா, சீனக்குடா.


விஜய் இயக்குநர் விக்கிரமனோடு கொழுவினாராம், அஜித் லிங்குசாமி, சூர்யா ஆகியோருக்குத் திகதிகள் இல்லை என்றாராம் என்றெல்லாம் கேள்விப்படும் போதே இருவரும் எங்கோ பிழை விடுகிறார்கள் என்று யோசிக்க வைத்தது. இரு படங்களும் அதை நிரூபித்திருக்கின்றன.

◀◀ ▶▶

**★ சிந்தியா, ரமணா எப்படி?**

எம். மோகன், மட்டக்களப்பு.

இதிலும் நம்ப முடியாத செயற்கைத் தன்மைகள் பல இருந்தாலும் இயக்குநர் முருகதாஸ் தன்னிடம் திறமை இருப்பதை நிரூபித்திருக்கிறார். விஜய்காந்திற்கு டூயட் தராமல் விட்டதற்கே அவருக்குத் தனியாக மாலை போடலாம்.



◀◀ ▶▶

**★ நெடுந்தீவில், யாழ்ப்பாணத்தில் மாற்றுக் கட்சி அலுவலங்கள் இருக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்வது உண்மையில் பொதுமக்கள்தானா?**

டி.ஏ. ஜீவன், கொழும்பு 13.

பொதுமக்கள்தான்... பொதுமக்களேதான்! ஈராக்கில் தொண்ணூறு வீதத்திற்கு மேல் மக்கள், தங்களுக்கு சதாம் ஹூசைன் மட்டுமே தலைவராக இருக்க வேண்டும் என்று சொல்வதை நம்பும் நீங்கள் இதை நம்ப மாட்டீர்களா!

◀◀ ▶▶

**★ தொலைக்காட்சியில் நீங்கள் ஆவலோடு பார்க்கும் நிகழ்ச்சி எது?**

அலாவுடீன் பாபு, திருகோணமலை.

மதன் நடத்துகிற ஒரு திரை விமர்சன நிகழ்ச்சியில் நடுநடுவே விடப்படும் விளம்பர இடைவேளையைக் குறிப்பிடுவதற்கு, "இப்போது நீங்கள் மிக ஆவலோடு எதிர்பார்க்கும் கட்டம்" என்று சொல்கிறார். ஒரு நையாண்டிக்காக அவர் அதைச் சொன்னாலும், உண்மையில் பெரும்பாலான நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, நாம் அந்த இடைவேளை வருவதைத்தான் அதிகம் எதிர்பார்க்கும்படியிருக்கிறது.

◀◀ ▶▶

**★ எனது நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அந்தப் பெண்ணும் அவனைக் காதலிக்கிறாள். ஆனால், பெண் வீட்டில் அவளுக்கு வேறொரு மாப்பிள்ளையைப் பேசி இருக்கிறார்கள். இதைப்பற்றி நீங்கள் சொல்வது என்ன? உங்கள் பதில் தெளிவாக இருக்கட்டும்.**


சு.ஹேமச்சந்திரன், திருப்பெருந்துறை.

நானென்ன, உலகமே மிகத் தெளிவாகச் சொல்லும். இது ஒரு காதல் கதைதான்!

◀◀ ▶▶



# என் கையில் ஒரு யுத்தம்



"எனது கையில் ஒரு யுத்தமே தங்கியிருக்கிறது" இப்படிச் சொல்கிறார் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர் ஹான்ஸ் பிலிக்ஸ்.

ஈராக் வசமுள்ள நாசகார ஆயுதங்கள் தொடர்பாகப் பரிசோதனை செய்ய ஐ.நா. சபையினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இவர் தான்.

இந்தக் குழு தற்போது ஈராக்கில் அதன் பணியைத் தொடங்கியிருக்கிறது. இவர் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையில் பல்லாயிரக் கணக்கான ஈராக் மக்களின் உயிர் தங்கியிருக்கிறது.

ஈராக்கிடம் நாசகார ஆயுதங்கள் இருப்பதாகவோ அல்லது ஆயுதக் கண்காணிப்புக்கு ஈராக் இடைஞ்சல் கொடுக்கிறதாகவோ இவர் வாய்தவறிச் சொன்னாற் கூடப் பாக்தாத் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகியிருக்கிறது.


ஆனால், இவர் ஆயுதக் கண்காணிப்பில் ஈடுபட்டு அறிக்கை சமர்ப்பிக்கும் காலம் வரை பொறுமை காக்கும் நிலையில் அமெரிக்கா அதிபர் புஷ் இல்லையெனத் தெரிகிறது.

எவ்வாறெனினும், முன்னைய காலங்களில் ஆயுதக் கண்காணிப்பு என்ற பெயரில் சென்று உளவு பார்த்தவர்களைப்போல் இல்லாது தான் நேர்மையாகத் தனது பணியை மேற்கொள்ளப் போவதாகக் கூறுகிறார் ஹான்ஸ் பிலிக்ஸ்.

# எலிகள் பட்டாளம்

சமையல் பாத்திரமொன்றில் காணப்படும் திரவ உணவுப் பொருள் ஒன்றை எலிகள் கூட்டமாக வந்து உண்ணுவதைக் கச்சிதமாகத் தனது கமெராவுக்குள் அடக்கியிருக்கிறார் ஒரு புகைப் படக் கலைஞர்.

# சில்லறைக் கம்பியூட்டர்




கம்பியூட்டர்கள் சைக்கிள் லக்கேஜில் வைத்துக் கட்டிக் கொண்டு செல்லுமளவுக்கு மலிவான பொருளாகப் போய்விட்டது. அதுவும் ஒன்று இரண்டல்ல, சுமார் 20 கம்பியூட்டர்களைத் தனது சைக்கிளில் வைத்துக் கட்டிக் கொண்டு விற்பனைக்காகச் செல்கிறார் இந்தச் சீன வியாபாரி.

பேஜின் நகருக்கு சமீபமாகவுள்ள கைத்தொழிற் பேட்டையொன்றில் தயாரிக்கப்படும் கம்பியூட்டர்களை இவ்வாறு வியாபாரிகள் வந்து சில்லறையாகக் கொள்வனவு செய்து கொண்டு செல்கிறார்கள்.




X என்பது அணு ஆயுதத்திற்கு எதிரான குறியீடு. வடக்கு ஜேர்மனியிலுள்ள லாஸ் என்ற இடத்திற்கு அணு ஆயுத உற்பத்திப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்ளைத் தடுப்பதற்காக வீதிகளை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவரை ஜேர்மன் பொலிஸார் தூக்கிச் செல்கின்றனர்.

இந்தக் கிராமத்திற்கு 12 கொள்கலன்களில் அணுக்கழிவுகள் எடுத்துச் செல்லப்பட்டன. இதனைத் தடுக்க ஆர்ப்பாட்டம் செய்த பலரைப் பொலிஸார் கைது செய்தனர்.

# எதிர்ப்பு

அணு ஆயுதங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் எந்தளவு உத்வேகத்துடன் நடைபெற்றாலும் அத்தகைய பயங்கர ஆயுதங்களின் உற்பத்தி உலகில் குறைந்தபாடில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெரும்பாலானவை அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கின்றன. அணு ஆயுதங்களுக்கு எதிரான செயற்பாட்டாளர்கள் ஐரோப்பாவிலேயே பெருவாரியாக இயங்குகின்றனர்.



# புட்போல் சிலை

அரசியல் தலைவர்களுக்கு மட்டும்தானா சிலைகள் அமைக்க வேண்டும்? பிறேசில் மக்களால் வெகுவாக நேசிக்கப்படும் அந்த நாட்டு உதைபந்தாட்ட அணி வீரர்களின் உருவங்களை மண்ணினால் சிலையாக வடித்திருக்கிறார் இந்தக் கலைஞர்.

பிறேசிலின் தலைநகரான றியோடி ஜெனிரோவுக்குச் சமீபமாகவுள்ள கொப்பகபானோ கடற்கரையில் இந்தச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

லியோ பெலல்டோ என்ற கலைஞர் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இந்தக் காரியத்தைச் செய்து முடித்திருக்கிறார். றொனால்டோ உட்பட பிறேசில் அணியின் நட்சத்திர வீரர்கள் சகலரது உருவங்களும் இவ்வாறு சிலையாக வடிக்கப்பட்டுள்ளன.




## உடைகளைக் கழற்றி வீசினார் சிம்ரன்

'இனிது இனிது காதல் இனிது' என்ற பெயரில் ஒரு படம் தயாராகி வருகிறது. இந்தப் படத்தில் சிம்ரன் ஒரே ஒரு பாடல் காட்சியில் தோன்றுகிறார்.

கதாநாயகன் ஜெய் ஆகாஷ், கதாநாயகி புதுமுகம் நேத்ரா ஆகிய இருவரும் கல்லூரி மாணவ-மாணவிகளுடன் கோவாவுக்கு உல்லாசப் பயணம் செல்கிறார்கள். வழியில், கவர்ச்சிகரமான சிம்ரனைப் பார்க்கிறார்கள். அவரைப் பார்த்து மாணவர்கள் கை அசைக்கிறார்கள். பதிலுக்கு சிம்ரன் காற்றிலேயே முத்தத்தைப் பறக்க விடுகிறார்.

மாணவர்கள் கிறங்கிப் போகிறார்கள். அவர்களுக்கு மேலும் போதையூட்டும் வகையில், சிம்ரன் அணிந்திருந்த உடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி வீசினார். "நான் புத்தம் புது திரைப் படம்தான் என்னை முத்தமிட்டு திரையிடடா" என்று கவர்ச்சிகரமாகப் பாடி ஆடினார்.

## ஒரு 'ஸ்திரீயின்' சோகம்

'ஸ்திரீ' என்ற செக்ஸ் படத்தில் சுமா ரங்கநாத் நடித்த படுக்கை அறைக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அந்தக் காட்சிகளை நீக்க வேண்டும் என்று தன்னை மிரட்டுவதாக, சுமா ரங்கநாத் மீது தயாரிப்பாளர் புகார் கொடுத்திருக்கிறார்.

'மாநகர காவல்', 'புதுப்பாட்டு', 'குறும்புக்காரன்' ஆகிய படங்களில் நடித்தவர் சுமா ரங்கநாத். தமிழ்ப் பட உலகில் மார்க்கெட் இழந்த இவர், தனது பெயரை 'சுமன் ரங்கநாத்' என்று மாற்றம் செய்து கொண்டு இந்திப் படத்தில் நடித்தார்.

'ஸ்திரீ' என்ற படத்தின் மூலம் அவர் தமிழ்ப் பட உலகுக்கு மறுபிரவேசம் செய்தார். இது ஒரு 'செக்ஸ்' படம். அழகான ஒரு இளம்பெண் ஒரு இளைஞனைக் காதலிக்கிறாள். அவனும் அழகாக இருக்கிறான். சந்தர்ப்ப சூழ்நிலையில் அவர்களின் காதல் தோல்வியில் முடிகிறது.

அவளுக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடக்கிறது. அவரை அவளுக்குப் பிடிக்கவில்லை. படுக்கை அறையில் கணவனுடன் இருக்கும்போது கூட அவள் காதலனை நினைத்துக் கொள்கிறாள். இதனால் அவளுக்கு ஏற்படும் பிரச்சனைகளே கதை.

படத்தில் சுமா ரங்கநாத் நடித்த சில படுக்கை அறைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. கணவன் வேடத்தில் நடிக்கும் விவேகானந்த், காதலர் வேடத்தில் நடிக்கும் தீரஜ் ஆகிய 2 நடிகர்களும் சுமா ரங்கநாத்துடன் படுக்கை அறைக் காட்சிகளில் நடித்து இருக்கிறார்கள்.

நேரடித் தமிழ்ப் படமான 'ஸ்திரீ' இந்தியில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது. படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து படம் திரைக்கு வரும் நிலையில் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சுமா ரங்கநாத் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவன அதிபர் ஒருவரைத் திடீர் திருமணம் செய்து கொண்டார். 'ஸ்திரீ' படத்தில் நான் நடித்த படுக்கை அறைக் காட்சிகளை வெட்டி விடுங்கள். அந்தக் காட்சிகள் திரையில் வரக் கூடாது என்று தயாரிப்பாளர்களை அவர் வற்புறுத்தி இருக்கிறார். அதற்குத் தயாரிப்பாளர்கள் மறுத்துவிட்டனர்.

படுக்கை அறைக் காட்சிகளை நீக்காவிட்டால், உங்கள் மீது வேறு மாதிரி நடவடிக்கை எடுப்பேன் என்று சுமா ரங்கநாத் தயாரிப்பாளர்களை மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி 'ஸ்திரீ' படத்தின் தயாரிப்பாளர்கள் செந்தில்குமார், சங்கர் ஆகிய இருவரும் பிலிம் சேம்பரிலும், தயாரிப்பாளர்கள் சங்கத்திலும் புகார் செய்திருக்கிறார்கள்.





ஆர்த்தி அகர்வால்

★ 'சூரி' படத்தில் மெயின்கார்டு கேட் மணிவண்ணன் என்ற ரோலில் நடிக்கிறாராம் பார்த்திபன். இதன் ஹீரோ விக்னேஷ், ஹீரோயின் உமா. ஷங்கரின் உதவியாளர் செல்வன் இயக்கி வரும் இப் படத்தின் பெரும்பகுதி படமாக்கப்பட்டுவிட்டதாம். வித்தியாசமான கோணத்தில் காதலைச் சொல்லப்போகும் படமாம் இது. வித்தியாசத்தைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

★ வாய்ப்பு இல்லாமல் தவிக்கும் நடிகைகளுக்கு ஆதரவு அளிக்க நினைத்து தான் நடிக்கும் படங்களில் காமெடி ட்ராக்கில் தன்னுடன் ஜோடி சேரும்படி அழைக்கிறாராம் விவேக். இப்படித்தான் 'தரீ ரோசஸ்' படத்தில் தன்னுடன் ஜோடி பா(ஆ)டும்படி மும்தாஜைக் கேட்க, அவரோ 'நோ' சொல்லிவிட்டாராம்.

★ தான் எதிர்பார்த்த அளவுக்கு சமீபத்திய தன் படங்கள் ஓடாததால் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறாராம் கமல். 'அன்பே சிவம்' படத்தில ஐந்து கோடி ஒப்புக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்பு எட்டு கோடி வாங்கி வந்தார்.

★ அது என்னவோ காயத்ரி ஜெயராமுக்கு செகண்ட் ஹீரோயின் வேஷமே கிடைக்கிறது. 'ஸ்ரீ' படத்தில் அவருக்கு துக்கடா ரோல்தான். 'ஏப்ரல் மாதத்தில்' படத்தில் செகண்ட் ரோல். இப்போது 'வசீகரா' படத்திலும் விஜய்யுடன் செகண்ட் ரோலில் வருகிறார்.

★ மும்தாஜை ஹீரோயினாகப் போட்டு கும்மென்று ஒரு படத்தை எடுக்க முடிவு செய்துள்ளார் ஆஷ்கர் பிலிம்ஸ் ரவிச்சந்திரன். மும்தாஜுக்கேற்ற நல்ல சதைப்பிடிப்பான ஸ்டோரி கதையைத் தேடி வருகிறார்களாம்.

★ பழைய பார்ட்டிகளான சீதாவும், அம்பிகாவும் அம்மா, அண்ணி, அக்கா வேடங்களில் வெளுத்துக்கட்ட ஆரம்பித்திருப்பதால், அவர்களைப் போல கிடைக்கிற ரோல்களில் நடித்துக் கலக்க முடிவு செய்துள்ள கௌதமிக்கு 'அன்பே சிவத்தில்' அது போன்ற ஒரு ரோல் கிடைத்துள்ளது. இதையடுத்து ரஜினியின் அடுத்த படத்திலும் தலையைக் காட்டிவிட கௌதமி பிரயத்தனம் செய்து வருகிறார். அடிக்கடி ரஜினிக்கு போன் போட்டு தொல்லை தந்து வருகிறார்.

★ பாலு மகேந்திராவின் 'ஜூலி கணபதி' படத்தில் சரிதாவுக்கு மிக முக்கியமான கேரக்டர் தரப்பட்டுள்ளது. மிகவும் வெயிட் போட்டுவிட்ட உடம்பை வைத்திருந்தாலும் மிக நன்றாக நடித்து வருகிறாராம்.

★ 'தம்' அடிப்பதைக் குறைத்துக் கொண்டு விடலாமா என்று யோசித்து வருகிறார் ஷகிலா. செயின் ஸ்மோக்கராக இருப்பதால், உடம்பு குண்டக்க மண்டக்க பெருத்து முன்பு மாதிரி ஓடியாடி உழைக்க முடியவில்லை. சமீபத்தில் டாக்டர்கள் அறிவுரைப்படி குறைத்த நடிகை மும்தாஜ்.

★ முன்னாள் காதலர்களான அப்பாஸும், சிம்ரனும் அடிக்கடி தொலைபேசுகிறார்களாம். பரமகுடித் தலைவருக்குத் தெரியுமோ, தெரியாதோ?

## விஜய் சினேகா இணையும் 'வ...

'நினைத்தேன் வந்தாய்', 'பிரியமானவளே' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கியவர் செல்வபாரதி. அடுத்து இவர் விஜய்யை வைத்து ஒரு புதிய படம் இயக்குகிறார். படத்துக்கு 'வசீகரா' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இதில், விஜய் ஜோடியாக ... நடிக்கிறார். இருவரும் ஜோடி சேரும் முதல் படம் இது. இன்னொரு ... காயத்ரி ஜெயராம் நடிக்கிறார். விஜய் நடித்த பூவே உனக்காக, துள்ளாத ம... பிரியமானவளே ஆகிய வெற்றிப் படங்களுக்கு இசையமைத்த எஸ்.ஏ. ராஜ்... படத்துக்கு இசையமைக்கிறார்.

முகப்பில்

ஸ்ரீகாந்த்
சினேகா

மாதவன்

மீனா

# சினி ரிப்போர்ட்



கமல்-கிரண்
படம்: அன்பே சிவம்

## 'துள்ளுவதோ இளமை' நாயகனின் 'காதல் கொண்டேன்'

'துள்ளுவதோ இளமை' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான தனுஷ் அடுத்து நடிக்கும் புதிய படம் 'காதல் கொண்டேன்'.

இந்தப் படத்தில் தனுஷ் ஜோடியாக, மும்பை அழகி சோனியா நடிக்கிறார். தனுஷ்- சோனியா சம்பந்தப்பட்ட பாடல் காட்சி பிரசாத் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

படத்தின் கதைப்படி தனுஷ், என்ஜினியரிங் கல்லூரியில் படிக்கும் மாணவர். அவர் தான் உண்டு தன் படிப்பு உண்டு என்று இருப்பவர். யாருடைய பேச்சுக்கும் போகமாட்டார். அதே கல்லூரியில் படிக்கும் மாணவி சோனியா. அழகிலும், படிப்பிலும் அவள்தான் முதல் மாணவி. அவளிடம் பழகுவதற்காக எல்லோரும் ஆர்வமாக இருந்தார்கள். ஆனால், அவள் எல்லோரையும் ஒதுக்கி வைத்தாள்.

தனுஷுக்கு எப்படியாவது சோனியாவுடன் பழக வேண்டும் என்று ஆசை. அவனது ஆசைக்கு அங்கீகாரம் கிடைத்தது. சோனியா அவனிடம் நெருங்கி வந்தாள். அன்பாகப் பழகினாள். மற்ற மாணவர்கள் பொறாமையாகப் பார்த்தார்கள். ரொம்பவும் சந்தோசப்பட்ட தனுஷ், "தொட்டுத் தொட்டுப் போகும் தென்றல் தேகம் எங்கும் வீசாதோ" என்று பாட்டுப் பாடி ஆடினார்.

இப்படியொரு காதல் காட்சி ஆர்.கே. புரொடக்ஷனின் "காதல் கொண்டேன்" படத்துக்காகப் படமாக்கப்பட்டது.

## 'பிரியமான தோழி'

விக்ரமன் இயக்கத்தில் ஏவி.எம். நிறுவனம் 'பிரியமான தோழி' என்ற படத்தைத் தயாரித்து வருகிறது. இந்தப் படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக ஜோதிகா, ஸ்ரீதேவி ஆகிய இருவரும் நடிக்கிறார்கள். முக்கிய வேடத்தில் ரமேஷ்கண்ணா நடிக்கிறார்.

வித்தியாசமான கதையமைப்போடு, அனைத்து தரப்பினரையும் கவரும் பல சிறப்பு அம்சங்களை இணைத்து தமிழ் திரையுலகுக்கு ஒரு மாறுபட்ட படமாக இதை உருவாக்குகிறார்கள்.

எஸ்.ஏ. ராஜ்குமார் இசையமைக்கிறார். படப்பிடிப்பு வருகிற 20ஆம் தேதி ஊட்டியில் தொடங்கி 20 நாட்கள் தொடர்ந்து நடைபெற இருக்கிறது.



மந்த்ரா

## மீரா ஜாஸ்மினின் கோபம்

'ரன்' தயாரிப்பாளர் மீது எக்கச்சக்க கோபத்திலிருக்கிறார் மீரா ஜாஸ்மின். ஏன்? தமிழில் சக்கைப்போடு போட்ட மாதிரியே மலையாளத்திலும் வசூலை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறது 'ரன்'. ஆனால் போஸ்டர்- பத்திரிகை விளம்பரங்களில் ஸ்டாம்ப் சைஸுக்குக் கூட மீரா படம் இல்லை. அதற்குப் பதிலாக மாதவன் படமும் திலீப் படமும் இடம் பெற்றிருக்கின்றன.

என்னப்பப்பா... குழப்பறீங்க என்கிறீர்களா?

திலீப் நடித்த 'மீசை மாதவன்' என்ற படம் கேரளாவில் இதுவரை எந்தப் படமும் பண்ணாத வசூலை வாரிக் கொடுத்திருக்கிறது. ஸோ "மீசை மாதவனையும் மீசையில்லாத மாதவனையும் ஜனங்கள் ஸ்வீகரிச்ச" என்று இரண்டு பேர் படத்தையும் போட்டு விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள் தயாரிப்பாளர் தரப்பு!

அதனாலென்ன... ஒரு ஓரத்தில் மீரா படத்தைப் போட்டால் குறைந்தா போய்விடுவார்கள்? நியாயமான கேள்விதான். ஆனால், மீராவுக்கு அங்கே நிறைய ஆண்டி செண்டிமெண்ட் கதைகள் உண்டு. அவர் நடித்து இது வரை ஒரு படம் கூட ஓடவில்லையாம். அதற்குப் பயந்துதான் மீராவை விளம்பரப் படங்களில் இருட்டடிப்புச் செய்கிறார்கள்.

சரி... இப்பதான் ஓடுதே... போட்டால் குறைஞ்சா போயிடுவீங்க?! பாவம் மீரா!

## சம்யுக்தாவை வைத்து வியாபாரம் செய்யும் முயற்சி
## 'மம்முட்டி அப்செந்தில்!'



மலையாளத்தில் அசைக்க முடியாத சூப்பர் ஸ்டார்கள் என்று சொல்லப்பட்ட மம்முட்டி- மோகன்லால் இருவரின் நிலைமையும் இப்போது கவலைக்கிடமாக இருக்கிறது.

திலீப், குஞ்சாக்கோ போபன் என்று இளவட்டங்கள் களம் இறங்கிய பிறகு ஆட்டம் கண்ட இவர்களது நிலை... ஷகிலாவின் என்ட்ரிக்குப் பிறகு படு பாதாளத்துக்குப் போய்விட்டது. டென்ஷனாகி இருவரும் ஷகிலாவுக்கு எதிராகக் களமிறங்கும் அளவுக்கு அசைக்க முடியாத சக்தியாக இருக்கிறார் ஷகிலா.

இந்த நிலையில் சித்திக் இயக்கத்தில் மம்முட்டி ஒரு படம் நடித்து முடித்திருக்கிறார். பெயர் - 'க்ரோனிச் பேச்சலர்'. கதாநாயகி சம்யுக்த வர்மா! படம் முடிந்து இரண்டு மாதங்களாகியும் வியாபாரமாகவில்லை! 'பிட்டு' படங்களை விடக் கேவலமான விலைக்குக் கேட்கிறார்களாம்! என்னென்னவோ சொல்லியும் வியாபாரமாகாததால்... லேட்டஸ்டாக சம்யுக்தாவைச் சொல்லி வியாபாரம் பண்ண முயற்சி நடக்கிறது! எப்படி?

நவம்பர் 21ஆம் தேதி சம்யுக்த வர்மாவுக்கும் பிஜுமேனனுக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அதைக் கணக்கில் வைத்துக் கொண்டு 'சம்யுக்தா நடித்த கடைசிப் படம்' என்று பத்திரிகையில் விளம்பரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியும் வியாபாரமாகவில்லை என்பதுதான் சோகம்!

## பற்றிக் கொண்டது
## காதல் 'தீ'யா...? வதந்'தீ'யா?

கோடம்பாக்க வட்டாரத்தில் தற்போதைய லேட்டஸ்ட் கிசுகிசு சினேகா-ஸ்ரீகாந்த் காதல் களியாட்டங்கள்தானாம். கமல்-சிம்ரன் மேட்டருக்குப் பிறகு அதிகமாய் சிலாகிக்கப்படுவதும், அலசப்படுவதும் இவர்களின் லேட்டஸ்ட் காதல்தானாம்!

'ஏப்ரல் மாதத்தில்' ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போனால் இதை உறுதி செய்து கொள்ளலாம் என அந்தப் படத்தில் பணிபுரியும் அத்தனை நபர்களும் சொல்கிறார்களாம்.

இருவரிடத்திலும் காதல் தீ பற்றிக் கொள்ள ஒரு சில விஷயங்களை மேற்கோளிடுகிறது கோலிவுட்டில கிசுகிசுவுக்குப் பெயர்போன வட்டாரங்கள்.

இருவருக்கும் ஒரே நேரத்தில் அடிபட்டது. இருவரும் மருத்துவமனையில் இருந்தபோது பரஸ்பரம் பரிமாறிக் கொண்ட நல விசாரிப்புகள். முன்னதாகவே குணமாகிவிட்ட ஸ்ரீகாந்த் அடிக்கடி சினேகாவைச் சந்தித்து நலம் விசாரித்தது. 'ஏப்ரல் மாதத்தில்' தயாரிப்பாளர் கதாநாயகியை மாற்றிவிடலாம் என்றபோது சினேகாதான் வேண்டும் என்று ஸ்ரீகாந்த் அடம் பிடித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரே செட்டில் இருந்து கொண்டு பத்தடி தொலைவில் இருவரும் பல மணி நேரம் செல்போனில் கிசுகிசுத்துக் கொண்டிருப்பது என காதல் தீ பற்றிவிட்டதற்கான காரணங்கள் அடுக்கடுக்காய் அடுக்கப்படுகின்றன.

இது பற்றி ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஸ்ரீகாந்திடம் நிருபர்கள் கேட்டபோது, அப்படியா என்று செயற்கையாய் சமாளித்த ஸ்ரீகாந்த், "அப்படியெல்லாம் எதுவுமில்லை. எனக்கும் சினேகாவுக்கும் காதலும் இல்லை, கத்தரிக்காயும் இல்லை. சினேகா குணமாக 10 நாள்கள்தான் ஆகும் என்ற காரணத்தால்தான் அவரை மாற்ற வேண்டாம் என்று தயாரிப்பாளரிடம் சொன்னேன்" என்று வழக்கமான பாணியில் மறுத்தாராம்.

சினேகா தரப்பு மூச்சுவிடாமல் மௌனமாய் இருக்கிறது.

எது எப்படியோ பற்றிக் கொண்டதாய் சொல்லப்படும் நெருப்பு உண்மையிலேயே காதல் தீயா, அல்லது வதந் 'தீ'யா என்பது விரைவில்... அதாவது 'ஏப்ரல் மாதத்தில்' வெளிவருவதற்குள் தெரிந்துவிடுமாம்!



## விடியலைத் தேடி விரைந்திடு

விழித்திரு விழிகளே
விரக்தியாய் மூடாதே
உயிரே நீ தடுமாறாது
உள்ளத்திலே வீற்றிரு....!

பாயும் வேல்கள்
பாய்ந்து கிழிக்கட்டும்
சுட்டெரிக்கும் நாவும்
சுடர்விட்டு எரிக்கட்டும்...!

தூற்றுவார் தூற்றட்டும்
போற்றுவார் போற்றட்டும்
வருபவை வரட்டும்
செல்பவை செல்லட்டும்....!

வரவு இருந்துவிட்டால்
செலவும் இருக்கட்டுமே
வாசல் இருந்து விட்டால்
பூசலும் இருக்கட்டுமே!

பயம் என்பது
கோழையின் உடைமை
தூரவே தூக்கி எறிந்து
துணிவைக் கைப்பிடி....!

கிழக்கு வெளிக்காது
கீழ்ப் புதையுமா சூரியன்
என்றேனும் விடிவுவரும்
எதிர்பார்த்து காத்திரு...!

ஒளி வீசும் எதிர்காலத்திற்காய்
தொடரட்டும் உன் பயணம்
கல்லும் முள்ளும் உன்
கால்களுக்கு மெத்தையாகட்டும்...!

விரைந்திடு-உன்
விடியலைத் தேடி
அது உன்
அருகிலேயே உள்ளது...!

றோஸ், பருத்தித்துறை.

## உயர்ந்த பொருட்கள்

அழகான பொருட்களை
ஆண்டவன்
உயரத்தில் வைத்துவிட்டான்.

உயரே பார்க்கின்றேன்
ஒளி வீசும் சந்திரன்
ஓடித் திரியும் முகில் கூட்டம்
மின்னிச் சிமிட்டும்
நட்சத்திரங்கள்.

இரவுக்குள்
வானத்தில் ஒரு
நாடக மேடை
நீலத்திரையில்
தாரகைகளின்
நாட்டிய அரங்கேற்றம்

விடிந்தால்
வைகறைப் பொழுதில்
வாழ்த்துச் சொல்லும்
சுந்தரச் சூரியன்
சிவப்பாய் செம்பழமாய்
தொட்டுப் பார்க்க முடியா
தூரத்தில் நிற்கின்றான்.

வண்ணத்துப் பூச்சிகளின்
வர்ண ஊர்வலம்
வானத்தில் ஒரு வசந்தவிழா

பாசப் பறவைகளின்
நேசச் சில்மிசங்கள்
வேசம் இல்லா
வெள்ளித்திரை காட்சிகள்.

இடி கூட
இடிக்கின்றபோது
எங்கோ கேட்கும்
மேள ஒலிதான்
இங்கு படிகின்ற போதுதான்
பாதிப்புகள் அதிகம்

இத்தனையும் உயர வைத்து விட்டு
மனிதனை மட்டும்
மண்ணில் வைத்த
காரணம் எதுவோ!

ஓ இறைவனே!
தாழ்ந்த மனம் கொண்டதால்தான்
மனிதனை தரையில்
வைத்துவிட்டாய் போலும்.

நா. இளங்கோபன்,
பசறை.

## வளர விடுங்கள்...

எம் தேசத்தின்,
பூக்களைப் பறிக்காதீர்கள்
புன்னகையை அழிக்காதீர்கள்
சின்னக்,
குருத்துக்களை கருக்காதீர்கள்
குருதியில் நனைக்காதீர்கள்
மலரும்,
மொட்டுக்களைக் கிள்ளாதீர்கள்
மொத்தமாய்க் கொல்லாதீர்கள்
வீசும்,
வாசத்தை சிதைக்காதீர்கள்
மோசத்தை விதைக்காதீர்கள்
வளரும்,
பிஞ்சுகளை நசுக்காதீர்கள்
வஞ்சத்தை விதைக்காதீர்கள்
நாளைய தேசத்தின் நேசத்துக்குரிய
வாரிசுகளின்,
உரிமையைப் பறிக்காதீர்கள்
சிறகினை முறிக்காதீர்கள்.

விஜயா.எவ், யாழ்ப்பாணம்.

## ஒரு இளைஞனின் குமுறல்

ஒரு இளைஞனின் குமுறல்
வேதனை தீயிலே
வெந்து நொந்து
கொண்டிருக்குது மனம்

பல்கலைக்கழகம் வரை பாதம்
பதித்த என் கால்கள்
பயணிக்க மறுக்குதிப்போ.

ஆரத்தழுவிய என் அன்னை
வாரிக் கொட்டுகிறாள்
வார்த்தைகளை இப்போ.

எத்தனை நாளைக்குத்தான்
என் நண்பனின்
உதவி

பயிலை மட்டும் தூக்கி
தூக்கி பாதி வயசும்
போகுது.

ருசித்துச் சாப்பிட்ட என் வாய்
அடங்கிப் போனது.
வயிறு மட்டும் பசிக்கு தேடுது

சேமித்து வைத்த கண்ணீரை
மட்டும் பூமிக்கு விடுகின்றன
என் கண்கள் தனிமையிலிருக்கும் போது

சொந்தங்களும் விரட்டுது
சுற்றங்களும் வெறுக்குது
இப்படியே என் வாழ்வு...?

இராமச்சந்திரன் தவேந்திரன்,
ஹாலி-எல.

## நீயில்லாத போதுன் நினைவுகள் சுகம்

யார் தான்!
தெரிந்திருந்தார்கள்.
எவர்தான்!
அறிந்திருந்தார்கள்
ஒருவருக்குமே...!-அந்த
ஞானமில்லை...

உன் கன்னக் குழியை
இரசிக்கும் அவசரத்தில்
புன்னகைப்
புதைகுழியில் புதைந்திருந்த
அர்த்தங்களைப்
புரியாது விட்டதுவும்-என்
மடத்தனம் தான்!

என்னைத் தவிர...
எவருக்கும் நீ!
அழகியில்லை-உன்னைக்
கவரும் எதுவும்
என்னிடமும் இல்லை.

பார்த்துக் கொண்டதில்
சுகம்- கொஞ்சமாய்
மொழிகள்
பகிர்ந்து கொண்டதில்
சுகம்.

பக்கமிருந்தும்
தொட்டுக் கொள்ளாமல்
பழகியதில் சுகம்
பின்...

விட்டுப் பிரிந்து-தனியே
சில துளிகள்
அழுததிலும் சுகம்.

ஒத்துக் கொள்கிறேன்!
எப்போதும்-நீ என்னை
நேசித்தாய் என்றும்
ஒருபோதும்
நீ என்னைக்
காதலிக்கவில்லை
என்றும்...

சம்பூர் எம்.
வதனரூபன்.

## தேன் கிண்ணம்

### விரக தாபம்!

உன் இளமை
என் ஆசான்;
அதன் அசைவுகள்
என் மொழிகள்!

பெற்றுக் கொண்டேன்
புதிய பாடம்;
கற்றுக் கொண்டேன்
உன் கல்லூரியிலே!

என் ஏடுகள்
உன் விழிகள்தான்;
என் பாடங்கள்
உன் இளமையின்
இன்பராகங்கள்!

விரக தாபத்திலே
வெந்து சாகிறேன்;
அன்னமே- நீ
இன்னுமேன்
அக்கினிக் குழம்பாய்
கொதிக்கிறாய்?

என் தலையிலுள்ள
எழுத்துக்கள்- என்
கண்களுக்கு
எட்டவில்லை;
நீயாவது-உன்
கண்ணாடி போட்ட
கண்ணாலே...
வாசித்துச் சொல்!

எவள் பெயரை
இறைவன்- என்
தலையில்
எழுதியிருக்கிறானென்று!

பொத்துவில்
ஏ.எல்.ஏ. முகம்மத்.

## தெரியாது

கவியொன்று
இறந்தது அது கவிஞனுக்கு
தெரியாது
நிஜமொன்று
நிர்மூலமானது அது
நிலவுக்குத் தெரியாது

செல்வம்
சிதைந்து போனது அது
முதலாளிக்குத் தெரியாது
அறிவு அழிந்து போனது
அறிஞனுக்குத் தெரியாது.

எழுத்து
விழுந்துபோனது
இலக்கியத்திற்கு தெரியாது
இலக்கியம்
இலகிப் போனது
எழுத்தாளனுக்கு தெரியாது

ஆயுள்
முடிந்து போனது
யாருக்குமே தெரியாது
மனிதம்
மடிந்து போனது
மனிதனுக்குத் தெரியாது

கதை
காணாமற் போனது
நாவலுக்குத் தெரியாது
தெரியாது
என்பதே இவர்கட்கு தெரியாது
தெரிந்தது என்பதும்
அறியாது நான்
சொன்னதே புரியாது.

ஒட்டமாவடி எம்.பீ நளீம்.

## உயிரானவளே...!

பெண்ணின் மென்மையான
இதயத்தை வன்மையாக்குவது
சில ஆண்களின்
பொய்மை! -ஆனால்
என் உண்மையின்...
நேர்மையால் -உன்
மென்மையான இதயத்தை...
புண்படுத்தி
வன்மையாக்காமல்,
இனிமையான இதயமாக்கி.
மெய்மையான நம் வாழ்வில்.
வைத்திருப்பது என் கடமை!

மா.பராசசிங்கம் (ரவி),
உடையார்கட்டு.

## சோக ரணங்கள்

சோக ரணங்களை
சுவாசித்துக் கொண்டிருக்கிறது
இதயம்!
நோன்பே! உன் வரவில்
ஆத்மா ஆனந்தப்படுகிறது
வேதனையும்படுகிறது!

பாவ மலைகளைப் பெயர்த்தெடுத்து
புண்ணிய சிகரமெழுப்பும்
கன்னிய அருளுக்காய்
ஆனந்தம் பிறக்கிறது!

ஈமானைக் கொன்றுவிட்டு
ஈகையைக் கொளுத்தி
அனாச்சாரத்தில்
அஸ்தமித்துக்கொண்டிருக்கும்
பொழுதுகளில்
உன் பொன் வரவு
வேதனையைப் பிரசவிக்கிறது!

புன்னகைத்துக் கொண்டிருக்கும்
பிறைக் கீற்றில்
ரணங்கள் மாறி முகங்களில்
புன்னகை பூத்திருக்கின்றதே!
அந்த சந்தோஷ முகவரி
உன் வரவில் மட்டும்தான்!

வீட்டிலும் நாட்டிலும்
குடிலிலும் மாடியிலும்
பேதமில்லாமல்
ஒப்பாரி வைக்கிறது
பிரச்சனைகள்!

ஆகாயம் முட்டும்
விலையேற்றமும்
கர்ஜிக்கும் போரபாயமும்
வேரூன்றிப் போன வரிகளும்
கல்லறையாக்கப்படும்
சுதந்திரமும் எங்களுக்குள்
முகாரி இசைக்கிறது!

அருள் நோன்பே!
உன்னிந்த உயிர்ப்பிலாவது
கஷ்டங்கள் மாணிக்க
துன்பங்கள் துண்டாகி
ஐக்கியம் ஓங்கிட
அருள் தந்துவிடு!

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.ஐ.எம். ஸாபிர்
வயது: 26
முகவரி:
முஜிபாஸ் ஜுவலர்ஸ்,
8ஏ, 1ம் குறுக்குத் தெரு,
புத்தளம்
பொழுது போக்கு:
பத்திரிகை. கிரிக்கெட்.



பெயர்: து. கோகுலன்
வயது: 18
முகவரி:
மணியவத்தை,
வ்திரி,
கரவெட்டி.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
பா.குமார
வயது: 28
முகவரி:
P.O.Box No. 4365
Doha, Qatar.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.

## நினைத்து, நினைத்து சிரிக்க

### தரமாட்டேன் போடா!



ஒரு மதுக் கடை சுந்தர். பக்கத்தில் குடித்துக் கொண்டிருந்த வயதானவரிடம் பணிவாக, "சிகரெட் பற்ற வைக்க கொஞ்சம் 'லைட்டர்' தர முடியுமா?" என்றான்.

"தர மாட்டேன் போடா! ராஸ்கல்!" என்றார் பெரியவர்.

"நான் இப்போது என்ன தவறாகக் கேட்டுவிட்டேன். எதற்காக இப்படிக் கோபப்படுகிறீர்கள்?"

"நீ இப்போது லைட்டர் கேட்பாய். பிறகு நாம் இருவரும் பிரண்ட்ஸ் ஆவோம். நீ எனக்கு பீர் வாங்கித் தருவாய். நிறையக் குடிப்போம். நீ தலைகீழ் ஆனபின் பஸ் பிடித்து போக முடியாமல், என் வீட்டுக்கு வந்து படுப்பாய். என் வீட்டில் இருக்கும் என் மகளோடு சினேகம் ஏற்படும். பிறகு என் மகள் கர்ப்பம் ஆவாள். உன்னைக் கல்யாணம் செய்யக் கேட்கும்போது நீ மறுப்பாய்!" என்று வயதானவர் அடுக்கிக் கொண்டே போனார்.

சுந்தர் இடைமறித்து, "சார் நீங்கள் சொல்கிறது மாதிரி ஒருவேளை உங்கள் பெண் கர்ப்பத்திற்கு நான் காரணமானால், கண்டிப்பாக கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்" என்றான்.

உடனே வயதானவர், கைதட்டிச் சிரித்து, "அவசியமே இல்லை. காரணம், நான் இப்போது உனக்கு லைட்டர் தந்தால்தானே என் மகள் கர்ப்பம் ஆவாள்." என்று குடிபோதையிலும் சர்வ ஜாக்கிரதையுடன் சொன்னார்.



"டேய்! இன்றைக்கு கிரிக்கெட் மேட்ச்... டிக்கெட் இருக்கு! வாறியா?" - என்றான் சிவா போனில்.

"முடியாது...இன்னைக்கு 'சுடர்மணி' வாசிக்கிறார். நான் வர முடியாது." என்றான் திலீப்.

ஒரு வாரம் கழித்து மீண்டும் சிவா போனில்,

"டேய்! இன்னைக்கு ஜேம்ஸ் பாண்ட் படம் ரிலீஸ்....டிக்கெட் இருக்கு போகலாமா?" என்றான்.

"முடியாது...இன்னைக்கும் 'சுடர்மணி' வாசிக்கிறார். நான் வர முடியாது" என்று பழைய பல்லவி பாடினான் திலீப்.

எரிச்சலடைந்த சிவா, யாரடா அது, சுடரமணி? அவன் அப்படி என்ன வாசிக்கிறான்?"

"அந்த 'சுடர்மணி' என்ன வாசிக்கிறான் என்று எனக்கும் தெரியாது. ஆனால் அந்த சுடர்மணி கச்சேரி வாசிக்கச் செல்லும்போதுதான் அவர் மகள் என்னை வீட்டிற்கு வரச் சொல்வாள்." என்று குட்டை உடைத்தான்.

## சிறப்புக் கவிதை



**கவிதை நெஞ்சங்களுக்கு!**

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக கவிதைகள் சிறியவையாக இருந்தாலும் படித்து முடித்ததும் மனம் அதிர்வுறும் வகையில் வந்து வீழ்ந்துள்ள நான்கு கவிதைகள் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக:

### உயிர் உள்ளவரை

பழக்கத்தில்
நெளிந்து
படுக்கையில்
புணர்ந்து
அலுத்து
சலித்துக் கொள்ளும்
பந்தம்
நமக்குள் வேண்டாம்.

நீ
யாருக்கேனும்
மாலையிடு
நான்
எவருக்கேனும்
மனையாளாகிறேன்.

உன்னால்
எனக்கு
தாலிவேண்டாம்
பூவோ
சேலையோ எப்போதாவது
முடிந்தால்
அன்போடு கொடு.

பார்க் பீச்
எங்காவது சந்தித்து
வெட்கம்
தயக்கம் விட்டு
நம்
சிரமங்களை
சுகங்களை
பகிர்ந்து கொள்வோம்
அந்த நேரத்திலாவது
கவலைகளைத் துரத்துவோம்.

என்றும்
புதுசாய்
மனசுகள் உறவாட
நம் காலம்
உள்ளவரை
காதலிப்போம் வா!

சாதனா.

### மிச்சம்

நைந்திருந்த என் காற்சட்டையின்
பின்பகுதி
எதிர்பாராமல் கிழிந்துவிட்ட ஒரு பிற்பகல்
இன்னும் எனக்கு நினைவிருக்கிறது

எல்லோரும் வெளிக்கிளம்பும்வரை
அலுவலக நாற்காலியில்
அசையாமல் இருந்ததும்,
'இன்' பண்ணியிருந்ததை எடுத்துவிட்டு
இருட்டும் வரை பஸ் நிறுத்தக் கிராதியில்
சாய்ந்து கொண்டே நின்றதும்
யோசனையில் இருப்பதுபோல்
பாசாங்கு பண்ணிக் கொண்டு
கைப்பையால் மறைத்து
புறங்கை கட்டிக் கொண்டதும்
வேண்டுமென்றே வெளிச்சம் குறைந்திருக்கும்
மேலத் தெருவை சுற்றிக் கொண்டு
வீடு வந்து சேர்ந்ததும்

விபரம் அறிந்த சகோதரியின்
வேதனை நிரம்பிய முகம்
நன்றாக நினைவிருக்கின்றன.

எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள
அந்தக் காற்சட்டை இல்லை.
இந்தக் கவிதை மட்டும் இருக்கிறது.

-இக்ராமுல்லாஹ்.

### சுவடுகள்

முருகன் கோவில் ஆலமர
நிழலும் பாசி படர்ந்த
தாமரைக்குள படிக்கட்டுகளும்
குடிநீர் எடுக்க வரும்
பொதுக் கிணறும்
கடக்க நேர்கையில்
இனம் தெரியா கூச்சம்.

தாலின்னு ஒண்ணு ஏறுனா
அது சிவசு மாமன் தாலியாகத்தான்
இருக்கணும் என்ற அக்காவும்
நீயில்லாமல் நானில்லையென்ற
சிவசு மாமாவும் திசைக்கு
ஒரு பக்கமாய்
திருமணமாகிப் போனார்கள்.
வார்த்தைகளை மட்டுமல்ல
காதலையும் கொன்றுவிட்டு எப்படி?

இவர்களுக்குத் துணைபோன
எந்தனின் இதயம் மட்டும்
பழைய இடங்களைப் பார்க்கும்
போது இன்னமும்
கூசித்தான் போகிறது.

ப. கவிதாகுமார்.

### பேட்டி

அந்திமத்தில்
முற்றுப் பெறாத டைரிக்காகவும்
அத்யந்த சினேகிதர்களுக்காகவும்
வெளுக்கப் போட்ட சட்டைப்பையில்
எடுக்கப்படாது நைந்து
துண்டுச்சீட்டாய்
செய்திகளிருக்கும் இன்னமும்
செத்தவர்களிடத்தில்.

பீறிடும் நிராசைகளின் புழுக்கத்தில்
நடுகர் பெயர்ந்து தெறிக்க
அழுகல் விழிகளில்
நிணம் சுரக்க
வாய்பிளந்து கிடக்கும்
பால் குத்தாத
நேற்றைய குழிகளும்
பூர்வகால தாழிகளும்

பேசிவிட்டு சொல்கிறேன்
எப்படி
அவர்கள் வாழ்ந்தார்களென்றும்
நாம்
எப்படி
இறக்கக் கூடாதென்றும்

- ஆதவன்.

### வசந்த காலம்

மொட்டை மரக்கிளைகள்
மொட்டுயர்த்துப் பூக்கும்
முறுவலிக்கும் இளவேனில்
கனி மரங்கள் எங்கும்
வட்ட நிலாச் சுகமளிக்கக்
குயிலிருந்து பாடும்
வசந்தவிழாக் காணவரும்
புத்தாண்டு மாதம்.

பூமரத்துச் சோலைகளில்
பரிவண்டு பாட
மாமரத்துக் கிளைகளிலே
மயிலிருந்து ஆடும்
புத்தாண்டு சித்திரை
புதுவசந்த காலம்
தென் பொதிகைத் தேரேறி
தென்றல் வரும் காலம்.

வேரில் பழுத்த பலா
வீதி வரும் காலம்
வெள்ளரியும் இளநுங்கும்
விரும்பியுண்ணும் காலம்
வேனில் விழா காமன் கொடை
நடக்குமொரு காலம்
வாசமல்லி பூமணக்க
வசந்தம் வரும் காலம்.

புத்தாண்டு புதுக்கணக்கு
தொடங்குமொரு காலம்
புதுவாழ்வு சித்திரையாள்
பொழிய வரும் காலம்
குற்றால நீர் அருவி
கொட்டவரும் காலம்
கோடை மழை நீர்மேகம்
கொண்டு தரும் காலம்.

யுக புருஷன் உருட்டுகிற
காலத்தேர் ஓட்டம்
பவ ஆண்டு போக ஒரு
யுவ ஆண்டு காணும்
பெயரிலேயே புத்திளமை
வைத்திருக்கும் ஆண்டு
பொழியவரும் காலமினி
பொற்காலம் ஆகும்.

ஞா. மாணிக்கவாசகன்.

## சிகரெட் பாவனைக்கும் தடுப்பூசி

புகைத்தலால் ஏற்படும் நோய்களைக் குணமாக்க உலகின் அனைத்து நாடுகளுமே ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான கோடி டொலர்களைச் செலவிடுகின்றன. பல இலட்சம் பேர் இறக்கிறார்கள். சிகரெட் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களால் இலாபம் அடைபவர்கள் அவற்றை உற்பத்தி செய்யும் கம்பெனிக்காரர்கள் மட்டும்தான். இதனால் சிகரெட் பாவனையைத் தடுக்க என்ன செய்யலாம்? என்று ஏகப்பட்ட ஆராய்ச்சிகள் நடக்கின்றன. அத்தகையை ஒரு ஆராய்ச்சி மகிழ்ச்சிகரமான முடிவைத் தருகிறது.



சிகரெட் புகைக்காமல் இளைஞர்களைத் தடுத்து நிறுத்தப் பயன்படும் தடுப்பூசியை செனோவா மருத்துவக் குழுவொன்று கண்டுபிடித்துள்ளது.

சிகரெட் புகைப்பவர்களில் 80 சதவீதம் பேர் டீன்ஏஜ் பருவத்திலேயே அந்தப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள்தான். இன்றைய இளைய தலைமுறையினர் சிகரெட் புகைப்பதில் தனி இன்பம் காணுகின்றனர். சிகரெட் புகைப்பது புற்றுநோய்க்கு வழி வகுக்கலாம் என்று தீவிர புகையிலை எதிர்ப்புப் பிரசாரங்கள் மேற்கொண்டும் யாரும் கண்டுகொள்வது மாதிரித் தெரியவில்லை.

இந் நிலையில் என்ன செய்யலாம் என்று மண்டையைப் பிய்த்துக் கொண்ட ஆராய்ச்சியாளர்கள் ஒரு தடுப்பூசியை உருவாக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இந்தத் தடுப்பூசி சிகரெட் புகைப்பதால் மூளையில் நிகோடின் தருகிற புத்துணர்வை, இதமான மகிழ்ச்சி உணர்வைத் தடைசெய்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் சிகரெட் புகைத்தலை எதிர்த்து வரும் இயக்கங்களே இந்தத் தடுப்பூசிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஆனாலும் சிறு பருவத்திலேயே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால் சிகரெட் பழக்கத்துக்கு அடிமையாகாமல் தடுத்துவிடலாம் என்று நம்புகிறார் செனோவா மருத்துவ இயக்குநர் ஜாண் ராபர்ட்ஸ். இந்தத் தடுப்பூசியைத் தயாரித்து விநியோகிக்க இரு நிறுவனங்களுக்கிடையே பலத்த போட்டி ஏற்பட்டு உள்ளது குறிப்பிடத் தக்கது. ■

## கர்ப்பமடைவதற்கு முன் மருத்துவ ஆலோசனை பெற மறக்காதீர்கள்

ஆண்டிற்கு ஒரு முறையாவது மகப்பேற்று மருத்துவரைப் பெண்கள் சந்திக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குக் கர்ப்பப்பை, மார்பகப் புற்றுநோய்கள் வரும் வாய்ப்பு இருந்தால் அதை ஆரம்பத்திலேயே நீக்கிவிட முடியும். இதைச் சாதாரணமாக விட்டுவிட்டால் அதுவே பின்னர் தாய்மைப் பேற்றுக்குத் தடையை உருவாக்கி விடலாம். குறிப்பாக நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு அடிக்கடி பரிசோதனைகள் அவசியம் என்பதை மறந்து விடக் கூடாது.



இவை தவிர பெண்கள் தொடர்ந்து மகப்பேற்று மருத்துவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய காரணங்கள் நிறைய உள்ளன. அவற்றைப் பெண்கள் தெரிந்து வைத்துக் கொள்வது அவசியம்.

### மாதவிலக்குப் பிரச்சனைகளுக்காக

சில பெண்களுக்கு மாதவிலக்குச் சமயத்தில் சமச்சீராக இல்லாமல் அதிக இரத்தப் போக்கோ அல்லது குறைவான இரத்தப்போக்கோ இருக்கும். அப்படிப்பட்டவர்கள் உடனே மகப்பேற்று மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.

கர்ப்பப்பை அல்லது பிறப்புறுப்பின் சுவர்களில் ஏதேனும் இன்ஃபெக்ஷன் இருந்தால் அது மாதிரி நிகழும்.

சில பெண்களுக்கு இரத்தப் போக்கு அதிகமாகி இரத்தச்சோகை வரக்கூடும். அடிவயிறு வலிக்கும். மிகவும் களைப்படைந்து எதையோ பறிகொடுத்தவர்கள் போல் ஆகிவிடுவார்கள். இந்தக் குறை எதனால் வருகிறது என்பதை மருத்துவர்தான் கண்டுபிடித்து நிவர்த்தி செய்ய முடியும்.

### குடும்பக் கட்டுப்பாடு:

குழந்தை பெறுவதைத் தடுக்கப் பல வழிகள் உள்ளன. "பல பெண்கள் மகப்பேற்று மருத்துவரின் ஆலோசனை இல்லாமலே கருத்தடை மாத்திரைகளை உபயோகிக்கிறார்கள். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மருந்து எடுத்துக் கொள்வதுதான் சரி என்பதைப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள்.

### தொற்றுநோய்களிலிருந்து காத்துக் கொள்ள:

நீங்கள் மருத்துவரைச் சந்திப்பதன் மூலம் பல தொற்றுநோய் அறிகுறிகளைக் கண்டுபிடித்துப் பல பிரச்சனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும். வயிற்று வலி, பிரசவம் முடிந்த பின் ஏற்படும் பிரச்சனைகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து ஆன்டிபயாடிக்ஸ் கொடுத்து நிவர்த்தி செய்துவிடலாம். பிரசவகாலப் பிரச்சனைகளுக்குத் தொற்றுநோய்கள் தான் காரணம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

### தாய்மையின்மையை நிவர்த்தி செய்ய:

நீங்கள் தொடர்ந்து பரிசோதனைகளுக்குச் செல்வதன் மூலம் தாய்மையின்மைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். அதற்கான சிகிச்சை அளித்துத் தாய்மைப் பேற்றை வழங்க மகப்பேற்று மருத்துவத்தால் முடியும். தாய்மைப் பேறு இல்லாதவர்கள் விரும்பினால் டெஸ்ட் டியூப் குழந்தை போன்றவற்றிற்கு முயற்சிக்க இந்தப் பரிசோதனைகள் உதவும்.

"சில சமயம் தாய்மைப்பேறு இல்லாமல் போனவர்களின் கர்ப்பப்பை மற்றும் அண்டப்பைகளில் புற்றுநோய் உருவாகி இருக்கும். சோதனைக்குச் சென்றால்தான் அவற்றைக் கண்டுபிடித்து உயிரைக் காப்பாற்ற முடியும். அந்த மாதிரி சமயத்தில் கர்ப்பப்பையை அகற்றிவிடுவதே நல்லது" என்கிறார்கள் மருத்துவர்கள்.



### செக்ஸுவல் பிரச்சனைகளுக்காக:

சிலருக்கு செக்ஸ் தொடர்பான பிரச்சனைகள் இருக்கும். இதற்குத் தீர்வு காண மருத்துவர்களின் ஆலோசனைகள் உதவும். செக்ஸில் ஈடுபடும்போது பிறழ்ச்சி ஏற்படாமல் இருக்கும் முறையை அவர்கள் பெண்களுக்குக் கற்றுத் தர முடியும். ■

செல்வாஸின் ➤ சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்
SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328
மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் — Az
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
உண்மை– நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவாகள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-12-2002
அனுப்பவேண்டிய முகவரி- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
லுனுகலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ க.சாந்தி, அமுனவத்த, உடபங்குவ லுனுகலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## குட்டி யானை சைஸில் குழந்தை வளர்ந்து விட்டதா....?

### ஒரு எச்சரிக்கைக் குறிப்பு

குழந்தைகளின் உடலில் ஏற்படும் அதிகபட்ச வளர்ச்சிக்கு ஏதேனும் நோய்காரணமாக இருக்கலாமோ என்ற அச்சம் பொதுவாகவே தாய்மார்கள் பலருக்கும் ஏற்படுவதுண்டு.

கொழுத்த உடல் என்பது என்ன?

ஒருவருக்குச் சாதாரணமாக இருக்க வேண்டிய உடல் எடையை விட கொஞ்சம் அதிகமாக எடை இருந்தால் அது கொழுத்த உடல் ஆகாது. உடற்பயிற்சி செய்தோ, உணவுப் பழக்கத்தை மாற்றியோ, அந்த அதிகப்படியான எடையைக் குறைத்துவிட முடியும். இதன் மூலம் அளவான எடையைப் பெற்றுவிடலாம்.

இது பெரியவர்களுக்குச் சரி, குழந்தைகளுக்கு எப்படி?

குழந்தைகளுக்கு வயது ஆக ஆக எடை கூடும். போஷாக்காக உணவு கொடுக்கிறோம் என்று தாய்மார்கள் எல்லா உணவுகளையும் வைத்துத் திணிப்பார்கள். குழந்தைகள் மல்யுத்த வீரர்களைப் போல் குண்டாகிவிடுவார்கள். சிறுவயதுக் குழந்தையாக இருந்தால் போச்சு. தூக்கிச் செல்லவும் முடியாது. அப்பொழுது, குழந்தையை 'அப்பா செல்லம்' என்று சொல்லி அவர் தலையில் கட்டிவிடுவார்கள். அந்தச் சுகமான சுமையை அவரே தூக்கி வர வேண்டும்.

இருப்பினும், பொதுவாக எல்லா குழந்தைகளும் வளரும் காலங்களில் குண்டாகிவிட மாட்டார்கள். அவர்களது உயரத்துக்கு ஏற்ப எடை இருந்தால் பிரச்சனையில்லை.



ஆனால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் எடையை விட 10 மடங்கு அதிகமிருந்தால் அதைக் கொழுத்த குண்டுக் குழந்தை என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தை குண்டாக இருந்தால், அதை எடுத்து முத்தம் கொடுப்பார்கள். கன்னங்களைப் பிடித்து இழுத்து முத்தம் கொடுப்பார்கள். முத்தம் கொடுப்பவர்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால் குழந்தைக்கு?

குழந்தைப் பருவத்தின்போது ஐந்து அல்லது ஆறு வயதுக்கு இடையில்தான் ஒரு குழந்தை குண்டாக ஆரம்பிக்கிறது. பத்து முதல் பதின்மூன்று வயதில் அது குண்டாக இருந்தால், வளர்ந்த பின்னர் மிகவும் குண்டாகிவிட 80% வாய்ப்பு உண்டு.

கொழுத்த உடலுக்குக் காரணங்கள் என்ன?

இதற்குப் பல காரணங்கள் உண்டு. பரம்பரை உயிரியல் குணாதிசய மாற்றம் மற்றும் உணவுப் பழக்க வழக்கங்கள். குண்டாவதற்கு அடிப்படைக் காரணம் உணவுதான். "உங்களால் கிரகிக்கும் அளவுக்கே உணவு சாப்பிடுங்கள்" என்பது பழமொழி. அந்தப் பழமொழி மீறப்படும் போது உடல் குண்டாகிறது. அதாவது உடல் தாங்கும் அளவை விட அதிக கலோரிச் சத்துள்ள உணவைச் சாப்பிட்டால் போதும். பிரச்சனை ஆரம்பமாகிவிடும். ஆமாம்...குண்டாகிவிடுவார்கள்.

பெற்றோரில் ஒருவர் குண்டாக இருந்தால் கண்டிப்பாகப் பிறக்கும் குழந்தையும் குண்டாகத்தான் இருக்கும். அல்லது வளர்ந்த பிறகு குண்டாகிவிடும். இதற்கு 50% வாய்ப்பு உண்டு. அப்பா, அம்மா இருவரும் குண்டாக இருந்தால்...கேட்கவே வேண்டாம். குழந்தை குண்டாகிவிட 80% வாய்ப்பு இருக்கிறது.

பெற்றோர் மெல்லிய உடல்வாகு கொண்டவர்களாக இருந்தும் குழந்தையின் உடல் பலூன் ஊதுவதுபோல் வேகமாக வளர்ச்சி கண்டு செல்லுமாயின் அவசரமாகவே குழந்தை நல மருத்துவர் ஒருவரை நாடுங்கள்.



கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம்
- நாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்;
அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண்டாம்
- என்னும்
அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்.
**சுப்பிரமணிய பாரதியார்-**



# புதிய தலைவர்

## பாப்பா முரசு சிறுகதை

**தி**டீரென்று அந்தக் காட்டின் தலைவர் சிங்கத்திடம் இருந்து வந்த அவசர அழைப்பு, எல்லா மிருகங்களுக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது. என்ன விசயமாக இருக்கும் என்று அவை குழம்பின.

தலைவர் பொறுப்புக்கு வந்ததில் இருந்து சிங்கம் தனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று தயவு காட்டாமல் தண்டித்தது. இதனால் அச் சிங்கத்திற்கு எதிராக நண்பர்கள் பட்டாளமே முன்நின்றன. திரைமறைவு வேலைகளில் சிங்கத்தை வீழ்த்த நினைத்தன.

எதிரி மிருகங்கள் இப்படித்தான் ஒரு சமயம் சிங்க்த்தை ஒழிக்க, குழி வெட்டி அதில் இலை தழைகளைப் போட்டிருந்தன. சிங்கம் அந்த வழியாக வருவதற்கு முன்பு இலை தழைகளைப் பார்த்து ஓடி வந்த யானை அந்தக் குழிக்குள் விழுந்துவிட்டது. பொறாமை தன்னை அழிக்கும் அளவுக்குப் போகுமென்று சிங்கம் எதிர்பார்க்கவில்லை. அந்தச் சிந்தனையிலும் கூட யானையை மீட்க ஏற்பாடு செய்துவிட்டே சென்றது.

இந்தச் சமயத்தில் பக்கத்துக் காட்டுக்குள் இருந்து ஒரு ஆடு வந்து தலைவர் சிங்கத்தைச் சந்தித்துப் பேசியது.

"எங்கள் காட்டுத் தலைவர் ஒரு விசயமாக உங்களிடம் அனுப்பினார்."

"அதைச் சொல்லு."

"எங்கள் தலைவருக்கு வயதாகி விட்டதால் அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டு வருகிறது."

"புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதானே?"

"அதில்தான் பிரச்சனை. யாருக்கும் தகுதியில்லை. எல்லோருமே அத்துமீறல், பொய்-புரட்டு என்று தங்கள் பேரைக் கெடுத்துக் கொண்டவர்கள்."

"சீக்கிரம் சொல்லி முடி."

"அதனால் எங்கள் காட்டுக்கும் சேர்த்து தலைமை ஏற்க முடியுமா? என்று எங்கள் தலைவர் கேட்கிறார்."

"இங்கு மட்டுமென்ன நடக்கிறது. இங்குள்ளவர்கள் எனக்கு விசுவாசமாக இருப்பதாக நடிக்கிறார்கள். அடுத்த தேர்தலில் என்னைக் கவிழ்க்கிற முதல் ஆள் இவர்களாகத்தான் இருப்பார்கள். நானே பதவியை விட்டு விலகலாமா என்றிருக்கிறேன்."

"தலைமை என்றால் போட்டி வரத்தான் செய்யும். எங்கிருந்து வருகிறது என்று கூடக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு எதிர்ப்புகள் கிளம்பத்தான் செய்யும். யாரோ, ஏதோ கேட்டார்கள் என்பதற்காக "விலகி விடுகிறேன்" என்று பொதுவாகச் சொன்னால் எப்படி?"

"கேலி வேண்டாம். உபயோகமான விசயம் இருந்தால் சொல்... நீ எங்கே சொல்லப் போகிறாய்? நீயே உங்கள் காட்டுப் பிரச்சனைக்காக இங்கு அனுப்பப்பட்டவன். பாவம் என்ன செய்வாய்?"

"நான் சின்னவன்தான். அந்நிய காட்டவன்தான். ஆனால் எனக்குத் தெரிந்த ஒரு ஆலோசனையைச் சொல்லட்டுமா?"

"சொல்லு."

"உடனடியாக அனைத்துக் காட்டாளர்களையும் அழைத்து நீங்கள் பதவி விலகுகிறேன் என்று அறிவித்து விடுங்கள்."

"அப்படிச் செய்தால்?"

"மற்றவர்களுக்கு உங்கள் மீது பிரியம் ஏற்படும். இவரது திறமையில் என்ன குறை கண்டோம் என்று உங்களைப் பிடிக்காதவர்களும் மறுபரிசீலனை செய்வார்கள். அடுத்து இவருக்கு அடுத்தவர் ஆட்சிக்கு வந்து, அவரது ஆட்சியை விட மோசமாக அமைந்து விட்டால் என்னாவது என்று சிந்திப்பார்கள்."

இதற்குப் பிறகுதான் சிங்கம் தனது முடிவை அறிவித்தது.

என்னவோ ஏதோவென்று வந்த அத்தனை மிருகங்களும் தலைவர் சிங்கத்தின் 'விலகல்' அறிவிப்பைக் கேட்டு நிஜமாகவே அதிர்ந்துவிட்டன. ஏன்? என்ன காரணம்? நமக்குள் ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஆனால் காட்டுக்குள் அமைதி நிலவியதே... பக்கத்துக் காடுகளில் இருந்த மிருகங்கள் கூட உங்கள் தலைமைக்கும் கண்டிப்பான நிர்வாகத்துக்கும் பயந்து இந்தப் பக்கம் வருவதில்லையே..."

கோரசாகச் சொல்லின, மிருகங்கள்.

சிங்கம்தான் ஏற்கவில்லை. "நண்பர்களே எனக்கு வயதாகிவிட்டது. முன் போல் உங்களை ஒரு ஆபத்தில் இருந்து காக்கும் அளவுக்குக் கூட உடம்பில் தெம்பில்லை. அப்படியிருக்க நான் விலகி, துடிப்பான- திறன் வாய்ந்த ஒரு தலைவர் பொறுப்பேற்பதுதானே முறை."

"இல்லையில்லை. இப்போது எங்களில் தலைமைக்கு யாருமே தகுதியில்லை. நாங்களே ஏழெட்டுக் கோஷ்டிகள்."

"நான் இருக்க முடியாது. வேண்டுமானால் உங்கள் இஷ்டப்படியே நான்தான் இருக்க வேண்டும் என்றால், என்னைப் போலவே திறன் வாய்ந்ததாக நினைத்துக் கொண்டிருக்கிற ஒருவரை நான் தலைவர் பதவியில் அமர்த்தலாமா?"

"உங்கள் விருப்பம்."

சிங்கம் நேராகப் போய் கூட்டத்தின் ஓரத்தில் நின்ற அந்த ஆட்டை அழைத்து வந்தது. பிறகு சொன்னது, "நண்பர்களே இவர்தான் இனி உங்கள் புதிய தலைவர்."

கூட்டம் திடுக்கிட்டது.

"தலைவரே...இது நமது காட்டு ஆடு கூட அல்ல..."

"ஆனால் நமது காட்டு நலனில் அக்கறையுள்ள ஆடு."

"அப்படியே இருக்கட்டும், ஒரு ஆட்டால் எப்படி எங்களைக் காப்பாற்ற முடியும்?"

"இது நல்ல கேள்வி... குழப்ப சக்திகள் நமது காட்டில் என்னை வீழ்த்தத் திட்டம் போட்டன. அதிலும் புதைகுழி வெட்டி என்னைக் கொல்ல நினைத்த நேரத்தில்- இந்த ஆடு என்னைச் சந்தித்துப் பேசி, எனது நெருக்கடியைத் தெரிந்து கொண்டு எனக்கு உதவ முன் வந்தது. அந்த நன்றியின் விளைவு தான் இது."

"அடுத்த காட்டில் உள்ள அதுவும் கேவலம் ஒரு ஆட்டுக்கா நம் காட்டுத் தலைவர் பதவி."

கூட்டம் இப்படிக் கேட்டதும் சிங்கம் அமைதியாக, "பசுத்தோல் போர்த்திய புலி கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?"

"ஆமாம்."

"அப்படியானால் இந்த ஆட்டுத் தோல் போர்த்திய சிங்கம் பக்கத்துக் காட்டின் தலைவன். ஆபத்தென்று அழைக்காத நேரத்திலும், ஆபத்தை அறிந்து தேடி வந்து உதவுகிறவனே நண்பன். அந்த நட்புணர்வு கொண்ட என் நண்பனே, இனி நமது காட்டுக்கும் தலைவன்.

காடு புதிய தலைமைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.12.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **473**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 471

**பரிசுக்குரியவர்:**
**எம்.கே. சித்தாரா,**
மின்ஹாஜ் வித்தியாலயம், ஹொறம்பாவ.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **நி. நிலோஜி,** 208, ஹொரவப்பொத்தான வீதி, வவுனியா. | **எம்.எஸ். துசான்,** தருமதுத்த கல்லூரி, பதுளை.. |
| **வ. மிறின் தனோஜன்,** 145, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா. | **ம. ஸ்ரீ கிருஷ்ணாஹர் ,** 207, நீதிமன்ற வீதி, திருகோணமலை. |
| **எம்.எச். ஹைசம்,** இல. 22/39, அஸரப்பா வீதி, நீர்கொழும்பு. | **ஏ. அர்ச்சுனா,** 109. ஹம்டன் ஒழுங்கை, கொழும்பு-06. |
| **மு.கிருஷாந்தன்,** நு/கொ/த/ம/ வித்தியாலயம், கொட்டகலை. | **எஸ். பிரவினா,** 80, மருதானை வீதி, ஹெந்தளை, வத்தளை. |
| **யோ. சசிதரன்,** சிலா/செ.பெ.த.ம. வித்தியாலயம், சிலாபம். | **எஸ்.ஏ. றஸானஸ்,** கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி. |

# விடுகதைகளும் விடைகளும்

1. அந்தரத்தில் ஆடுவான் ஆனந்தம் தருபவன் அவன் யார்?
2. ஒளி பிறக்கும் முன் சிறு துடிப்பு அது என்ன?
3. தொடாமல் தொடுவான் காணாமல் காண்பவன் அவன் யார்?
4. துள்ளி வரும் அலைகளிலே வெள்ளி மணி குவியலடி அவன் யார்?
5. பார்த்தேன் பார்த்தான் சிரித்தேன் சிரித்தான் அவன் யார்?
6. அட்டைக்கு ஆயிரம் கண் முட்டைக்கு மூன்று கண் அவை என்ன?
7. கண்ணருகே ஒரு மின்னல் கண்டதைப் பிடிக்கும் மின்னல் அது என்ன?
8. ஆடும் வரை ஆட்டம் ஆடி முடிந்த பின் கூட்டம் அது என்ன?
9. காசு கொடுத்து வாங்கியவனை கட்டையால் குத்தினார்கள் அது என்ன?
10. கல் கண்டு ஓடுபவனும் கல் கண்டு விரும்பி வருவான் அது என்ன?

**விடைகள்.**

1. ஊஞ்சல் 2. டியூப் லைட்
3. காற்று 4. மீன்கள்
5. முகம் பார்க்கும் கண்ணாடி
6. கட்டில்- தேங்காய்
7. போட்டோ காமிரா
8. உயிர்
9. தபால் ஆபீஸ் ஸ்டாம்ப்
10. கல்கண்டு

# செயற்கைக் கோள்

**வி**ஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டு விண்வெளியில் அனுப்பிப் பூமியைச் சுற்றி வரச் செய்யும் விண்வெளிச் சாதனத்திற்குச் செயற்கைச் சிறுகோள் என்பது பெயர். விண்வெளி ஆராய்ச்சியில் பல பணிகளுக்காகப் பல்வேறு வகை செயற்கைக் கோள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

பணிக்கேற்றவாறு ஒவ்வொரு செயற்கைக் கோளின் வடிவமும், பருமனும் எடையும் அமைதியும் சில கிலோகிராம் எடையிலிருந்து பல டன்கள் எடையுள்ள பல்வேறு வகைச் செயற்கைக் கோள்கள் உள்ளன.

சில செயற்கைக் கோள்கள் பூமியிலிருந்து 180 கி.மீ. உயரத்தில் சுற்றி வருகின்றன. ஒரு சில, பூமியிலிருந்து 35 ஆயிரத்து 700 கி.மீ. உயரத்தில் சுற்றி வருகின்றன. இவற்றின் சுற்றுப் பாதையை அவற்றின் பணிக்கு ஏற்ப, முன்கூட்டியே விஞ்ஞானிகள் நிர்ணயிக்கிறார்கள். மேலும் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்தே அவற்றை இயக்குகின்றனர்.

பொதுவாக எல்லா செயற்கைக் கோள்களும் மின்சக்தியால் இயங்குகின்றன. இந்த மின்சக்திக்கு மூலமே சூரியன்தான். செயற்கைக் கோள்களின் புறப்பரப்பில் ஏராளமான சூரியச் செல்கள் அமைக்கப்படுகின்றன. இவை சூரிய ஒளியை மின் ஆற்றலாக மாற்றி செயற்கைக் கோள்களின் பாட்டரிகளுக்கு மின்னூட்டம் அளித்து இயங்கச் செய்கின்றன.

செய்தித் தொடர்புச் செயற்கைக் கோள்கள் மூலம், ஒரு கண்டத்திலிருந்து பிறிதொரு கண்டத்திற்கு வானொலி, தொலைக்காட்சி சமிக்ஞைகள் அனுப்பப்படுகின்றன. இவ்வகைச் செயற்கைக் கோள்களில் செய்திகளை வாங்கு சாதனங்களும், வழங்கு சாதனங்களும் சேர்ந்தே பொருத்தப்பட்டிருக்கும்.

வாங்கிகள், தரையிலுள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலிருந்து செய்தி, சமிக்ஞைகளை வாங்குகின்றன. இவை மின்னணுச் சாதனங்களால் வலுவூட்டப்பட்டுப் பெருக்கப்படுகின்றன. வழங்கிகள் இவற்றைத் தொலைதூரங்களிலிலுள்ள வேறொரு கண்டத்திலுள்ள தரை நிலையத்திற்கு அஞ்சல் செய்கின்றன.


முதன் முதலில் இவ்வகைச் செயற்கைக் கோள் அமெரிக்காவிலிருந்து விண்வெளிக்கு அனுப்பப் பெற்று ஐரோப்பாவுடன் தொடர்பு கொள்ளச் செய்யப்பட்டது. இந்த முதல் செயற்கைக் கோளுக்கு டெல்ஸ் டார் என்பது பெயர்.

# வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:- முதல் பத்து விஸ் தீரணமான நாடுகள்**

| நாடு | சதுர கிலோமீற்றர் | சதுர மைல் |
|---|---|---|
| 1. ரஷ்யா | 17,070,289 | 6,590,876 |
| 2. கனடா | 9,970,599 | 3,849,670 |
| 3. சீனா | 9,596,961 | 3,705,408 |
| 4. அமெரிக்கா | 9,169,389 | 3,540,321 |
| 5. பிறேஸில் | 8,511,965 | 3,286,488 |
| 6. அவுஸ்திரேலியா | 7,686,848 | 2,967,909 |
| 7. இந்தியா | 3,287,590 | 1,269,346 |
| 8. ஆர்ஜென்டீனா | 2,780,400 | 1,073,512 |
| 9. கஸஹஸ்தான் | 2,717,300 | 1,049,156 |
| 10. சூடான் | 2,505,813 | 967,500 |
| மொத்தம் | 135,807,000 | 52,435,381 |


# இந்த வாரப் புதிர்



12 வட்டங்களும் வரிசைக்கு மூன்றாக 6 வரிசையில் வர வேண்டும். முடியுமா?

# அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# பைனாகுலர்



டி.ஜோர்ஜ்-நுவரெலியா.

குமாரசாமி ஓர் ஓய்வு பெற்ற தேயிலைத் தோட்டத்து குமாஸ்தாவாவர். ஒரே ஒரு மகன். அவனும் ஒரு தோட்டத்திலே குமாஸ்தாவாகப் பணிபுரிகிறான். எனவே இவரது ஓய்வுக்குப் பிறகு, தன் மனைவியுடன், தான் பெற்றுக் கொண்ட ஓய்வூதியத்துடனும், பிரமச்சாரியாய் வாழும் தன் மகனோடு வசிப்பதற்காக வந்துவிட்டார். 'எஸ்டேட் குவார்ட்டஸ்' மிகவும் வசதியாக இருந்தது. பிள்ளைக்குப் பாரமாக இல்லாமல், துணையாகவே இவர்கள் இருந்தனர்.

குமாரசாமிக்கு வயது அறுபத்தியாறு முடிவடைகிறது. இவர் கொஞ்சம் விசித்திரமான ஆசாமி. இவருக்குப் பள்ளிப் பருவத்திலேயிருந்தே ஓர் நப்பாசை. தனக்கென்று எப்படியும் ஒரு பைனாகுலரைப் பெற்றுக்கொள்வது தான். ஆனாலும் அவ்வப்போது எழுந்துவிடும் பணப் பிரச்சனைகள் காரணமாக அவரது எண்ணம் இன்று வரை-வேலையிலிருந்து ஓய்வுபெறும் வரை ஈடேறவேயில்லை. ஓர் முறை 'பொம்மை பைனாகுலரில், தன்னை மறந்து ஒரு சில காட்சிகளைக் கண்டு இரசித்திருக்கிறார். அதுவும், ஒரு சிறு குழந்தையிடம் வெடுக்கென்று பிடுங்கி-அது கதறக் கதறப் பார்த்து இரசித்தது தான். அதன் பிறகு ஒருமுறை-இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் தன் குடும்பத்தோடு கொழும்பு சென்றிருந்த சமயம், அதாவது பிரஜா உரிமைக்காக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளச் சென்றிருந்தார். அப்போது, அவரது மகன், ரவிகுமாருக்கு வயது மூன்று. சத்தியப்பிரமாணச் சங்கதிகளை முடித்த கையோடு, குடும்பத்துடன் ஒரு நாள் பொழுதை 'ஜாலி'யாகக் கழிக்கத் தீர்மானித்து, தன் ஒரே-உடன்பிறந்த அண்ணாவின் வீட்டை அடைந்தார். வீட்டிலே அண்ணா, அண்ணியின் பாசமுள்ள வரவேற்பு, அன்பான உபசரிப்பு. பகல் உணவை முடித்த கையோடு, தன் குடும்பத்தாருடனும், அண்ணாவின் இரண்டாவது பையனுடனும் 'கோல் பேஸ்' சென்று காற்று வாங்கப் புறப்பட்டுவிட்டார். அங்கே....

எப்போதும் அடிமனதிலே உரமிட்டு வளர்த்த, அதே 'பைனாகுலர் ஆசை' மீண்டும் மெல்லத் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டது, காரணம் அந்தக் 'கடற்கரை'யிலே காற்று வாங்க வந்திருந்த வெளிநாட்டவர் மட்டுமின்றி ஒரு சில நம் நாட்டவர்களும், தோள்களிலே விதவிதமான 'பைனாகுலர்'களைத் தொங்கவிட்ட வண்ணம் உலாவிக் கொண்டிருந்ததுதான். ஏக்கப் பார்வையுடன் தோன்றியவரை முகம் 'கடுகடு'க்கப் பார்த்து முறைத்தார் அவரது மனைவி. ஏனென்றால், இவரது இந்த பைனாகுலர் வெறி அவளும் அறிந்ததே. மெதுவாக எழுந்த தனது குழுவினரை விட்டுச் சிறிது தூரம் நடந்தவர், ஒரு இடத்தில் வண்ணக் குடையின் கீழே அமர்ந்திருந்த ஓர் வெள்ளையரை மெதுவாக அணுகினார். அவர் அருகே ஒரு பைனாகுலர், பளபளக்கும் கருமை நிறத்தில் இருந்தது. மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டவர் "மே ஐ யூஸ் யுவர் பைனாகுலர் போர் எ வயில்?" என்றாரே பார்க்கலாம் (கொஞ்ச நேரத்திற்கு தங்களது பைனாகுலரை பாவித்துக் கொள்ள முடியுமா?) அந்த வெள்ளைத் தோல் ஆசாமி, நமது குமாரசாமியை ஏதோ ஓர் அற்ப பிராணியைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு 'வெடுக்'கென்று அந்தப் பைனாகுலரை அள்ளித் தன் அருகே இருந்த பையில் போட்டுக் கொண்டார். குமாரசாமி இதுவே தமது மலையகமாயிருப்பின், அம் மனிதரை என்ன செய்திருப்பரோ தெரியாது. ஆனாலும், அவமானத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் "யூ என்ட் யுவர் பைனாகுலர். ஐ ஹாவ் சீன் ஸோமெனி பைனாகுலர்ஸ் இன் மை லைப்" (நீயும், உனது பைனாகுலரும். எனது வாழ்நாளில் நான் அநேகம் பைனாகுலர்களை பார்த்தவனாக்கும்) என்று படபடவென்று பொரிந்து தள்ளி விட்டு வந்துவிட்டார். "என்னாச்சு சித்தப்பா?" என்று மோப்பம் பிடிக்கப் பார்த்த தனது அண்ணாவின் மகனிடம் ஏதோ கூறி மழுப்பிவிட்டார்.

அதன் பின்னும் அந்த அற்ப ஆசை அவரை விட்டுப் போகவேயில்லை. இன்று, ஓய்வு பெற்ற, தன் மகனின் சம்பாத்தியத்தில் வாழ்ந்தாலும் கூட அந்த அடக்க முடியாத ஆசைத் தீ உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டு தானிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ரவிகுமாருக்கு விடுமுறை. அவன் வெளியே கிளம்பிவிட்டான். மனைவியும் மட்டுமே வீட்டில். பொழுது போகாத குமாரசாமி, 'தொலைகாட்சி'யையாவது பார்த்துத் 'தொலை'ப்போம் என்று முன் அறையில் அமர்ந்து, பார்க்கத் தயாரான போது, வாசலில் நிழலாடியது.

அங்கே... தோட்ட வேலையாள் முருகையாவுடன் இன்னுமொரு பெரியவர் காணப்பட்டார். குமாரசாமி சலித்துக் கொண்டவராய் எழுந்து, வாசற் கதவைத் திறந்து 'என்ன' என்று கேட்கும் பாவனையில் தலையை மட்டும் ஆட்டி வைத்தார். வெளியே நின்றிருந்த பெரியவர்-நமது குமாரசாமியின் வயதை யொத்தவர்-இவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவர்... "நீங்.. நீங்.. நீ... நீ... குமார் இல்லே? குமாரசாமி தானே" என்று ஆவல் ததும்ப... அதே சமயம் வியப்புடன் கேட்டார். ஒரு சில வினாடி தயங்கிய குமாரசாமியின் விழிகளில் ஆச்சரியம். ஓரடி முன்னே எடுத்து வைத்தவர் "நீ.. நீ.. நம்ப.. ராமுதானேடா... அடேய் ராமசாமி.. என்னடா இது திடுதிப்பென்று.. வட் எ சர்ப்ரைஸ்.. மச்சான்" என்று கூறி வந்தவரை-ராமசாமியைக் கட்டித் தழுவிக் கொண்டார். "வாடா உள்ளே.. ஏய் முருகையா! ஐயாவோடே.. பேக்கை உள்ளே கொண்டு வந்து வைடா" என்று கூறினதோடு நில்லாமல் உள்ளேயும் குரல் கொடுத்தார். "ஒய் மரகதம் ஓடியா.. இங்க வந்து பாரு யாரு வந்துருக்காங்கன்னு" என்று உற்சாகமாகக் கூவினார். மரகதமும்-குமாரசாமியின் மனைவி-கைவேலையை விட்டுவிட்டு, என்னவோ ஏதோவென்று அவசரமாக ஓடி வந்தவள்... ஒன்றும் புரியாமல் நின்று விட்டாள். குமாரசாமி சிரித்துக் கொண்டார். "என்ன நம்ம ராமுவ அதுகுள்ள மறந்திட்டியா? என்கூட ராணிவத்தயில வேல செய்யல?" "ஆமா வாங்கண்ணே. இருங்க ஒரு நொடியிலே சமைச்சிடுறேன். அப்புறம், அக்கா, பிள்ளைங்க சுகமா இருக்குறாங்களா... கண்டு ரொம்ப நாளாச்சு இல்லே?" என்று முகம் மலரக் கூறியவள் உள்ளே விரைந்தாள்.

குமாரசாமி தம்பதிகள் எவ்வளவு எடுத்துக் கூறியும் ராமசாமி கிளம்பிவிட்டார். அவர் எங்கெங்கோ எல்லாம் தேடி விசாரித்து குமாரசாமியைத் தேடி வந்தவர். அவர் மகன் ஒருவன் 'கனடா'வில் இருக்கிறானாம். ஏதோ சில பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்திருந்தார்.

அந்தப் பரிசுக் குவியலில்... 'தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. புத்தம் புதிய, கருமை நிறத்தில் 'பளபள'க்கும் பைனாகுலர் ஒன்றும் இருந்தது. ஏற்கனவே ராமசாமி இவரது 'பைனாகுலர்' பைத்தியத்தைப் பற்றி நன்கு அறிந்தவர். மறக்காமல் தருவித்து விட்டார். உள்ளத்தில் உவகையும், அதே சமயம் தமது பாசமுள்ள நண்பரின் நட்பின் ஆழத்தையும் எண்ணித் துயரம் கொண்டார்.

வீட்டில் யாருமில்லாத ஒரு நாளை துவக்கவிழாவாக வைத்துக் கொண்டார். அன்றும் ஒரு ஞாயிற்றுக்கிழமை அவரது மனைவியும், மகனும் திருமணம் ஒன்றிற்குப் போயிருந்தனர். வருவதற்கு இரண்டு நாட்களாகும்.

முதன் முதலில் அவர்-அதனூடாகப் பார்த்தது-பைனாகுலரில்-தொலைவில் நகரத்தில் அமைந்திருந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கோபுரத்தைத்தான். அதன் பிறகு, மேடு மலைகள், பள்ளத்தாக்கு, அதில் ஓடும் நீரோட்டம், காடுகள், அதில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன.அதன் பிறகு தோட்ட சூழ்நிலைக்குத் தாவினார். என்ன?... ஒருவன் ஒதுங்கியிருக்கிறானே... சீ... அவசர அவசரமாக திருப்புகிறார், குளிக்கும் பெண்-அருவியிலே தனிமையிலே குளிப்பவள்... யாருமில்லை என்ற துணிச்சலில் சிறிது சுதந்திரத்தை மேற்கொண்டு... குமாரசாமிக்கு வியர்த்துவிட்டது. இன்னொரு தோட்ட உத்தியோகத்தினரது 'குவாட்டர்ஸின்' உள்புற அறையும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. மூடிய கதவுகள், ஜன்னல்கள், ஆனாலும், 'வென்டிலேட்' (காற்றுத் வாரம்) வழியாக அந்தக் காலை வேளையிலே... 'டி.வி'யில் 'டெக்' துணைகொண்டு. அந்த இளம் தம்பதிகள் பார்த்துக் கொண்டிருந்தது ஓர் 'நீலப் படமாகும்'. வெளிநாட்டுப் பைனாகுலர் வெகு அக்கறையாக தெளிவாக்கிக் கொண்டிருக்க... 'அட்சே இது என்னடா அசிங்கம்' என்று கண்களை அகற்றியவர், தலையில் கையை வைத்துக் கொண்டார். பின்பு சிறிது சமாளித்துக் கொண்டவர். மீண்டும் வேறு ஒரு பக்கம் திரும்பினர். அங்கே... தேயிலைத் தோட்டத்தையும் தாண்டி.... 'கருப்பந் தைலக்' காட்டில்... அடே.. யாரது அது நம்ம கணக்குப்பிள்ளை... இந்த நேரத்தில்? கணக்குப்பிள்ளை ரொம்ப தங்கமானவர் என்று எண்ணிக் கொண்டே... பைனாகுலரில் ஆசாமியைத் தொடர்ந்தவர் எதிரே வந்த பெண்மணியைப் பார்த்துத் திக்குமுக் காடிப் போனார். சின்னக்கணக்குப் பிள்ளையின் தங்கமான மனைவியல்லவா? இருவரும் கைகளைப் பற்றிக் கொண்ட கணமே.. கண்களை வெடுக்கென்று பறித்துக் கொண்டார் பைனாகுலரில் இருந்து.

ஊமையாக இருந்து கொண்டு, ஊமை நாடகங்களைக்காட்டுவதற்காக இந்த பைனாகுலர் என்னும் பைசாசம் மனிதர் கழுத்திலே தொங்கிக்கொண்டிருக்கிறது? பார்க்கக் கூடாத அசிங்கத்தையெல்லாம் ஒளிந்திருந்து திருட்டுத்தனமாகப் பார்ப்பதற்காகவா இதை மனிதன் படைத்திருக்கிறான்? யாரெல்லாம் யோக்கியர்களாக-தங்கமானவர்களாக வாழ்ந்தார்களோ, அத்தனைபேரும் அயோக்கியர்களா? வேண்டாம் இது கூடாது. மறைந்து கிடக்கும் உண்மைகளை அறிந்து கொண்டால், இவர்களோடு வாழ்வது கடினம். இவர்களது ஊமை நாடகத்தை இதன் வழியாகப் பார்ப்பதை விட பேசிப் பேசி இவர்களோடு ஒன்றி வாழ்வதே ஆனந்தமான வாழ்க்கையாகும்.

தனது அன்பு நண்பன், தமக்கு அளித்த அந்தப் பரிசுப் பொருளான 'பைனாகுலரை'த் தூக்கி வீச மனமில்லாத குமாரசாமி, அது எவர் கைக்கும் கிடைத்து விடாதபடிக்கு வெகு கவனமாகப் பார்சல் செய்து மறைத்து வைத்துவிட்டார், ஊமை தூங்கிக் கொண்டிருக்கிறது.

# "வெள்ளை மனங்கள்"



நிஸாமகள்-திருகோணமலை.

அந்த விசயத்தைக் கேட்டதும் எனக்குள் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படவில்லை. சில இடங்களில் வழக்கமாக நடக்கக் கூடியதுதான். சிலர் பழக்கம் அப்படி. அவர்களாகத் திருந்திக்கொண்டால் சரி.

"நீங்கதான் எல்லா விசயத்தையும் முகத்திற்கு நேரே பேசக் கூடியவர். அதிபரிடம் சொல்வதற்கு முன்னதாக சம்பந்தப்பட்டவரிடமே நேரடியாகச் சொல்லிப் பார்த்து..."

"............"

"இன்றைக்கும் பிள்ளை சொல்லிச்சு. ச்சே! என்ன கேவலமான பழக்கம் சிறு பிள்ளைங்க முன்னாடி...?"

"............"

"இவகிட்ட படிச்சா நாளைக்கு நம்ம பிள்ளைகளுக்கும் இந்த மாதிரியான பழக்கம்தான் தொற்றிக் கொள்ளும்."

"எனக்கு எல்லாம் புரியுது. சின்னப் பிள்ளைங்க விசயம். அத நம்பி நாம சட்டு புட்டென்று முகத்திற்கு நேரே சொல்லி நாளைக்கு அப்படி ஏதுமில்லை என்றதன் பின்னர் எப்படி... இந்த முகத்தை வைத்துக்கொண்டு... அதான் பெரிய யோசனையாக இருக்கு."

"நானும் அப்படி நினைச்சுத்தான் பல நாட்களாக இருந்தேன். பிள்ளைகள் சொல்வதையும் அசட்டையாக எடுத்துக்கக் கூடாது. கூடப் படிக்கிற பிள்ளைகளிடமும் நாசூக்காகக் கேட்டுப் பார்த்தேன். சொல்லி வைத்த மாதிரி எல்லோரும் அதையே சொல்றாங்க. தானும் எடுத்து, மற்றைய பிள்ளைகளுக்கும் கொடுத்து... அதான் கேவலம்..."

வார்த்தைகளை வாங்கிக் கொண்டு எதிரே, சற்றுத் தூரத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களை அதே ஆசிரியை முறையாக வரிசைப் படுத்திக் கொண்டிருப்பதை அவதானித்தேன். மற்றைய ஆசிரியைகள் சாதாரணமாகச் செயற்படும் போது அந்த ஆசிரியை மாத்திரம் மற்ற வகுப்பு மாணவர்களையும் ஒன்று திரட்டி முறையாக வரிசைப்படுத்தி அமைதியாகவே அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்.

காதால் கேட்டுக் கொண்டதற்கும் கண்ணால் பார்த்துக் கொள்வதற்கும் பாரிய இடைவெளிகள் தென்பட்டமையினால் தீர விசாரிக்கும் எண்ணம் தடுமாறிக் கொண்டிருந்தது. எனக்குத் தெரியும், அந்த ஆசிரியை கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மரியாதையான சுபாவம் கொண்டவர் என்று. இருந்தும் என் பிள்ளையும் அதையே சொல்வதென்றால்...?

"தம்பி! பெற்றோர் சங்கக் கூட்டத்தில அதைக் கண்டிப்பாக் கதைக்க வேணும். நீங்க பெயர் சொல்லத் தேவையில்லை. விசயத்தைச் சொன்னால் போதும். மற்றவர்களுக்கும் புரியப்போவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இனிமேல் அப்படிச் செய்திட வாய்ப்பிருக்காது."

"நீங்க சொல்றதும் சாத்தியம்தான். இதில் இன்னொரு பக்கமும் இருக்கு. அதான்..."

"அதென்ன...?"

"இதனால எங்கட பிள்ளைகளின்ர படிப்பிற்கு ஏதாவது... அதான் யோசிக்க வேண்டியிருக்கு."

"............"

"மீட்டிங்கிற்கு இன்னும் நேரம் இருக்கு. இப்போ டீச்சர் தனியாகத்தான் இருப்பா. ஏன் நாம ரெண்டு பேருமாகப் போய் கேட்கக் கூடாது?"

சற்று யோசனையின் பின்னர், "சரி நாம இருவருமாகப் போய் கேட்டுப் பார்ப்போம்" என்ற முடிவுடன் ஒன்றாகவே 1ம் ஆண்டு உள்ள கட்டிடப் பகுதியை நோக்கி விரைந்தனர்.

"வாங்க உட்காருங்க..."

சிறுவர்களுக்கான நாற்காலியில் அமர்ந்துகொண்டனர். எதிரே, இரண்டு சிறுவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தனர்.

"என்ன...! பிள்ளைங்க படிப்பு பற்றி அறிந்துகொள்ளத்தானே...?"

"அதற்கில்லை டீச்சர். ஒரு டவுட் பற்றிக் கேட்கத்தான்..."

நாற்காலியில் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்ட ஆசிரியை இருவரையுமே ஒரே தடவையில் முகத்திற்கு நேரே ஏறிட்டுக் கொண்டார்.

அவர்கள் மனதிற்குள் அது திருப்தியாகப்படவில்லை.

"சொல்லுங்க..."

"பிள்ளைங்க சொல்றாங்க... நங்க பெரிசுபடுத்தவில்லை. இருந்தாலும்"

"என்னவென்று சொன்னால்தானே நானும் புரிஞ்சுகொண்டு பதில்சொல்ல முடியும்"

"பிள்ளைங்களின் சாப்பாட்டை எடுத்து...."

வேறு எங்கோ பார்த்தபடி வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, பதிலை எதிர்பார்த்து முகத்தை அவதானித்தேன்.

எனக்குள் ஏகப்பட்ட ஏமாற்றங்கள். முகத்தில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படாதது வியப்பாக இருந்தது. வழக்கம் போலவே மெல்லிய புன்னகையுடன், எங்கள் மீது ஒரு ஆழமான பார்வை. பின்னர் அருகிலிருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த சிறுவர்களுக்குப் போத்தலில் இருந்த தண்ணீரை வார்த்து ஒரு குவளையில் கொடுத்து,

"நீங்க சொல்றது உண்மைதான். நான் எல்லோரிடமிருந்தும் எடுத்து கொஞ்சம் சாப்பிட்டு இந்த மாதிரியான பிள்ளைகளுக்குக் கொடுப்பது வழக்கம்தான்."

எங்களுக்குள் ஏகப்பட்ட தடுமாற்றங்கள். நேரடியாகவே ஒப்புக்கொண்டுள்ளதுடன் அதை தைரியமாக எம்மிடம் சொல்வதென்றால்... எங்கள் பார்வையில் அது பிழையான நடவடிக்கை.

"பிள்ளைங்க சாப்பாட்டை நான் சாப்பிடுவது தப்பா...?"

சங்கடமான நேரடிக் கேள்வியினால் நாம் தடுமாறிக்கொண்டோம்.

"எதைச் சொல்வது...?"

"............"

"என்னோட பசிக்காக சாப்பிடுவதாக நினைக்காதீங்க. இங்கே எல்லா மாதிரியான பிள்ளைகளும் இருக்காங்க. எல்லோரிடமிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சேமித்துச் சாப்பிடுவது கேட்பதற்குக் கஸ்டமாகத்தான் இருக்கும்."

"............"

"மீதிச் சாப்பாடுகளை இந்த மாதிரிக் கொண்டு வராத பிள்ளைங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பேன். தினமும் இல்லாவிட்டாலும் எப்பவாவது இப்பியாகும். சில பிள்ளைங்க தாங்களே சந்தோசமாகக் கொடுக்கும் தெரியுமா?"

"............"

"அவர்களின் சாப்பாட்டையே நானும் சாப்பிடுவதை எவ்வளவு திருப்தியாகப் பார்க்கின்றார்கள் என்பதை உங்களை மாதிரியான பேரன்ஸ் வந்து பார்க்க வேண்டும். நம்ம சமூகத்தில் காணப்படும் சாதி வேறுபாடுகள் போகாது. இவர்கள் காலத்திலாவது அது அழிந்தினும். அதற்கான முயற்சிதான் இது. எல்லோரும் சமன் என்ற தத்துவத்தை ஆரம்பப் பாடமாக இப்படிக் கற்பிக்கின்றேன். யார் எதிர்த்து எங்கு இடம் மாற்றினாலும் என் கொள்கை மாறாது நான்.."

ஆசிரியை பேசிக்கொண்டே போனார். எங்கள் பார்வையில் அந்தக் கல்வி அவரை இமயத்திற்கும் அப்பால் உயர்த்திக்கொண்டிருக்க நாங்கள் கூனிக் குறுகிக் கொண்டு அவமானப் பட்டுக் கொண்டோம்.




## அங்கம் 10

தலையில் பொருத்தியிருந்த ஹெட் போனைக் கழற்றினான் கவி. எதிரே வ்யூ பைண்டர் கண்ணாடி பரப்பில்- ஏராளமான மின்சாரப் பூக்களோடு வெளிச்சமாய்- பெங்களூர் நெருங்கிக் கொண்டிருந்தது.

ராத்திரி மணி பத்து.

பெங்களூர் ஏர்போட்டைச் சுற்றிலும் ஆயுதம் தரித்த கர்நாடக பொலிஸ் நெருக்கமாய் வளையம் போட்டிருக்க, கண்ட்ரோல் டவர்க்குள் கமிஷனர் விஷ்ணுவர்தன் தலைமையில் விமான நிலைய அதிகாரிகளும், உயர்தர பொலிஸ் அதிகாரிகளும் மார்புகளிலும் -தோள்பட்டைகளிலும் மின்னும் மெடல்களோடு கவலையாய் உட்கார்ந்திருந்தார்கள்.

"மறுபடியும் எத்தனை மணிக்குப் பேசுவதாக சொல்லியிருக்கிறார்கள்?" கமிஷனர் கண்ட்ரோல் டவர் ஆபிஸரிடம் கேட்டார்.

"பத்தரை மணிக்கு ஸார்."

"அதற்கெல்லாம் நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். பாதுகாப்பு அமைச்சகத் துறையிலிருந்து ஒரு கடுமையான குறிப்பு. எந்தக் காரணத்தைக் கொண்டும் விமானக் கடத்தல் பேர்வழிகளுக்கு நாம் பணிந்து போகக் கூடாது. ஆனால் கடத்தல் பேர்வழிகள் அதி தீவிரமாய் இருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே அநியாயத்துக்கு இரண்டு பேர்களைக் கொன்று ரன்வேயில் வீசியிருக்கிறார்கள். இது தொடரக் கூடாது."

"கடத்தல்காரர்களை அழைத்துப் பேசிப் பார்க்கலாம் ஸார்."

"அவர்கள் வர மறுத்தால்?"

அறையில் மௌனம் நிலவியது.

சில விநாடிகளுக்குப் பின்-

பெங்களூர் பொலிஸ் கமிஷனர் அன்வர்லால் வாயைத் திறந்தார். "தீவிரவாதிகள் நிறைய கோபத்தில் இருக்கிறார்கள். சர்தாரின் தற்கொலை அவர்களை கொதிப்படைய வைத்துள்ளது. பேச்சுவார்த்தைக்கெல்லாம் அவர்கள் மசிய மாட்டார்கள். அவர்கள் ஏதாவது ஒரு மோசமான முடிவுக்கு போகுமுன் நாம் ஏதாவது ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்."

கமிஷனர் விஷ்ணுவர்தன் கவலையாய் மோவாயை தாங்கிக் கொண்டு சொன்னார். "எந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும் சேதம் நம் பக்கம் தான் அதிகமாக இருக்கும்....மிஸ்டர் அன்வர். எப்படியும் அவர்களை பேச்சுவார்த்தைக்கு"

மைக்ரோ ரிஸீவர் கரகரத்தது.

கமிஷனர் வேகமாக எழுந்து போய் ஹெட்போனை மாட்டிக் கொண்டு அதில் ஊசலாடிய மைக்ரோ போனில் பேசினார்.

"கண்ட்ரோல் டவர்..."

"பேசறது யார் கமிஷனரா?" கவி கேட்டான்.

"எஸ்..."

"உடனடியா விமானத்துக்கு ஒரு டாக்டரை அனுப்பிவையுங்க."

"எதுக்கு?"

"ஒரு பிரயாணிக்கு ஹார்ட் அட்டாக் வயசான கேஸாயிருந்தா சாகட்டும்ன்னு விட்டுவிடுவோம்... ஆனா நாப்பது வயசு. ஒரு நல்ல டாக்டரை அனுப்புங்க."

"உடனே அனுப்பறேன்."

"ஒரு டாக்டர், ஒரு நர்ஸ் மட்டுமே வரணும்."

"சரி..."

"சீக்கிரம் அனுப்புங்க. இல்லேன்னா ஆசாமி பரலோகம் போயிடுவான் போலிருக்கு."

"ஃபிளைட்ல டாக்டர் யாரும் இல்லையா."

"இருக்காங்க...ஆனா அவங்களாலே ட்ரீட்மெண்ட் ஏதும் தர முடியாதே. தே ஆர் ஹெல்ப் லெஸ்."

"உடனே டாக்டரை அனுப்பறேன்."

ஹெட்போனைக் கழற்றி மாட்டி விட்டு அதிகாரிகளின் பக்கமாய் திரும்பினார் விஷ்ணுவர்தன்.

"ஒரு பாஸஞ்சர்க்கு ஹார்ட் அட்டாக். டாக்டர் அனுப்பச் சொல்கிறார்கள்."

"குவார்ட்டர்ஸில் ஏர்போர்ட் டாக்டர் பிரதீப்குமார் இருப்பார்." உடனே தகவல் அனுப்பி..." கண்ட்ரோல் டவர ஆபீஸர் சொல்லச் சொல்ல கமிஷனர் விஷ்ணுவர்தன் கையமர்த்தினார்.

"டாக்டர் பிரதீப்குமார்க்கு தகவல் சொல்ல வேண்டாம்."

"ஸார்!"

"எஸ்...அந்த ஹார்ட் அட்டாக் பேஷண்ட்தான்...இந்த நிமிஷம் நமக்கு கிடைத்திருக்கிற துருப்புச் சீட்டு. இதைக் கொஞ்சம் சாமர்த்தியமாக பயன்படுத்தினால் அந்தக் கடத்தல்காரர்களை வீழ்த்த முடியும்."

"ஐ குட் நாட் ஏபிள் டுஃபாலோ யுவர் வேர்ட்ஸ் ஸார்."

"சொல்கிறேன். பொலிஸ் டிபார்ட்மெண்டை சேர்ந்த ஒருவரை அதுவும் துணிச்சலான பேர்வழியை டாக்டராக மாற்றி அனுப்பப் போகிறோம். கூடவே ஒரு பெண் பொலிஸ் நர்ஸாக போகட்டும்."

அன்வர்லால் குறுக்கிட்டார்.

"இது விஷப் பரீட்சை."

"சாமர்த்தியமாக செய்தால் ராஜதந்திரம். டாக்டராக நடிக்க பொருத்தமான துணிச்சலான பொலிஸ் ஆபீஸர் வேண்டும். மின்னல் வேகத்தில் செயற்பட்டு இருக்கின்ற மூன்று எதிரிகளை வீழ்த்தக் கூடிய சாமர்த்தியம் வேண்டும். கர்நாடக பொலிஸில் அப்படி யாராவது துணிச்சலான பொலிஸ் ஆபீஸர் உண்டா?"

"உண்டு..."

"யார்...?"

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெல்லியப்பா... ஒரு முரட்டுத்தனமான இருபது பேர் கொண்ட சாராயம் காய்ச்சுகிற கும்பலை தனியாளாகவே சந்தித்து அடித்து நொறுக்கி ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தவர்."

"குட்... அவர்க்கு தகவல் கொடுத்து உடனே வரவழையுங்கள். கூடவே நர்ஸாக நடிக்க துணிச்சலான பெண் பொலிஸையும் ஏற்பாடு செய்யுங்கள்."

விஷ்ணுவர்தன் சொல்ல அன்வர்லால் எதிரில் உட்கார்ந்திருந்த டி.எஸ்.பி.யை பார்த்தார்.

"டு நீட் ஃபுல்...மிஸ்டர் சத்திய நாராயணன்."

அவர் விறைப்பாய் எழுந்து நின்று சல்யூட் ஒன்றை விநியோகித்துவிட்டு கண்ணாடிக் கதவை நோக்கிப் போனார்.

அவர் போகப் போகவே-

மைக்ரோ ரிஸிவர் மறுபடியும் கரகரத்தது.

விஷ்ணுவர்தன் எழுந்து போய் தொடர்பு கொண்டார்.

"எஸ்..."

"கமிஷனர் ஸார் இருபத்தெட்டு வயதான சந்திரஹரி என்கிற ஒரு இளைஞன் தன்னோட ஹீரோ தனத்தை எங்ககிட்டே காட்ட நினைச்சான். என்னோட சகாக்களில் ஒருத்தனை அவன் தாக்கினப்போ சுட்டு கொன்னுட்டோம். டெட் பாடியை ஃபிளைட்டுக்குள்ளே வெச்சுட்டிருக்க முடியாது. வெளியே தூக்கி எறியப் போறோம். ஒரு ஆம்புலன்ஸை அனுப்பி பொறுக்கிட்டு போயிடறீங்களா?"

"....."

என்ன கமிஷனர் ஸார்... பேச்சையே காணோம்? துக்கம் தொண்டையை அடைக்குதா? நாங்க என்ன பண்ணட்டும், நிலைமை தெரியாமே...விபரம் புரியாமே சீண்ட ஆரம்பிச்சான். ரெண்டு தோட்டாக்களை வேஸ்ட் பண்ண வேண்டியதாக போயிடுச்சு! ஆமா, டாக்டருக்கு ஏற்பாடு பண்ணிட்டீங்களா? நீங்க டாக்டரை அனுப்பறதுக்குள்ளே அந்த ஹார்ட் அட்டாக் பேர்வழி கொட்டாவி விட்டுடுவான் போலிருக்கே."

"ஏற்பாடு பண்ணிட்டிருக்கேன்."

"சீக்கிரமா பண்ணி அனுப்புங்க" சொல்லிவிட்டு கவி தொடர்பை துண்டித்துக் கொள்ள விஷ்ணுவர்தன் சோர்வாய் திரும்பினார். மனசுக்குள் யோசனை ஓடியது. இவ்வளவு கெட்டிக்காரத்தனமாய் இயங்கும் இந்தக் கடத்தல் பேர்வழிகளை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெல்லியப்பாவினால் சமாளிக்க முடியுமா?

கமிஷனரின் அடி வயிற்றில் பயம் சுருண்டது.

விமானப் பணிப்பெண் பயந்து கொண்டே ஒவ்வொரு இருக்கைக்கும் நகர்ந்து ரொட்டித் துண்டுகளை விநியோகித்தாள். வியர்வையிலும், பயத்திலும் அழகு தவறியிருந்தது.

ஜெயராஜ் விமானத்தின் மையத்தில் இருந்து கொண்டு குரல் கொடுத்தான். "நாளைக்கு காலை எட்டு மணி வரைக்கும் சாப்பிட எதுவும் கிடைக்காது. கொடுக்கிறதை வேண்டாம்ன்னு சொல்லாமே சாப்பிடுங்க."

"சைலேந்தர், காக்பிட்டிலும் கவி; ஹார்ட் அட்டாக் பேஷண்ட்டிடமும் இருந்தார்கள். பேஷண்டின் அருகே உட்கார்ந்திருந்த பெண்ணிடம் கவி கேட்டான்.

"உம். புருஷனுக்கு ஹார்ட் அட்டாக் வர்றது இதுதான் முதல் தடவையா?"

"ஆமா..."

"நாப்பது வயசுல ஹார்ட் அட்டாக் வருமா? உம் புருஷன் நடிக்கிறானா?"

"இ...இல்லை அவர்க்கு நிஜமாவே ஹார்ட் அட்டாக்தான்."

"பார்க்கலாம்....கொஞ்ச நேரத்துல டாக்டர் வந்திடுவார். டாக்டர் வந்து பார்த்து உம் புருஷனோட உடம்புக்கு ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டா அந்த செகண்டே உங்க ரெண்டு பேரையும் சுட்டுத் தள்ளுவேன்."

அவன் ஆத்திரமாய் சொன்ன அதே நேரம்- சைலேந்தர் காக்பிட்டிலிருந்து குரல் கொடுத்தான்.

"கவி! ஒரு நிமிஷம் வந்துட்டு போ! கமிஷனர் கண்ட்ரோல் டவரிலிருந்து பேசறார்."

கவி இருக்கைகளுக்கு மத்தியில் சர்வசாதாரணமாய் நடந்து காக்பிட்டுக்கு வந்து தொடர்பு கொண்டான்.

"சொல்லுங்க கமிஷனர் ஸார்."

"டாக்டரும் நர்ஸும் ரெடியா இருக்காங்க. ஹார்ட் பேஷண்ட் ட்ரீட் மெண்டுக்காக அனுப்பட்டுமா?"

"டாக்டரும் நர்ஸும் மட்டும்தான் வரணும். அதிகப்படியா வேறு யாரும் வரக்கூடாது"

"வரமாட்டாங்க."

(குறி தொடரும்)



எழுதுவது

ராஜேஷ்குமார்

# ஆறுமனமே ஆறு!

## வெளிநாட்டு மோகமும் குடும்பச் சீரழிவும்-02

"நான் புஸ்பவதியிடம் கண்ட சுகத்தைவிட 100 மடங்கு சுகத்தைக் கலாவுடன் வாழும்போது காண்கிறேன்" என்றார் தர்மலிங்கம்.

"சரி தர்மலிங்கம்! புஸ்பவதியை நீங்கள் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளையும் பெற்று சந்தோசமாகக் குடும்பம் நடத்தியுள்ளீர்கள். நீங்களும் குடும்பமும் உயிருடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற நோக்கில் இந்தியாவுக்கு அகதியாக வந்தீர்கள். குடும்பத்தின் வறுமையைப் போக்க வெளிநாடு சென்று உழைப்பதற்கு தானே முன்வந்த புஸ்பவதியை உங்கள் சம்மதத்துடன் அனுப்பி வைத்துள்ளீர்கள். புஸ்பவதியும் வீட்டு வேலைக்காரியாகக் கஸ்ரப்பட்டு உழைத்து ஒரு இலட்சம் ரூபா வரை உங்களுக்கும் பிள்ளைகளுக்குமாக அனுப்பியுள்ளார். புஸ்பவதி தன்னையும் தன் ஆசாபாசங்களையும் அடக்கிக் கொண்டுதான் வெளிநாட்டில் உழைத்திருக்கின்றார். வாழ்ந்திருக்கின்றார். உங்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தன்னைத் தியாகம் செய்த புஸ்பவதியை விட, தற்காலிகமாக அல்லது சந்தர்ப்ப சூழ் நிலையால் ஏற்பட்ட கலாவின் தொடர்பு உன்னதமானது என்று நீங்கள் கூறுவதைச் சரி என்று எடுத்துக் கொள்ளலாமா?.

தர்மலிங்கம் அமைதியாக இருந்தார். "சொல்லுங்கள் தர்மலிங்கம்! பேசுங்கள்!!." சற்றுக் குழப்பத்துடன் காணப்பட்ட தர்மலிங்கத்திற்குத் தேநீர் வழங்க ஏற்பாடு செய்தேன். தொடர்ந்து 10 நிமிடங்கள் இடைவேளைக்குப் பின் மீண்டும் அமர்வு தொடர்ந்தது. "சரி தர்மலிங்கம்! கலாவுடைய பிள்ளை ஆண் குழந்தையா? பெண் குழந்தையா?"

"ஆண் குழந்தை" என்றார்.

"எத்தனை வயதிருக்கும்?"

"எட்டு வயது" என்றார்.

"கலாவுடைய புருஷனுக்கு என்ன நடந்தது?"

"அவர் வேறொரு திருமணம் செய்து விட்டாராம்."

"ஏன் கலாவுடைய புருஷன் இவளை விட்டுவிட்டு வேறு திருமணம் முடித்தார் என்று நீங்கள் கலாவைக் கேட்டீர்களா?" என்று கேட்டேன்.

"திருமணமான நாளிலிருந்து கலாவைச் சந்தேகப்பட்டு அடித்துத் துன்புறுத்துவாராம். அதனால்தான் குடும்பம் பிரிந்து அவர் வேறு திருமணம் முடித்தாராம் என்று கலா சொன்னாள்" என்று தர்மலிங்கம் சொன்னார்.

"தர்மலிங்கம்! உங்களுக்கும் புஸ்பவதிக்கும் ஏதாவது பிரச்சனைகள் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்றார்.

"ஒரு ஆண் கைவிடப்பட்ட பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பதை நான் பாராட்டுவது உண்டு. அது நல்ல காரியம். நீங்கள் திருமணமாகாத ஒரு ஆணாக இருந்திருந்தால், கலாவை நீங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ள நானும் உதவி செய்திருப்பேன். ஆனால் அழகிய குடும்பப்பாங்கான உங்கள் மனைவியைத் தவிக்க விட்டு நீங்கள் கலாவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முகாம் வாழ்க்கையில் பல ஆண்கள் உடுப்பு மாற்றுவதைப் போல் பெண்களை மனைவியாக்கிக் கொள்கிறார்கள். முகாம் சூழலும், ஏனோதானோ என்ற வாழ்க்கை முறையும், எப்படியும் வாழலாம் என்ற மனத் துணிவும் இந்தச் சீர்கேட்டைத் தோற்றுவிக்கின்றது. தர்மலிங்கம்! நீங்களும் நான் குறிப்பிட்ட ஆண்களில் ஒருவர் போல நடந்து கெண்டுவிட்டீர்கள் என்று நான் குறிப்பிடுவது சரியா?"

தர்மலிங்கம் குனிந்தபடி தலை யசைத்தார். "அடுத்ததாக தர்மலிங்கம்! நீங்கள் புஸ்பவதியிடம் வாழ்ந்ததைவிட கலாவுடன் வாழ்ந்தது சுகமாக இருந்தது என்று கூறியிருந்தீர்களே? அது பற்றி உங்களுக்குச் சற்று விளக்கம் தர விரும்புகிறேன்" என்றேன்.

"கூறுங்கள்" என்றவர் தலையைக் குனிந்தபடியே இருந்தார்.

"தர்மலிங்கம்! தயவு செய்து எனது முகத்தைப் பார்த்துப் பேசுங்கள். உங்களுக்கு உதவுவதற்காகவே இந்த ஆற்றுப்படுத்தல் மையம் இருக்கின்றது. நான் கூறுவதை மட்டும் நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது ஆற்றுப்படுத்தலின் நோக்கம் அல்ல. நீங்களே உங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண, முடிவெடுக்க என்னால் ஆன உதவிகளையும், கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்க முடியும்" நான் மருத்துவிச்சி போலவே செயற்பட முடியும். பிள்ளையைப் பெறுபவர் தாய்தான். நான் அருகிலிருந்து சில வழிமுறைகளையும் ஆலோசனைகளையும்தான் தர முடியும். நீங்கள் குற்றவாளி போலவும் நான் சட்டத் தரணி போலவும் ஒரு விசாரணை போன்று ஆற்றுப்படுத்தல் அமையக் கூடாது என்பதுதான் உண்மை. தர்மலிங்கம்! நீங்கள் மனம் திறந்து பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன்." தர்மலிங்கத்தின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார். "தர்மலிங்கம்! நான் இப்போது கூறப்போகும் உடல் உறவு பற்றிய கருத்துக்கள் எனது ஆய்வில் கிடைத்தவை. இதைப்பற்றி நீங்கள் உங்கள் கருத்தையும் கூறலாம். உண்மையிலேயே கணவன் மனைவி உறவென்பது மிகப் புனிதமானது: திருப்திகரமானது: சுகமானது: மனதைப் பரவசப் படுத்தக் கூடியது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் திருமணமான ஒரு ஆண் திருமணமாகாத ஒரு பெண்ணுடன் உடலுறவை ஏற்படுத்திக் கொண்டால் இத் தொடர்பு அல்லது உறவு நீடிப்பதில்லை. காரணம் திருமணமான அந்த ஆண் தனது மனைவி, பிள்ளைகளுக்குத் தெரிந்துவிடும் என்ற பயத்தாலும், சிலவேளை தொடர்புள்ள பெண் கர்ப்பமாகிவிட்டால் ஏற்படப்போகும் பிரச்சனை பற்றிய பய உணர்வாலும், அதேபோல அந்தப் பெண்ணும் தான் கர்ப்பமாகிவிட்டால் ஏற்படப்போகும் அவமானத்தாலும், இத் தொடர்பு வெளியில் தெரிய வந்தால் தனது எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதாலும், தொடர்புள்ள ஆண் ஏற்கனவே திருமணமானவர் என்பதால் என்னுடன் தொடர்ந்து வாழ மாட்டார் என்ற சந்தேகம் ஏற்படுவதாலும் ஒட்டுமொத்தமாகப் பய உணர்வுடன் ஏற்படும் இந்த உடல் உறவு திருப்திகரமாக அமையாது, அறைகுறையாக இருப்பதால் சில காலத்தினுள் இவ்வுறவு துண்டிக்கப்பட்டுவிடும்.

அடுத்ததாக, திருமணமான ஒரு பெண் திருமணமாகாத ஒரு ஆணுடன் உடலுறவு ஏற்படுத்திக் கொண்டால்...

தொடர்ந்து வரும்...

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

# 77 ஆயிரம் தொன் பெற்றோலியத்துடன்

# கடலில் மூழ்கிய பிரஸ்டீஜ்



கடந்த வாரம் முதல் சர்வதேச தொடர்பூடகங்கள் அனைத்தினதும் கவனம் ஸ்பெயின் கடற்பரப்பை நோக்கித் திரும்பியது.

வடமேற்கு, ஸ்பெயினில் கலிசியா கடலில் சுமார் 77ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலியத்துடன் மாபெரும் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று கடலுக்குள் மூழ்கியது.

பிறஸ்டீஜ் எண்ணெய் தாங்கிக் கப்பல் லத்வியாவிலிருந்து பிரிட்டனுக்குச் சொந்தமான ஜிப்றோல்டரை நோக்கி ஸ்பெயின் கடற்பரப்பினூடாக பயணம் செய்துகொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. முதலில் கப்பல் அலைகளின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தள்ளாடத் தொடங்கிய போது ஏதாவதொரு கரைக்குக் கப்பலைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை மாலுமிகளுக்கு இருந்தது. ஆனால் பிறஸ்டீஜ் வேகமாக மூழ்கத் தொடங்கியது. கப்பலிலிருந்த 77 ஆயிரம் தொன் பெற்றோலியமும் கடலுக்குள் கலப்பதும் கப்பல் மூழ்குவதும் நிச்சயம் என்பதை மூன்றாவது நாள் சிப்பந்திகள் தெளிவாக அறிந்து கொண்ட பின்னர் தங்களைக் காப்பாற்றுமாறு, ஸ்பானிய கடற்படையினரிடம் வேண்டுகோள் விடுத்தனர். எனினும் இந்தக் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த மோசமான சூறாவளி ஒன்று காரணமாக கப்பல் பணியாளர்களை மீட்பதில் பெரும் சிரமம் எதிர்நோக்கப்பட்டது. எவ்வாறெனினும் சிப்பந்திகள் சகலரும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

பிறஸ்டீஜ் கப்பல் பெருந்தொகை எண்ணெயுடன் இரண்டாக உடைந்து கலிசியா கடலில் மூழ்கியது.


இந்தக் கப்பல் மூழ்கியதால் அதன் சொந்தக்காரர்களை விடவும் கவலை கொண்டிருப்பவர்கள் சூழல் ஆர்வலர்கள்தான். கப்பலிலிருந்து கடலுக்குள் கசிந்த இந்த எண்ணெய் 100 கடல் மைல் பரப்பிலும் சுமார் மூன்றரைக் கிலோமீற்றர் ஆழத்திலும் படிந்திருக்கிறது.

ஐரோப்பியக் கடலில் அதிக அளவு கடல்வாழ் உயிரினங்கள் வசிக்கும் இடங்களில் ஒன்றென இந்த கலிசியா கடல் கருதப்படுகிறது. 100 கடல் மைல் பரப்புக்குள் அகப்படும் அத்தனை ஜீவராசிகளும் தாவரங்களும் எண்ணெய்ப் படிவால் உயிரிழக்கத் தொடங்கியுள்ளன. ஏற்கெனவே இந்தக் கடற்கரையில் பெருந் தொகையான பறவைகளும் மீன் வகைகளும் செத்துக் கரையொதுங்குகின்றன.



இந்த அனர்த்தம் தொடர்பாக இப்போது பல நாடுகள் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக்கொள்கின்றன.

பிரிட்டனுக்குச் சொந்தமான ஜிப்றோல்டருக்கே இந்தக் கப்பல் எண்ணெய் கொண்டு சென்றதனால் அனர்த்தம் தொடர்பான முழுப் பொறுப்பையும் பிரிட்டனே ஏற்கவேண்டுமென்று கண்டனக் குரல் எழுந்திருக்கிறது. எவ்வாறெனினும் பிறஸ்டீஜ் சுமார் 16 வருடம் பழமை வாய்ந்த கப்பல். இதனை யப்பான் தயாரித்துக் கிரேக்கத்திற்கு விற்றது.



இனிமேல் யார் மீது குற்றம் சொன்னாலும் கப்பலும் எண்ணெயும் மட்டுமல்ல, கலிசியாக் கடலும் சேர்ந்து அழிந்துபோயிற்று. பிரான்ஸ் அதிபர் ஜக்சிராக் இத்தகைய பழைய கப்பல்களில் எண்ணெய் கொண்டு செல்வதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். பழைய கப்பல்களை மிதக்கும் குப்பைத் தொட்டிகளென வர்ணித்திருக்கிறார்.

# சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் 'த நேம் ஒ.ஃ.ப் புத்தா'



நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவது பற்றித்தான் எம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அங்கு சர்ச்சைக்குரிய சர்வதேச திரைப்பட விழாவொன்றும் நடந்து வருகிறது.

கீழைத்தேய நாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் பல இங்கு திரையிடப்படுகின்றன. இந்தியாவில் கேரள தொடர்புடன் தமிழ் இயக்குனர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட 'த நேம் ஒ.ஃ.ப் புத்தா' (புத்தரின் பெயரால்) என்ற திரைப்படம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.


இலங்கை அரசாங்கம் இந்தத் திரைப்படத்தைத் தடைசெய்யப் பெரும் முயற்சி எடுத்து வருகிறது. ஏற்கெனவே வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் நோர்வே அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

'த நேம் ஒ.ஃ.ப் புத்தா' இலங்கையின் யுத்தகால நிலைமையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட படம்.

இந்திய இராணுவத்தின் காலத்தில் நடைபெற்ற அட்டூழியங்கள் மற்றும் சிங்களவர்களைக் கொலைகாரர்களாகச் சித்தரிக்கும் விதத்தில் படத்தின் காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அஹிம்சையைப் போதித்த புத்தரின் பெயரைக் கூறிக் கொண்டு அட்டூழியம் புரிந்து வருவதாகக் கூறுவதற்கு இத் திரைப்படம் முயற்சிக்கிறது.

# அரச குடும்பத்தினரை நீதிமன்றம் வரை இழுத்துச் சென்ற நாய்



பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரை ஒரு நாய் நீதிமன்றம் வரை இழுத்துச் சென்றிருக்கிறது.

ரயிலில் டிக்கெட் இல்லாமல் சென்று பிடிபட்டு அபராதம் செலுத்திப் பழக்கப்பட்ட பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு இந்த நாய் சமாச்சாரம் புதிய அனுபவம். இரண்டாவது எலிசபெத் மகாராணியின் புதல்வியான ஆன் தனது நாயுடன் வோக்கிங் சென்ற போது அவரது நாய் வீதியால் சென்ற இருவரைக் கடித்துவிட்டது. இதற்காக வழக்குத் தொடரப்பட்டபோது ஆன் நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு நாயின் எஜமானி என்ற வகையில் 785 டொலர் நட்டஈடு கட்டுமாறு உத்தரவிடப்பட்டார். இந்தத் தொகை நாய் புரிந்த குற்றத்திற்காக மட்டும்தான். பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் 393 டொலர் நட்டஈடும் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது நாயின் கடிக்குள்ளாகியிருப்பது 12 வயது மற்றும் 7 வயதுச் சிறுவர்கள். இந்த வழக்குத் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் இச் சிறுவர்களின் உறவினர்கள் நீதி சரியாகச் செயற்படவில்லையெனக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இந்த நாயை வெளியில் விடுவதால் அது மேலும் பலரைக் கடிக்க வாய்ப்பிருக்கிறது. எனவே அதற்கு வெளியில் நடமாடத் தடை விதிக்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

# தபாலில் வந்த பாம்புகள்

தபால் நிலையத்தில் உங்களுக்கொரு பொதி வந்திருக்கிறது. நேரில் வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்ற அறிவிப்புக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்குச் சமீபமாகவுள்ள தபால் நிலையத்தில் தனக்கான பொதியை வாங்கிப் பிரித்துப் பார்த்தார் அந்த சிங்கப்பூர் இளைஞர். உள்ளே இருந்து பாம்புக் குட்டிகள் பல்லிகள் என்று விஷ ஜந்துக்கள் ஒவ்வொன்றாய் வெளிக்கிளம்பத் தொடங்கின.

அமெரிக்காவிலிருந்து அவருக்கொரு பொதி வந்தது. தபால் நிலையத்திற்கு நேராக வந்து பொதியை வாங்கிக் கொண்டவர் அதே இடத்தில் அதைப் போட்டுவிட்டு அலறியடித்துக் கொண்டு ஓடினார். இதில் 14 குட்டிப் பாம்புகளும் 6 காட்டுப் பல்லிகளும் இருந்தன.

ஏற்கெனவே பாம்புப் பெட்டியைக் கையில் எடுத்துப் பயந்ததால் பிர

மை பிடித்தவன் போல் இருக்கும் அந்த இளைஞனைப் பொலிஸார் வேறு விசாரணை என்று தொளைத் தெடுத்திருக்கிறார்கள். சிங்கப்பூர் சட்டத்தின்படி வன உயிரினங்களை உரிய அனுமதியின்றி வைத்திருப்பதும் வாங்குவதும் குற்றம். இவருக்கு வந்த பாம்புகளினதும் பல்லிகளினதும் பெறுமதி 85000 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர் இவற்றைத் தருவித்ததாக நிரூபிக்கப்பட்டால் பல இலட்சம் ரூபாய் அபராதம் செலுத்த

# சூரியனை விழுங்கும் கருந்துளைகள்

ஒரே நட்சத்திரக் கூட்டத்தில் சூரியன்களை விழுங்கும் இரு பெரும் 'கருந்துளைகள்'.

அண்டவெளியில் உள்ள நட்சத்திரக் கூட்டம் (கேலக்ஸி) ஒன்றில், பத்து லட்சம் சூரியன்களின் ஆற்றல்- அடர்த்தியைக் கொண்ட இரு பெரும் 'கருந்துளைகள்' இருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.


ஒரே நட்சத்திர மண்டலத்தில் அத்தகைய இரு பெரும் கருந்துளைகள் இருப்பது விண்வெளி ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை.

விண்ணில் சுற்றிக்கொண்டு இருக்கும் சந்திரா விண்வெளி ஆய்வு நிலையத்தில் உள்ள தொலைநோக்கியும் ஹபிள் தொலைநோக்கியும் அவற்றைப் படம் பிடித்துப் பூமிக்கு அனுப்பியுள்ளன.

பூமியிலிருந்து 40 கோடி ஒளி ஆண்டுத் தொலைவில் (ஒளியானது ஓராண்டுக்குப் பயணம் செய்யும் தூரம்) இருக்கும் அந்த நட்சத்திரக் கூட்டத்தின் பெயர் என்ஜிசி 6240. அதில்தான் இரு கருந்துளைகளும் உள்ளன. அவை ஒன்றையொன்று சுற்றி வருகின்றன. இன்னும் பல கோடி ஆண்டுகளில் அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரே கருந்துளையாக மாறிவிடும் என்று மசாசூசெட்ஸின் கேம்ப்ரிட்ஜில் உள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் சந்திரா ஆய்வு மையம் கூறுகிறது.

அந்த கேலக்ஸியில் உள்ள இரு கருந்துளைகளின் மையப்புள்ளிகளையும் தனித்தனியே படம் பிடித்து, அவற்றிலிருந்து வெளியாகும் எக்ஸ்-கதிர்களின் விவரங்களையும் தெரிவித்துள்ளது சந்திரா ஆய்வு நிலையம்.

சிறிய நட்சத்திரக் கூட்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதன் மூலமும் இணைவதன் மூலமும் எவ்வாறு பிரமாண்டமான கேலக்ஸிகள் உருவாகின்றன? நட்சத்திரங்கள் எவ்வாறு பிறக்கின்றன? என்பதற்கு இரு கருந்துளைகளைக் கொண்ட "என்ஜிசி-6240" கேலக்ஸி ஓர் எடுத்துக்காட்டு என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



# ஒருபிடி விருந்து

# 200 உயிர்களை பலிகொண்ட அழகிப் போட்டி



வெளியேறும் அழகு!

நைஜீரியாவில் நடக்கவிருந்த உலக அழகுராணிப் போட்டி சுமார் 200 உயிர்களைப் பலிகொண்டு பெரும் கருமாதியில் முடிவடைந்தது.

ஆபிரிக்க நாடான நைஜீரியா இனக் கலவரங்கள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் என்று இரத்தக்களரிகளுக்குப் பெயர்போன நாடு. நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் ஒபுஸான்ஜோ. இவரது மனைவி சுற்றுலாத்துறை செயலாளராக இருக்கிறார். அவருக்கு ஒரு அழகான சிந்தனை தோன்றியது. அதாவது நைஜீரியாவின் தோற்றத்தை உலக நாடுகள் மத்தியில் மாற்றியமைத்து தமது நாட்டின் இனிமையை உலகுக்குக் காட்ட வேண்டுமாயின் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்க்கும் ஏதாவதொரு போட்டியை, மாநாட்டை நடத்தவேண்டுமென்று ஜனாதிபதியின் மனைவி தீர்மானித்தார்.

தங்களது நாட்டின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு இது உதவுமென்று அவர் கருதினார். அதன்படி இவ்வருடத்திற்கான உலக அழகு ராணிப் போட்டியை நைஜீரியா நகரான கதுனாவில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அழகிகள் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அட்டகாசமான ஆடையலங்காரங்களுடன் நைஜீரியா போய் இறங்கினார்கள்.

பொதுவாகவே பல நாடுகள் உலக அழகிப் போட்டியை கடுமையாக விமர்சித்து வருகின்றன. பொதுவாக பெண்களின் சதையைக் காட்டி நடத்தப்படும் வியாபாரம் என்றே வர்ணிக்கின்றனர். முஸ்லிம் நாடான நைஜீரியாவில் இந்த எதிர்ப்பலை இன்னும் அதிகமாகவிருந்தது. இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள் போட்டியை நடத்த விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தன.

நைஜீரியாவில் வெளியாகும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான செய்தித்தாள்கள் பெரும்பாலும் அழகுராணிப் போட்டியை விமர்சித்து வந்த அதேவேளை கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்த பத்திரிகைகள் அழகுராணிப் போட்டிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்தன.

இந் நிலையில் போட்டியாளர்கள் நைஜீரியாவைச் சென்றடைந்து அடுத்த வருடத்திற்கான உலக அழகி தெரிவாவதற்கு ஓரிரு நாட்களே மீதம் இருந்த நிலையில், பத்திரிகையொன்றின் விஷமத்தனமான செய்தியொன்றினால் நாடே கலவர பூமியாக மாறியது. முஹம்மது நபி உயிரோடிருந்தால் இந்த அழகு ராணிப் போட்டியில் பங்குபற்றும் ஒரு அழகியைத் திருமணம் முடிக்க வாய்ப்பிருக்கிறது என்று முஸ்லிம்களின் உணர்வுகளை மோசமாகப் பாதிக்கும் கட்டுரையொன்றை பத்திரிகையொன்று வெளியிட்டது.


கட்டுரையைப் பார்த்தவர்கள் கொதித்தெழுந்து முதற் காரியமாக அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்குத் தீவைத்து அங்கிருந்தவர்களை அடித்துக் கொண்டார்கள். இது சில மணி நேரத்திற்குள்ளேயே இனக் கலவரமாக வெடித்தது. 200க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் பல நூறு பேர் காயமடைந்தனர். இறுதியில் போட்டி இலண்டனுக்கு மாற்றப்பட்டது. 90 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இரவோடு இரவாக இலண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டார்கள்.



கலவரத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலம்

நாட்டின் நற்பெயரை வளர்த்துச் சுற்றுலாத்துறையை விருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்ட அழகிப் போட்டி இறுதியில் ஒரு பொறுப்பற்ற பத்திரிகையாளரின் கருத்தினால் இனக் கலவரமாக முடிவடைந்தது. அந்தச் செய்தியாளரின் கூற்றை முஸ்லிம்கள் மட்டுமன்றி நைஜீரியாவில் வாழும் கிறிஸ்தவர்களும் கூடக் கடுமையான விசனத்துடன் நோக்குகிறார்கள்.

# மீண்டும் ஜேம்ஸ் பொண்ட்



ஜேம்ஸ்பொண்டை சிறுவர்கள் முதல் பெரியோர் வரை எவரும் அவ்வளவு இலகுவில் மறந்துவிட முடியாது.

மொழிகளுக்கு அப்பாற்பட்டு சினிமா இரசிகர்கள் எல்லோருக்கும் அவர் அறிமுகமானவர். வீரதீர சாகசங்களைப் புரிவதில் ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்திற்கு நிகராக இன்னொருவரைச் சினிமாவுலகம் உருவாக்கவில்லை என்று கூறுமளவுக்கு இந்தப் பாத்திரம் பிரபலமானது. ஹொலிவூட்டில் பல தசாப்தகாலமாக ஒன்று, இரண்டு என்று பகுதி பகுதியாக ஜேம்ஸ்பொண்ட் படங்கள் வந்து கலக்கிக் கொண்டிருந்தன. கடந்த சில காலமாக ஜேம்ஸ்பொண்டுக்கு ஓய்வு கிடைத்திருந்தது.

எனினும் புதிதாக மீண்டும் களத்தில் குதித்திருக்கிறார் ஜேம்ஸ்பொண்ட்.

திரைப்படத்தின் பெயர் 'டை எனதர்டே' என்பதாகும். ஜேம்ஸ்பொண்ட் வேடத்தில் ஹொலிவூட் நாயகன் பியர்ஸ் பிராஸ்னன் நடித்திருக்கிறார். நாயகியாக கடந்த வருடம் சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருதைப் பெற்றுக்கொண்ட ஹாலே பெர்ரி தோன்றுகிறார். திரைப்படம் ஹொலிவூட்டில் திரையிடப்பட்டிருக்கிறது. முன்னதாக இலண்டனிலுள்ள றோயல் அல்பேட் அரங்கில் திரைப்படத்தின் பிரத்தியேகக் காட்சிகள் முக்கியஸ்தர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வின்போது வருகை தந்திருந்த ஜேம்ஸ்பொண்ட் பியர்ஸ் பிராஸ்னன் மற்றும் நடிகை பெர்ரி ஆகியோரே இங்கு காணப்படுகின்றனர்.



ஜேம்ஸ் பொண்ட் மனைவியுடன்

# மன்னாதி மன்னன்

132

## அறிவிலி பெற்ற பேரறிவு

இராஜகுமாரன்

தேவேந்திரனால் விக்கிரமாதித்த மாமன்னனுக்கு வழங்கப்பட்ட அரியணையில் உள்ள முப்பத்தியொரு படிக்கட்டுகளிலும் காவலுக்கு நின்றிருந்த பதுமைகள், போஜ மன்னருக்கு விக்கிரமாதித்தனின் வீரதீர பராக்கிரமச் செயல்களைப் பற்றி எடுத்துக் கூறி வந்தன. இறுதியாக இருந்த முப்பத்திரண்டாவது படியில் ஏறுவதற்காக வந்த போஜ மன்னர் பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டார். “இன்றுடன் முப்பத்திரண்டு பதுமைகளும் கூறும் கதைகள் பூர்த்தியாகிவிடும். நாளை நிச்சயமாக இந்த அரியணையின் மீது ஏறி அமர்ந்து ஆட்சி புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துவிடும்'' என்று கருதிய போஜ மன்னர் தங்கு தடையின்றி முப்பத்தியொரு படிகளிலும் ஏறி முடித்து முப்பத்திரண்டாவது படிக்கட்டில் காலடி எடுத்து வைத்தார்.

போஜ மன்னரைத் தடுத்து நிறுத்திய நீதிவாக்கியவல்லிப் பதுமை அம் மன்னரை இழிவுபடுத்திக் கூறிவிட்டு மற்றுமொரு கதையைக் கூறத் தலைப்பட்டது.

விக்கிரமாதித்த மாமன்னரின் அரசவையில் யுக்திசேகரன் என்றொரு அமைச்சர் இருந்தார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. இதனால் மனம் வருந்திய அமைச்சர் பல நோன்புகளை நோற்றுபல பிரார்த்தனைகள் செய்த பின்னர் அவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது.

அமைச்சர் தன் மகனுக்கு கோகுலவரதன் என்று பெயர் சூட்டினான். உரிய வயதில் அவனுக்குக் கல்வி கற்பதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுத்தான். ஆனால் அவனோ கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. மூடனாகவே இருந்தான்.

ஒரு நாள் கோகுலவரதன் அமைச்சர் மகனுக்குரிய ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு கம்பீர நடையுடன் கடைத்தெரு வழியே நடந்து சென்றான். அவனைப் பார்த்த மக்கள் “கல்வியறிவு இல்லாத அமைச்சர் மகன் ஆடம்பர உடையுடன் போகிறானே'' என்று கூறிய வார்த்தைகள் அவனுடைய காதுகளில் வீழ்ந்தன. இதனைக் கேட்ட அமைச்சர் மகன் வெட்கமும் துக்கமும் அடைந்தான். ‘எவ்வாறாவது தான் சகல கல்வி வளங்களையும் பெற்ற பின்னர்தான் இந்த நாடு திரும்புவேன்' என்று எண்ணியவனாக நாட்டை விட்டு வெளியேறினான்.

பல காத தூரம் காட்டு வழியே நடந்து சென்றான். இடையில் கோதாவரி ஆறு குறுக்கிட்டது. அவ்வாற்றில் நீராடினான். காய், கனி, கிழங்குகளை வயிறார உண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்தான். பின்னர் எழுந்து நடந்தான். அங்கே ஒரு கோயிலைக் கண்டான். உள்ளே சென்று பிரார்த்தித்தான். தனக்குப் பூரணமான கல்வியறிவை அருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான்.

பிரகாரத்தை வலம் வரும் போது ஆலயத்தின் பின்புறமாக சலசல என்று பெரிய சத்தத்துடன் ஓடை ஒன்று கொதிக்கும் நீருடன் ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டான். அந்த ஓடைக்கு மேலாகப் பறந்து சென்ற பறவைகள் நீரோடையில் கொதிக்கும் நீரின் வெப்பம் தாங்காமல் நீரில் வீழ்ந்து எரிந்து பொசுங்குவதையும் கண்டான்.

அந்தக் கோயிலில் அன்றிரவுப் பொழுதைக் கழித்தான். அடுத்த நாள் அதிகாலையில் கோயில் பூசை மணிகள் அவன் காதில் விழுந்ததைக் கேட்டு எழுந்து சென்று கருவறையைப் பார்த்தான். அங்கே எட்டுத் தேவ கன்னியர்கள் சிவலிங்கத்திற்கு பூசை முடிப்பதைக் கண்டான். பூசை முடிந்து அவர்கள் சென்ற பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த பிரசாதங்களை உண்டான்.

மூன்றாவது நாளன்று காலைப் பூசை நடந்து கொண்டிருந்ததை அவதானித்த கோகுலவரதன் தேவ கன்னியர்கள் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஓடிச்சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை எடுத்து அருந்தினான்.

தாங்கள் பூசையின் போது வைக்கும் பிரசாதங்கள் மாயமாக மறைந்து போவதைக் கடந்த இரண்டு நாட்களும் அவதானித்த தேவ கன்னியர்கள் அவ்வாறு அவை மறைவதையிட்டு ஆச்சரியமடைந்திருந்தனர். இப்போது அவ்வாறு பிரசாதம் மறைவதற்கான காரணத்தை அறிந்து கொண்டனர்.

திடீரென்று கோகுலவரதன் முன் தோன்றிய தேவ கன்னியர்கள் அவனிடம் “நீ எவ்வாறு இவ்வாலயத்திற்குள் நுழைந்தாய்? இந்த இடம் சாதாரண மனிதர்களுக்கு ஏற்ற இடமல்ல. எனவே நீ உடனடியாக இங்கிருந்து சென்று விடு. இல்லையேல் உன்னுடைய தலை சுக்குநூறாக வெடித்து உயிர் துறந்துவிடுவாய்'' என்று எச்சரித்துவிட்டு, ஆலயத்தின் பின்புறமாகச் சென்றனர். கோகுலவரதன் அவர்களின் பின்னால் ஓடிச் சென்று “தேவ கன்னியர்களே எனக்குக் கல்வியறிவு இல்லை. ஆகவே எனக்குக் கல்வியறிவு கிடைக்க வழி செய்து விட்டுப் போகுமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என்று கேட்டு வணங்கினான்.

தேவ கன்னியர்கள் “கோகுலவரதனுக்குக் கல்வி ஞானம் உண்டாகட்டும்'' என்று வரமளித்துவிட்டு மறைந்தனர். உடனடியாகவே அவன் சகல கல்வி, கலைகளைக் கற்ற பேரறிஞனானான்.

கல்வி ஞானம் பெற்ற கோகுலவரதன் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தை அடைந்தான். தனது மகன் மிகக் குறுகிய காலத்தில் சகல கலைகளையும் கற்றுப் பேரறிஞனாகத் திரும்பி வந்ததையிட்டு அவனுடைய தந்தை பெருமகிழ்ச்சி அடைந்தார். அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று விக்கிரமாதித்த மன்னரிடம் அறிமுகப்படுத்தி அவன் மிகக் குறுகிய காலத்தில் பேரறிஞனாகத் திரும்பியதைக் கூறினார். மன்னரும் கோகுலவரதனிடம் “இந்த அதிசயம் எவ்வாறு நடந்தது'' என்று வினவிய போது தனக்கு நடந்த சம்பவங்களை விரிவாக எடுத்துக் கூறினான்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி-*

நல்லது, நாட்டில நிறைய விஷயம் நடக்குது. ஒஸ்லோ மாநாடு ஒருபக்கம், மாவீரர் உரை மற்றப்பக்கம், நெடுந்தீவுக் குழப்பம் இன்னொருபக்கம், புத்தள மோதல் வேற ஒரு பக்கமா பேப்பர்காரருக்கு வலு பிஸியாக் கிடக்குது. இதில எங்கட பத்திரிகைகள எடுத்துக் கொண்டால் தமிழ் பத்திரிகைகள் ஒரு தினுசிலயும், சிங்களப் பத்திரிகைகள் இன்னொரு தினுசிலயும், ஆங்கிலம் வேற தினுதிசிலயும், அதிலயும் அரசாங்கப் பத்திரிகைகள் ஒரு மாதிரியும் எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் வேற மாதிரியும், பொதுப் பத்திரிகை எண்டு சொல்லிக் கொண்டு தங்களுக்குத் தங்களுக்கு வாய்ப்பான பக்கத்துக்கு வக்காலத்து வாங்கிறவை வெவ்வேறு தினுசிலயும் செய்திகள எழுதித் தள்ளினம். ஒரே செய்தி கிடைத்தாலும் அது ஒன்பது செய்தியாக வர்ற விந்தை இப்படித்தான் நடக்குது.

தச்சமயம் ஒரு நாய் காரில அடிபட்டுக் றோட்டில செத்தால், இவையள் ஒவ்வொருத்தரும் அந்தச் செய்தியை, எப்படிப் போடுவினம் என்று ஒருக்கால் யோசித்துப் பாத்தன். அரசாங்கப் பத்திரிகை எப்படி எழுதும் எண்டால், சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பும் நோக்கத்தோடு வந்த குண்டர் குழு அப்பாவி நாயை, அடித்துக் கொன்றது என்று தலைப்பு போடும்.

எதிர்க்கட்சிப் பத்திரிகையோ அந்த நாய் முன்னாள் எதிர்க்கட்சி அமைச்சர் ஒருவரின் நாய் என்றும், அதை இன்னாள் அமைச்சரின் மகன் குடிபோதையில் ஓட்டி வந்த காரால், மோதிக் கொன்றார் என்றும், இது ஒரு திட்டமிட்ட சதி என்றும் எழுதும்.

ஜே.வீ.பி. போன்ற தீவிரவாத போக்குடைய பத்திரிகை, எப்படி எழுதும்? மார்க்சிச, லெனினிச,

சேகோவார இச தத்துவங்களின் அடிப்படையில், இந்த நாயின் படுகொலை சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஒரு சதி. ஜே.வீ.பியின் பிரச்சாரக் கூட்டத்தை சீர்குலைக்க முற்பட்ட ஒரு கும்பல் போக்குவரத்துத் தடையை ஏற்படுத்துவதற்காக, வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்த நாயை திட்டமிட்ட முறையில் நடுறோட்டில் வைத்து கொலை செய்துள்ளது.

இது சிலியில் அலன்டேயும், செக் நாட்டில் செகோவாராவும் சீ.ஐ.ஏயால் படுகொலை செய்யப்பட்டதற்கு ஒப்பானது. நாட்டு மக்கள் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளான இந்நாட்டு அரசாங்கத்தைத் தூக்கியெறிய புரட்சியில் குதிக்க வேண்டும் என முழங்கும்.

சிகல உறுமய போன்ற பேரினவாத பத்திரிகை எழுதுவது இப்படியிருக்கும். சிங்கள பௌத்த பண்சாலையொன்றை காவல் காத்து வந்த நாயை பயங்கரவாத கும்பல் ஒன்று காரால் மோதி படுகொலை செய்துவிட்டது. ஒரு சிங்கள நாட்டின் ஒரு சிங்கள நாய் சிங்கள ஏரியா நடந்து செல்ல முடியாத அளவுக்கு பயங்கரவாதம் தெருவெல்லாம் பரவி நிற்கிறது. இந்த அரசாங்கம் இங்கே நாய்கள் பலியாகிக் கொண்டிருக்க தாய்லாந்திலும், ஒஸ்லோவிலும் சமாதானம் என்ற பெயரில் நாட்டைக் கூறாக்கி விலை பேசி விற்க பேரம் பேசுகிறது.

சரி எங்கட தமிழ் பத்திரிகைகள் எப்படிச் செய்தி போடும்?

நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வந்த இந்த நாய். இந்த நாய் காவல் காத்ததால், தமிழ் மக்கள் அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு தமது எதிர்ப்புகளை வெளிக்காட்ட முடியாது மௌனித்து இருக்க வேண்டியிருந்தது. இப்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதால், மக்கள் கொந்தளித்து நாயை வெளியேற்ற நடத்திய போராட்டத்தை அடுத்து அது ஓடிச் சென்று காரில் மோதி, தற்கொலை செய்து கொண்டது. இந்தத் தற்கொலைக்கு அப்பாவிக் கார் மீது பழிசுமத்துவதன் மூலம் சமாதானத்தைக் குழப்ப எவரும் முற்படக்கூடாது.

இன்னும் கொஞ்சம் விசுவாசியான யாழ்ப்பாணப் பத்திரிகையின் சீற்றம் இப்படி இருக்கலாம்.

சமத்துவத்தின் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான தியாகப் போராட்டத்திற்கு துரோகம் செய்து விட்ட காரணத்தினால், இந்நாய் இறந்து கிடந்தது. இதன் இறப்புக்கான காரணம் மரணமே தவிர வேறெதுவும் இல்லையென இந்நாயின் கட்சியைச் சேர்ந்த மூத்த பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்தனர். இந்நாய்க்கான இறந்ததினத்தை கொண்டாடுவது துரோகம் என்பதால், பிறந்த தினத்தை லண்டனிலும், கனடாவிலும் சென்று கொண்டாட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

மாற்றுக் கருத்துக் கொண்ட பத்திரிகையொன்று இச் செய்தியை எழுதுமேயானால், இது அப்பட்டமான ஒரு ஜனநாயக உரிமை மீறல். பன்மைத்துவத்தை நிராகரிக்கும் செயல். நாயும் வாழும் உரிமை, நாயும் குரைக்கும் உரிமை, நாயும் வீதியால் போகும் உரிமை எல்லாவற்றையும் நிராகரித்து கார்களுக்கு மட்டுமே இத்தெருக்கள் சொந்தம் என்று பலவந்தமாக வன்முறைமூலம் நிலைநாட்ட முற்படுகின்ற அராஜகம் இதை வன்மையாகக் கண்டித்து ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் நாய் உரிமையையும் பேண அனைத்து மக்களும் குரல் கொடுக்க வேண்டும்.

எல்லாரும் எல்லா மாதிரியும் எழுதட்டும், காதில பூ கந்தசாமி ஒரு தனிரகமாயில்லோ எழுத வேணும். நாய் மோதி கார் மரணம்! ஓ கே யா?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

01.12.2002 தொடங்கி 07.12.2002வரை

**சோதிட மாமணி தில்லை**

## கிரக நிலை

விருட்சிகம் - சூரியன், கேது. இடபம் - இராகு. மிதுனம் - சனி. தனு - புதன், கர்க்கடகம் - வியாழன், துலாம்–வெள்ளி, செவ்வாய்.

*சந்திரன் துலாம், விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) காரியானுகூலம், தொழில் மேன்மை, பணவரவு, பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் சிலர் மாற்றங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்குக் கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக்குறை நீங்கும். முயற்சிகளில் வெற்றி, பணக் கஷ்டம் தீரும். குடும்ப நன்மையுண்டு. உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சி எடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு, அன்னியர் உதவி, கௌரவம் உண்டு. உத்தியோகத்தில் சிறிது மனக் கசப்புக்கள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் திட்டமிட்டுக் கருமமாற்றவும்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) பெரியோர் உதவி, அன்னிய நாட்டுப் பயணம், தேகாரோக்கியக் குறைவு ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புண்டாகும். மாணவர்கள் கல்வியில் மந்த நிலை தோன்றும் விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி, காரிய சித்தி, வெளியிட வாசம், உத்தியோகத்தில் வீண் பிரச்சனைகள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் குழப்பநிலையடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிறப்பு, உறவினர் உதவி, பண வரவு, கௌரவம், அன்னியரால் தொல்லையுண்டு. உத்தியோகத்தில் எதிர்பாராத பிரச்சனைகள் தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) குடும்ப நன்மை, இனசன மகிழ்ச்சி, தொழில் மந்தம், வீண் செலவுண்டாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) துயர் நீங்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், அன்னியரிடம் அவதானம் தேவை. உத்தியோகத்தில் எதிர்பாராத சிக்கல்கள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) முயற்சி பலிதம், பண வரவு, வீண் தொல்லை நீங்கும், காரியானுகூலம் உண்டு. உத்தியோகத்தில் சிலருக்குத் திடீர் உயர்ச்சியுண்டாகும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலை அடைவர். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் கஷ்டம், பண விரயம் மறைமுக எதிர்ப்பு, கௌரவக் குறைவு உண்டு. உத்தியோகத்தில் வீண் தொல்லைகளுக்கு இடமுண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மனக் குறையுண்டு, அன்னியரால் தொல்லை, தேக சுகம் பாதிப்பு, பணக் கஷ்டம் தீரும். உத்தியோகத்தில் ஒரு சிலர் மாற்றங்களைப் பெறுவர். மாணவர்களுக்குக், கல்வியில் உயர்ச்சி நிலை உருவாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் சிறப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பெரியோர் உதவியுண்டு, உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லைகள் சேரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்..
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)


ஸ்ரீ கல்யாணி ஜுவலர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு.
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



## த்ரீ இன் வன்

→ செலூலர் தொலைபேசிகள் இப்பொழுது கையடக்கத்தையும் தாண்டி விரலடக்கம், காலப் போக்கில் நகத்துக்குள் அடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றளவுக்கு முன்னேறிவிட்டது.

அது மட்டுமன்றி ஒரு செல்போன் மூலம் அடையும் பயன்பாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. வெறுமனே ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு உரையாடுவதற்காக மட்டும் என்றிருந்த செல்போன் இப்பொழுது ஒன்றுக்குள் பலதை உள்ளடக்கித் தயாரிக்கப்படுகின்றது.

← இது யப்பானின் கே.டி.டி.ஐ கோப்பரேசன் என்ற எலக்ரோனிக் நிறுவனம் புதிதாக விற்பனைக்கு விட்டிருக்கும் கமெராத் தொலைபேசி. இதனைப் பயன்படுத்திப் புகைப்படங்களை, மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். அத்துடன் இன்டர்நெட்டில் ஒளிபரப்பாகும் இசைநிகழ்ச்சிகளையும் இந்தக் கையடக்கத் தொலைபேசியினூடாக மிகவும் தெளிவாகக் கேட்க முடியும்.

விற்பனைக்கு வந்து சில நாட்களிலேயே டோக்கியோ சந்தையில் இந்த செல்போன் ஏகத்துக்கும் விற்றுத் தீர்ந்துள்ளது.


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

## ராஜ மாளிகை

→ 12ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படும் ஒரு அரச மாளிகை தான் இது. இந்த மாளிகை கம்போடியாவில் இருக்கிறது. 'அங்கோர்' என்ற இடத்தில் காடுகளுக்கு மத்தியில் காணப்படும் இந்தப் புராதன மாளிகையைச் சமீபத்தில் தான் கண்டுபிடித்தார்கள். மிக அழகிய கலைச் சிற்பங்களால் நிறைந்து காணப்படும் இந்த மாளிகை தற்போது ஆராய்ச்சியாளர்களின் கவனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. வெளிப்புறத்தில் சில பகுதிகள் தவிர ஏனைய இடங்கள் இன்னும் சிதைந்து போகாமல் உறுதியாக இருக்கின்றன. பல மன்னர்கள் பரம்பரையாக இம் மாளிகையில் வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.



கம்போடியாவில் இது போன்ற ஏராளமான புராதன கலைச்சிற்பங்கள் காடுகளுக்கு மத்தியில் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

உலகின் மிகப் பெரிய இந்துக் கோவில் கம்போடியாவில் அடர்ந்த வனப் பிரதேசம் ஒன்றுக்கு மத்தியில் இருந்து சில காலங்களுக்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

## தயார்

↓ தன் வசமுள்ள நவீன ஆயுதங்களை மீண்டும் ஒரு தடவை பரீட்சித்துப் பார்க்கத் தயாராகிறது அமெரிக்கா. ஒப்புக்காக ஒரு ஆயுதக் கண்காணிப்பை மேற்கொண்டாலும் கூட, பெரும்பாலும் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என்பதை உணர முடிகிறது.

அமெரிக்கா இராணுவம் அதன் வசம் இருந்த போர் விமானங்களை விசேட செயற் திட்டம் ஒன்றின் கீழ் கடந்த ஆண்டு நவீன மயப்படுத்தியது. குறித்த இலக்குகளை அதிக அளவு உயரப் பறந்த வண்ணமே தாக்கியழிக்கக் கூடிய விமானங்களுக்குப் புதிய செயற்திறனளிக்கப்பட்டது.

வியட்நாம் போரின் போது அமெரிக்கா வான் படை பயன்படுத்திய கனரக ஆயுதங்களைத் தாக்கியழிக்கக் கூடிய ஹெலிகொப்டர்கள் பெருமளவில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஹெலிகள் டாங்கிகள் போன்ற பாரிய போர் இயந்திரங்களைத் தவிடு பொடியாக்கக் கூடிய வெடி மருந்துகளைக் காவிச் செல்லக் கூடியவை.



ஈராக்குடன் போர் மூண்டால் இந்த வகை ஹெலிகளும் தரைப் படைக்கு உதவியாகக் களத்தில் குதிக்கலாம் என நம்பப்படுகிறது.



## அன்புப் பரிசு

↗ ஒரு காலத்தில் குத்துச்சண்டை உலகின் இணையில்லா நாயகனாக இருந்த முஹம்மது அலியைத் தெரியாமல் இருக்க முடியாது. ஆனால் இப்போது முஹம்மது அலியிடம் அந்த வேகமோ, சுறுசுறுப்போ இல்லை.

காலம் அவரையும் நோயாளியாக்கி விட்டிருக்கிறது. பாக்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் முஹம்மது அலி, ஐ.நா. சபையின் விசேட தூதுவர்களில் ஒருவராகப் பணிபுரிகிறார். தான் சம்பாதித்த சொத்துக்களிலிருந்து தனது பெயரில் நிதியம் ஒன்றை அமைத்து ஏழைகளுக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் பெருவாரியாக வழங்கி வருகிறார் முஹம்மது அலி. இவர் தனது உடல் இயலாமைக்கு மத்தியிலும் கடந்த வாரம் ஆப்கானிஸ்தானிற்கு விஜயம் செய்தார்.

அந்த நாட்டில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளுக்குச் சென்று, அங்குள்ள ஏழைச் சிறுமிகளுடன் தனது அன்பைப் பரிமாறிக்கொண்டார் முஹம்மது அலி.

தலைநகர் காபூலிலுள்ள சிறுவர் பாடசாலை ஒன்றிற்குச் சென்ற அவர் அங்குள்ள சிறுமி ஒருவரை முத்தமிட்டுத் தனது அன்பை வெளிப்படுத்துகிறார்.

இந்த விஜயத்தின் போது ஆப்கானிலுள்ள ஏழைப் பள்ளிச் சிறார்களுக்கு இயன்றளவு உதவி வழங்கப் போவதாக முஹம்மது அலி உறுதியளித்தார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



சருண்யா 26.11.2002

மன்னார் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திக்லஸ் - இந்துமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி சருண்யா தனது முதலாவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் 26.11.2002 அன்று கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார்களான கிருஸ்ணா, கணேஸ், சித்திமார்களான வாணி, வேணி, மாலதி பெரியம்மா, மாமிமார், சித்தப்பாமார், சாத்தன் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சித்தி விநாயகர் அருள் பெற்றுச் சிரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:- மாமன் கிருஸ்ணா (லண்டன்)

## 6வது பிறந்தநாள் வாழ்த்து



உவேதன் 07.12.2002

ஜேர்மனியில் வசிக்கும் இதயகுமார் - சுகந்தி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் உவேதன் தனது ஆறாவது பிறந்த நாளை 07.12.2002 அன்று உரும்பிராயில் அவரது அப்பப்பாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தங்கைமார்களான ஒலிவியா ஒவியா, ஒலீவர், கதிரவேலு அப்பப்பா - புவனேஸ்வரி அப்பம்மா, பூட்டி, சித்தப்பாமார்களான உதயச்சந்திரன் (பிரான்ஸ்), சுதேஸ்குமார் (ஜேர்மனி), உதயசங்கர் (லண்டன்), சித்தி றஜிலதா, சயந்தினி (ஜேர்மனி), அப்பப்பாமார், அப்பம்மாமார், அத்தைமார் அனைவரும் பருவபத்தினி அம்மன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பப்பா கதிரவேலு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரளைகமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.